# தமிழக தேர்தலும் மாற்று அரசியலும்

**2016-தமிழக சட்டமன்றத் தேர்தலை ஒட்டி வெளியிடப்பட்டது**

# *தமிழக தேர்தலும் மாற்று அரசியலும்*

*வெளியீடு:* CPML-மக்கள் விடுதலை
எண் 6,70 அடி சாலை, சுப்புப்பிள்ளைத் தோட்டம்,
சென்னை–600017
FB://cpmlpeoplesliberation|9884963101|makkalviduthalai@gmail.com
*நன்கொடை: ரூ 40/-*

## பொருளடக்கம்

I.அரசியல் கட்சிகள்,இயக்கங்கள் பற்றிய மதிப்பீடு 5

II.மாற்று அரசியல் 56

அ) பாப்புலிச அரசியல் (வெகுசன கவர்ச்சிவாத அரசியல்)

ஆ) இடதுசாரி ஜனநாயக மாற்று

# I. அரசியல் கட்சிகள், இயக்கங்கள் பற்றிய மதிப்பீடு

## திமுக

**‘சொன்னதைச் செய்வோம்!**

**செய்வதைச் சொல்வோம்!**

*ஒரு அரசு துறைவாரியாகத் திட்டங்கள் அறிவிப்பதுபோல, தனது தேர்தல் அறிக்கையில் திட்டங்களைப் பட்டியலிட்டிருக்கிறது திமுக. எப்போதும்போல் மாநில சுயாட்சியில் தொடங்கி, தமிழ் ஆட்சி மொழி, இந்தித் திணிப்புக்கு எதிர்ப்பு என வரிசையாகப் பேசும் அந்த அறிக்கையில் மதுவிலக்கு, லோக் ஆயுக்தா போன்ற மக்கள் மத்தியில் அதிகம் பேசப்படும் பிரச்சனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வேளாண்மை, தொழில் வளர்ச்சி, கல்வி, நீர் மேலாண்மை போன்றவற்றிற்கு விரிவான அறிவிப்புகளும் தொழிலாளர், நெசவாளர், ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர்,அரசுத் துறையினர் உள்ளிட்டப் பிரிவினருக்கான நலன் காக்கும் அறிவிப்புகளுமாக விரிகிறது 141 பக்கத் தேர்தல் விளக்கங்களும், புள்ளிவிவரங்களும் கொண்ட திமுகவின் அறிக்கை. ‘சொன்னதைச் செய்வோம்! செய்வதைச் சொல்வோம்! என இறுதியாக முடிகிறது.*

*உண்மையில் திமுக என்ன சொல்கிறது? என்ன செய்திருக்கிறது? கொஞ்சம் அலசிப் பார்ப்போம்.*

**மாநில சுயாட்சி:**

*“சுதந்திர திராவிட நாடு” என்ற கோரிக்கையுடன் தொடங்கும் திமுகவின் முதல் தேர்தல் அறிக்கை (1952), பிரிந்து போகும் உரிமை-சுயநிர்ணய உரிமையுடன் கூடிய திராவிட நாடு கொள்கையைப்*

பேசி (1962), 1967 முதல் ‘இந்தியாவுக்குள் திராவிடம்’ என்னும் இந்திய ஒருமைப்பாட்டு திட்டத்துதிற்குள் கரைந்து போகத் தொடங்கியது. அதுமுதல், மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்னும் முழக்கம் ‘காப்பி-பேஸ்ட்’ ஆக அனைத்து தேர்தல் அறிக்கைகளிலும் முதல் முழக்கமாக இருக்கின்றது. 2016 தேர்தல் அறிக்கையில், நீதிபதிகள் இராசமன்னார், சர்க்காரியா, வெங்கடாசலய்யா, எம்.எம்.பூஞ்சி குழுக்களின் பரிந்துரைகளின்படி சுயாட்சி கொள்கைக்கான சட்டத்திருத்தத்தை மத்திய அரசு செய்ய வேண்டும் என்னும் சட்டவாத முழக்கமாக சுருங்கி நிற்கிறது.

மக்களின் வீரஞ்செறிந்த, இரத்தம் சிந்தும் போராட்டங்களே மக்கள் நலனுக்கான சட்டங்களாக மாறும் என்னும் உண்மை தெரியாத கட்சியல்ல திமுக. அப்படியிருக்க, நீதிபதிகள் தலைமை-யிலான கமிசன் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்தியாவில் கூட்டாட்சியைக் கொண்டு வந்துவிட முடியுமா?

ஆனால், திமுக அப்படித்தான் சொல்கிறது. இந்த எளிய வழி குறித்து,காஷ்மீர் மக்களுக்கும், வட கிழக்கு மக்களுக்கும் யாரும் தெரிவிக்காமல் விட்டுவிட்டார்கள் போல். பாவம் அவர்கள்! பல ஆண்டுகளாக போராடுகிறார்கள். எதேச்சதிகார இந்திய ஒன்றியம் குறித்த உண்மைகளை மறைத்து, இப்படி தெளிவற்ற தன்மையில் மக்கள் முன்வைத்தால்தான், தமிழக உரிமை குறித்த அனைத்துப் பிரச்சனைகளிலும் முழுமையானத் தீர்வு குறித்து பேசக்கூட முடியாத இடத்தில் திமுகவை நிறுத்துகிறது.

தமிழை ஆட்சிமொழியாக்க வேண்டும் என்பது திமுகவின் மொழிக்கொள்கையாக இருக்கின்றது. ஆனால், ஆரம்பப் பள்ளிகளில்கூட தமிழைப் பயிற்றுமொழியாக ஆக்க முடியாத நிலைதான் தமிழகத்தின் உண்மை நிலையாக உள்ளது. இத்தனை ஆண்டுகால திமுக ஆட்சிக்குப் பின்னும் கல்வியில், நீதிமன்றத்தில், வேலை இடங்களில், ஏன் தமிழன் நாக்கில்கூட தமிழ் இல்லாத அவல நிலையில் தான் இருக்கிறோம்.

இருமொழிக் கொள்கையைத் தூக்கிப்பிடித்த திமுக, நடைமுறையில் ஆங்கில ஆதிக்கத்தை அனுமதித்திருக்கிறது. ஒரு மொழிக் கொள்கையாக - தாய்த் தமிழ் மொழிக் கொள்கையாக - தமிழை அனைத்து இடங்களிலும் முன்னிலைப்படுத்தும் தெளிவான மொழிக் கொள்கையை, கொள்கையளவில் கூட இன்னும்

திமுக வந்தடையவில்லை. ஆனால், தமிழ்மொழி செம்மொழி அங்கீகாரம், செம்மொழி ஆராய்ச்சி நிறுவனம், செம்மொழி மாநாடு, செம்மொழிப் பூங்கா போன்ற துணைத்திட்டங்கள் அனைத்து அறிக்கைகளிலும் நிரம்பியிருக்கின்றன. தமிழில் வார்த்தை விளையாட்டு விளையாடும் திமுக தலைவர் கலைஞர் தமிழிடமும் நன்றாகவே விளையாடியிருக்கிறார்.

**ஈழத் தமிழர் நலன் :**

இந்திய அரசிடம் முழு சரணாகதி அடைந்தபிறகு, ஈழத்திற்கு செய்வதற்கு என்ன இருக்கிறது?

தமிழீழமே தீர்வு எனவும், இலங்கையில் நடந்த இனப்படுகொலையை இந்தியா கண்டிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியது திமுக தேர்தல் அறிக்கை (1984). ஆனால், அதற்குப் பின்வந்த தேர்தல் அறிக்கைகளில் ஈழத் தமிழர்களுக்கு அவர்கள் ஏற்கின்ற வகையில் ஒரு தீர்வு காண இந்தியா முயல வேண்டும் என்று மென்று விழுங்குகிறது. இறுதியாக, இப்போது வந்திருக்கும் அறிக்கையில், 2009 போரில் நடைபெற்ற மனித உரிமை மீறல், போர்க்குற்றம், இனப்படுகொலை குற்றங்கள் மீது சுதந்திரமான, நம்பகத்தன்மை வாய்ந்த, பன்னாட்டுப் புலனாய்வு விசாரணையை ஐ.நா மேற்கொள்ள இந்தியா வலியுறுத்தவேண்டுமென கூறுகிறது. மேலும், பொது வாக்கெடுப்பை வலியுறுத்துகிறது.

கொத்துக் கொத்தாக ஈழத்தமிழர்கள் கொல்லப்பட்டபோது கைக்கட்டி வேடிக்கை பார்த்த திமுக, உலகத் தமிழர் மத்தியில் உருவாகியிருக்கும் இக்கோரிக்கைகளை தனது தேர்தல் அறிக்கையில் தற்போது சேர்த்திருப்பது ஈழ ஆதரவுப் போராட்டங்கள் ஏற்படுத்திய நிர்பந்தத்தின் வெளிப்பாடே!

**காவிரி நீர்ப்பங்கீடு:**

1971, 1991 காலகட்டங்களில் காவிரி நீர்ப்பங்கீட்டுப் பிரச்சனைக்குத் தீர்வு காண நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என சட்டமன்றத்தில் தீர்மானம் இயற்றிய திமுக,தான் அங்கம் வகித்த வி.பி.சிங் தலைமையிலான கூட்டணி ஆட்சியின் போது 1990 இல் நடுவர் மன்றம் அமைத்தது.

ஆனால், அதன் தீர்ப்புகளைக் கர்நாடக அரசு மதிக்காத போதும், மத்திய அரசு அதைத் தட்டிக் கேட்காத போதும், தீர்ப்பை சட்டப்படி நிறைவேற்ற காவிரி நீர் மேலாண்மை வாரியத்தையும்,

ஒழுங்காற்றுக் குழுவையும் அமைக்க வேண்டுமென தேர்தல் கோரிக்கையாக மட்டுமே விடுத்தது வருகிறது.

**கச்சத்தீவு:**

கச்சத்தீவும், சேது சமுத்திரத் திட்டமும் வழக்கம் போல் முழக்கங்களாக வந்து போகின்றன. சேது சமுத்திரத் திட்டம் சூழலியலுக்கும், பொருளாதாரத்திற்கும் கேடானது என்னும் கருத்துகள் அரசியல் தளங்களில் பேசப்பட்டாலும், அதை திமுக கண்டுகொண்டதாகவே தெரியவில்லை.

**மதுவிலக்கு:**

இந்த தேர்தல் அறிக்கையின் சிறப்பம்சங்களில் ஒன்று மதுவிலக்கு. கள்ளச் சாராய சாம்ராஜ்ஜியத்திற்கு முடிவு கட்டி, நல்ல சாராயம்(!) மூலமாக அரசுக்கு 200 கோடி வருவாய் ஈட்டியதாக பெருமைப்பட்டுக்கொள்ளும் திமுகவின் பழைய தேர்தல் அறிக்கைகள் (1984,1996), இப்போது மதுவிலக்கை அறிவிக்கின்றது. டாஸ்மாக் கலைக்கப்பட்டு கிராம உற்பத்தி பொருட்களை விற்பனை செய்யும் ஒருங்கிணைந்த ஒழுங்குமுறை விற்பனை வாரியமாக மாற்றப்படும் என்றும், அதில் டாஸ்மாக் ஊழியர்கள் பணியமர்த்தப்படுவார்கள் என்றும் அறிவிக்கின்றது.

ஆயிரக்கணக்கான கோடிகளை கொள்ளையடித்துக் கொண்டிருக்கும் திமுகவினர் சிலரின் சாராய ஆலைகள் மதுவிலக்கு வந்தவுடன் மூடப்படும் என திமுக தலைமை அறிவித்திருக்கிறது. இப்பவே மூடினால் என்ன பிரச்சனை என மக்கள் மத்தியில் எழும் கேள்விக்குத்தான் அவர்களிடம் பதிலில்லை.

**வேளாண்மை:**

- வேளாண் இடுபொருட்களின் விலை அதிகமாக இருப்பது, விளைபொருள் அரசின் நேரடிக் கொள்முதல் இல்லாமல் விலை குறைவாகப் போவது, நீர்ப்பாசன வசதிகள் இல்லாமல் போவதால் உண்டாகும் நட்டங்களும், அழுத்தும் கடன் சுமையும் விவசாயிகளை தற்கொலை நோக்கித் தள்ளுகின்றன.
- திமுக தேர்தல் அறிக்கை, விவசாயிகளுக்கான தனி நிதிநிலை அறிக்கை ஆண்டுதோறும் வரும் என்று அறிவிக்கிறது.
- சிறு, குறு விவசாயிகளின் பயிர்க்கடன் தள்ளுபடி, நெல் கரும்பு ஆதார விலை அதிகரிப்பு, இலவச மின்சாரம்,

மின்மோட்டார், சொட்டுநீர்ப் பாசனம், விதை நெல்லுக்கு மானியம், இடுபொருள், விவசாய இயந்திரங்களுக்கு மானியம், விவசாய வேலைவாய்ப்புகளுக்கு கூட்டுறவு அமைப்புகள் போன்ற மானிய அறிவிப்புகள் நிறைய உள்ளன.

இவை நடைமுறைக்கு வந்தால், விவசாயிகள் கழுத்தைச் சுற்றியுள்ள கடன் பிடி தளரும். விவசாயிகள் மூச்சுவிட கொஞ்சம் இடம் கிடைக்கும். ஆனால், விவசாயிகளை விட முதலாளிகள் மகிழ்ச்சியடைவதற்கான திட்டங்களே இவை. எப்படி?

- இடுபொருள், விவசாய இயந்திரங்கள் தனியாரிடம் இருக்கின்றன. அரசு கொடுக்கும் மானியம் நேரடியாக தனியாரிடம் செல்லும். மின்சார மானியம் அரசுக்கு மின்சாரம் விற்கும் தனியார் மின் நிலையங்களுக்கு இனிப்பான திட்டம்.
- வேளாண்விளைபொருட்களை சந்தைப்படுத்துவதில், உள்நாட்டு உற்பத்திப் பொருள் வெளிநாட்டுப் பொருட்களோடு போட்டியிட வேண்டியிருக்கிறது. இந்திய அரசின் தாராளமயக் கொள்கையோடு போட்டிபோட இதற்கான தனிச் சட்டம் இயற்றுமா திமுக? சேமிப்புக் கிடங்குகள் அமைப்பது பற்றி பல தேர்தல் அறிக்கைகளில் வாக்குறுதிகளாக இருந்தாலும், இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. இந்த ஆண்டு அறிக்கையிலும் இருக்கின்றது.
- தற்காலிக நெருக்கடிகளுக்குத் தீர்வு காண திமுக முயற்சித்தாலும், நிரந்தர பிரச்சனைகளைக் காற்றில் விட்டுவிட்டது. 2006 தேர்தலில் நிலமற்றவர்களுக்கு 2 ஏக்கர் நிலம் என்று சொன்ன திமுக, அதோடு அதைக் கைவிட்டுவிட்டது. லட்சகணக்கான ஏக்கர் நிலங்கள் கோவில் மடங்களிலும், பெரும் பண்ணையார்களிடமும் கிடக்கின்றன. நிலத்தில் பாடுபடும் விவசாயிகள் குத்தகைதாரர்களாகவும், நிலமற்ற விசாயக் கூலிகளாகவுமே இறுதிவரை நீடிக்கும் அவலநிலை தொடர்கிறது.
- பாஜக அரசு தொடர்ச்சியாக முயற்சித்துவரும் நிலம் கையகப்படுத்தும் சட்டத்தை எதிர்ப்போம் என்று திமுக சொல்கிறது. ஆனால், தமிழகத்தில் நிலவள வங்கி என அதே தொழில் கொள்கையை கடைப்பிடிக்கும் திமுக மத்தியில் மட்டும் எப்படி எதிர்க்க முடியும்.

- *உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று அறைகூவி ஆட்சியைப் பிடித்த திமுக, பஞ்சமி நில மீட்பு (1996), 5 சென்ட் இலவச வீட்டு மனை (1989) உள்ளிட்டத் திட்டங்களைத் தனது தேர்தல் அறிக்கைகளிலாவது கொண்டு வந்தது. பஞ்சமி நில மீட்பைத் தவிர, 2016 அறிக்கையில் மற்றதனைத்தையும் கைவிட்டுவிட்டது.*
- *இந்த அடிப்படை மாற்றத்தை முன்வைக்காமல், கடன் கொடுப்பதும், மானியம் வழங்குவதும் வேரை வெட்டாமல், கிளையை வெட்டுகிற வேலையாகும். நோய்முதலைத் தீர்க்காமல் நோய்க்கு அதிகம் செலவழிப்பது போன்றது. மானியம், கடன் தள்ளுபடி போன்ற மாயைகளைக் கடைசிவரை காட்டிக்கொண்டே இருக்கும் கட்டாயத்திற்கு திமுக தள்ளப்படும். அடிப்படை மாற்றங்களைப் பற்றி என்றுமே பேசாத திமுக, இதுபற்றி மட்டும் பேசும் என எதிர்பார்ப்பது வீண்.*
- *பயிர் பாதுகாப்பு, பட்டுப்புழு, தென்னை, பனைவெல்லம், முந்திரி உள்ளிட்டவற்றை ஊக்குவிப்பது, இயற்கை வேளாண்மைக்குத் தனிப்பிரிவு, அய்யா நம்மாழ்வார் பெயரில் ஆய்வு மையம், தேசிய உயிரி தொழில்நுட்பக்கழகம் உள்ளிட்ட திட்டங்களை விவசாய இயக்கங்களிடம் இருந்து எடுத்துப் பெயரளவில் தனது அறிக்கையில் சேர்த்துள்ளது.*
- *தீர்க்கப்படாத விவசாய நெருக்கடிகளும், தொழிற்துறையில் குவிக்கப்படும் மூலதனமும் விவசாயத் தொழிலாளர்களை நகரங்களை நோக்கி இழுக்கின்றன. இதை ஆற்றுப்படுத்த 100 நாள் வேலைத் திட்டம் 150 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது. பிழைப்புத்தேடி வெளி மாநிலங்களுக்குச் சென்ற விவசாயிகள் ஊர் திரும்ப நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னது 2006 தேர்தல் அறிக்கை. ஆனால், 2016 அறிக்கையில் இது இடம்பெறவில்லை. வளர்ந்து வரும் விவசாய நெருக்கடிகளும், அதைத் தீர்ப்பதற்கான சுய பொருளாதாரத் திட்டமும் திமுகவிடம் இல்லாததால் 2016 அறிக்கையில் அந்த வாக்குறுதி கைவிடப்பட்டதாக எடுத்துக் கொள்ளலாம்.*
- *மீத்தேன் மற்றும் ஷேல்வாயு எடுக்கும் திட்டங்கள் தடுத்து நிறுத்தப்படும் என்கிறது. அத்திட்டத்தை தமிழகத்தில்*

அனுமதித்ததே திமுகதான். அதற்காக ஸ்டாலின் மக்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டார். ஆனால் அதே திட்டம் ஷேல்வாயு எடுப்பு என வேறு வடிவில் வரும்போது ஏதும் செய்யாத ஏமாற்று சக்திகளாகத்தான் இருக்கிறார்கள்.

**நீர் மேலாண்மை:**

தமிழகத்தில் தூர்வாரப்படவேண்டிய ஏரி, குளங்கள், கண்மாய்கள் குறித்து மிக விரிவானப் பட்டியலை முன்வைக்கிறது.

1967-ல் ஆட்சியைப் பிடித்தபோது, திமுக முன்வைத்த நான்கு வாக்குறுதிகள்:

1. நீர் நிலைகள் செம்மைப்படுத்தப்படும்
2. வறட்சி நிலை தடுக்கப்படும்
3. கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம்
4. ஆற்றுப்பாசனம் அற்ற இடங்களில் ஆழ்கிணறு

-இவற்றின் விரிவுபடுத்தப்பட்ட விளக்கங்களே 2016 அறிக்கையில் கொடுக்கப்பட்டிருப்பவை. திமுக இதை சொல்லியிருக்கிறது. ஆனால், கடந்த ஐம்பதாண்டுகால ஆட்சியில் எவ்வளவு செய்திருக்கிறது? தமிழகத்தில் உள்ள நீர்நிலைகளின் இன்றைய நிலைமையே நேரடி பதில்.

- பாசன ஆதாரங்களை விவசாயிகளிடமும், தரிசு நில மேம்பாடு, சமூகக் காடுகள் மேலாண்மை போன்றவற்றை மக்களிடமும் ஒப்படைக்கப் போவதாக 2001, 2006 தேர்தல் அறிக்கைகளில் முன்வைக்கப்பட்ட திட்டம் இந்த அறிக்கையில் இடம்பெறவில்லை.
- நதிநீர் இணைப்புத் திட்டம், கடல் நீரைக் குடிநீராக மாற்றுகிற திட்டங்களின் பொருளாதார-சூழலியல் சவால்கள் குறித்து துறைசார்ந்த வல்லுநர்கள் முன்வைக்கும் ஆலோசனைகளைத் திமுக கணக்கில் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. 2016 அறிக்கையிலும் இந்த முன்வைப்புகள் தொடர்கிறது.
- சென்னை, கடலூர் வெள்ளப் பெருக்கைக் கவனத்தில் கொண்டு பெருநகர வெள்ளத்தடுப்பு மேலாண்மைக் குழு, அரிவாள் மூக்கு வடிகால் திட்டம் போன்றவை வழக்கம்போல பெயருக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.
- 2006 தேர்தல் அறிக்கையில் முல்லைப் பெரியாறு அணையில் நீர்மட்டம் 152 அடியாக உயர்த்துவோம் என

*அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு அறிக்கையில் அது 142 அடியாகக் குறைந்து விட்டது!*

- *ஆற்று நீர் வளத்தை முழுமையாகச் சுரண்டும் மணல் கொள்ளையைத் தடுப்பதற்கான எந்தத் திட்டமும் இல்லை. இன்னும் ஆபத்தாக, ஆற்றுமணல், தாதுமணல், கிரானைட் விறபனையை சமூகக் கூட்டுறவுத் (கூட்டுக் கொள்ளை) தொழிலாக மாற்றுகிறது திமுக.*
- *வேலை தேடும் இளைஞர்கள் 2 லட்சம் பேரிடம் நபருக்கு 50,000 வசூல் செய்து, இதில் முதலீடு செய்யப்போவதாக அறிவிக்கிறது. பாதுகாக்க வேண்டிய இயற்கை வளங்களைக் கொள்ளையடிக்கும் உரிமையை தனிநபரிடம் இருந்து பறித்து சமூகமயப்படுத்துகிறது. அதில் நடக்கப்போகும் ஊழல், முறைகேடுகள் அனைத்தும் சமூகமயமாகப் போகிறது!*

**தொழிற்துறை**

*உற்பத்தி சாதனங்கள் தேசியமயமாக்கப்பட வேண்டும் (1957), முதலாளித்துவ பிடியைப் போக்கி, சோசலிசத்துக்கு எதிராக உள்ள சட்டங்களை உடைப்போம் என பேசிய திமுக (1967), இன்று முதலாளீட்டாளர்களின் உற்ற நண்பனாக உறுதியேற்கும் நிலைக்கு வந்தடைந்திருக்கிறது (2016). அந்நிய மூலதனத்தைக் கட்டுப்படுத்த வேண்டும், வெளிநாட்டுக் கடன்களைக் குறைக்க வேண்டும் என அன்று பேசிய திமுக, அதற்கு நேரெதிரான ஆட்சி வரலாற்றையே கொண்டிருக்கிறது.*

*ஆசியப் பொதுச் சந்தையை உருவாக்க வேண்டும் (ஐரோப்பிய யூனியன் போல), கூட்டுச்சேரா நடுநிலைமைக் கொள்கை என்பது அனைத்து நாடுகளிடமும் கடன் வாங்கும் தந்திர முயற்சி (1967) என இந்திய பொருளாதார உறவுகளை விமர்சித்த திமுகவிடம், இன்றைய நிலையில் அப்படி எந்த தனிப்பட்ட கொள்கையும் இல்லை. இந்தியாவின் பொருளாதாரக் கொள்கையே எங்களின் பொருளாதாரக் கொள்கை, இந்தியாவின் அயலுறவுக் கொள்கையே எங்களின் அயலுறவுக் கொள்கை என இன்றுவரை கடைப்பிடித்தும் வருகிறது.*

*எனவே, புதியப் பொருளாதாரக் கொள்கை மீதான விமர்சனக் கருத்துகளோ, மாற்றுத் திட்டங்களோ 2016 தேர்தல் அறிக்கையில் இல்லை.*

*புதிய பொருளாதாரக் கொள்கையால் சமூகத்தில் ஒரு பிரிவினர் மட்டும் பலன் பெறுகின்றனர். மற்ற சமூகப் பிரிவினர் அனைவரும் பாதிக்கப்படுகின்றனர். எனவே, நாங்கள், புதிய பொருளாதாரக் கொள்கையிலிருந்து மக்களைக் காக்க பாதுகாப்பு வலை* (safety net) *அமைத்து துணைநிற்போம் - இது 1996 தேர்தல் அறிக்கையில் திமுக சொன்னது.*

*இதன் பொருள், புதிய பொருளாதாரக் கொள்கைக்கு எந்த சேதாரமும் இல்லாமல் நடைமுறைப்படுத்திக் கொண்டே, அதனால் பயன்பெறும் ஒரு சிறு பணக்கார சுரண்டல் கூட்டத்திற்கு சேவையாற்றிக் கொண்டே, பாதிக்கப்படும் கோடிக்கணக்கான தமிழக மக்களை ஆற்றுப்படுத்தும் கடனுதவி, மானியம், இலவசத் திட்டங்களைச் செய்வது. இதை திமுக வெளியில் சொல்லவில்லை, ஆனால் திறம்படச் செய்துவருகிறது.*

*வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கேற்ப தொழில்-நிதி-நிர்வாகத் துறைகள் மாற்றப்படும், ஏழைகளுக்கு அவர்களுக்குத் தேவைப்படும் காலம்வரை உதவி செய்வோம் எனவும் திமுகவின் பழைய தேர்தல் அறிக்கைகள் பேசுகின்றன. அதாவது ஏழ்மையைப் போக்கவோ, வறுமையை ஒழிக்கவோ திட்டங்கள் இருக்காது. பிச்சைக்காரர்களுக்கு பிச்சைப் போடுவது போல், மக்களுக்கு நல உதவித் திட்டங்கள் செய்யப்படும் என்பதே இதன் பொருள். இதன் உட்பொருள் என்னவென்றால், சுரண்டிக் கொழுக்கும் மிகச் சிறிய கூட்டத்திற்கு சேவை செய்ய மிகப் பெருந்திரளான உழைக்கும் மக்கள் ஏழைகளாகவே இருக்க வைக்கப்படுவார்கள் என்பதே.*

*அரசின் பெரும் மூலதனத்துடனும், தனியாரின் சிறு மூலதனத்துடனும் தொடங்கப்படும் தொழில்களில், இலாபம் மட்டும் மொத்தமாக தனியாருக்கு என்னும் தனியார்-பொது கூட்டுத் துறை திட்டத்தை* (PPP - Public-Private Partnership) *தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தியது திமுக (1971). இந்த ஆண்டு திமுக அறிக்கை, மின்சார உற்பத்தியில்* PPP*-ஐ கோருகிறது.*

*பன்னாட்டு பெருமுதலாளிகளுக்கு 5 ஆண்டு வரி விடுமுறை* (Tax Holiday) *அறிவிக்கின்றது திமுக. அதாவது, 5 அண்டுகளுக்கு வரி கட்டத் தேவையில்லையாம். 2000க்குப் பின், மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு* (SITP -Software & Information Technology Parks) *10 ஆண்டு வரி விலக்கு கொடுக்கப்பட்டு,*

*மிகச் சமீபத்தில் தான் வரி விதிப்பதற்கான வரையறைகள் வகுக்கப்பட்டு வருகின்றன. மீண்டும் வரி விலக்கு கோரிய பன்னாட்டு பெருமுதலாளிகளுக்கு மகிழ்ச்சியான செய்தியை திமுக அறிவித்திருக்கிறது. இது மக்களுக்கு நன்மை பயக்குமா? ஒரு எடுத்துக்காட்டைப் பார்ப்போம்.*

*2006-2011 திமுக ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்டது நோக்கியா தொழிற்சாலைத் திட்டம். நோக்கியாவின் முதலீடு 650 கோடி. தமிழக அரசின் முதலீடு குறைந்த விலைக்கு நிலம், இலவச மின்சாரம், இலவச தண்ணீர், வரி விலக்கு, இலவச சாலை என 1000 கோடிக்கும் மேல். நோக்கியா ஈட்டிய வருவாய் 1.5 இலட்சம் கோடிக்கும் மேலிருக்கும். வரிச்சலுகை காலம் முடிந்த பின்னர், நோக்கியா வரிகளை முறையாகக் கட்டவில்லை. பல தள்ளுபடிகளுக்குப் பிறகு தமிழக அரசுக்கு 2500 கோடி ரூபாய் வரிகட்ட வேண்டி இருந்தது. இந்திய அரசுக்கு 21,500 கோடி ரூபாய். ஆனால், மைக்ரோசாப்ட் என்னும் மற்றொரு பன்னாட்டு நிறுவனத்திற்கு பல ஆயிரம் கோடிகள் இலாபத்திற்கு விற்றுவிட்டு, வரி கட்டாமல் வெளியேறியது நோக்கியா. தமிழகத்தைவிட வியட்நாமில் குறைந்த கூலிக்கு வேலைக்கு ஆட்கள் கிடைப்பதால் சென்னை நோக்கியா தொழிற்சாலையை மூடியது மைக்ரோசாப்ட். அதனால் அதற்கு உதிரிப்பாகங்கள் வழங்கும் வேறு சில தொழிற்சாலைகளும் மூடப்பட்டன. 50 ஆயிரம் தொழிலாளர்கள் நடுத்தெருவில் நிறுத்தப்பட்டனர்.*

*இதைத் தடுத்து நிறுத்த திமுக ஒன்றுமே செய்யவில்லை. மொத்த முதலீடுகளையும் செய்து, உள்நாட்டு, வெளிநாட்டு தேவைகளுக்கு ஏற்ப உற்பத்தி, நிர்வாகம் செய்யும் திறன் தமிழக அரசுக்கு இல்லையா? பிறகு ஏன், தமிழக மக்களின் வாழ்வையும் வளங்களையும் பன்னாட்டு முதலாளிகளின் இலாபத்துக்காக அடமானம் வைக்கின்றது திமுக? மோடி அரசின் ‘மேக் இன் இந்தியா’ திட்டமும் ‘நோக்கியா’ போன்றதுதான். அதிமுக, காங்கிரஸ் போன்ற எந்த முதலாளித்துவ கட்சியும் இதற்கு விதி-விலக்கல்ல.*

*இந்தத் தேர்தல் அறிக்கையும் திமுக அதே பாதையில் பயணிக்கப்போவதை உறுதிபடுத்துகிறது. இன்னும் எத்தனை இலட்சம் கோடிகள் மக்கள் பணம் கொள்ளையடிக்கப்பட இருக்கின்றதோ?*

சாயக்கழிவுகள் பிரச்சனைக்கு அடிவேராக உள்ள கட்டுப்பாடற்ற அராஜக முதளாளித்துவ உற்பத்தி முறையைக் கவனத்தில் கொள்ளாமல், சுத்திகரிக்கும் அறிவியல் திட்டங்கள் பற்றிப் பேசுகிறது திமுக.

தனியார் துறையைப் பொதுத்துறைக்கு மாற்ற வேண்டும் என்று 1962 தேர்தல் அறிக்கையில் முன்வைத்த திமுக, இன்று மத்திய அரசு கொடுக்கும் ராயல்டியை இரு மடங்காக்க வேண்டும் என்பதோடு நிற்கிறது. ஆனால், ஆட்சிக் காலங்களில் பொதுத்துறையைத் தனியாருக்குத் தாரை வார்க்கும் புதிய பொருளாதாரக் கொள்கையின் கூட்டாளியாகவே செயல்பட்டு வந்திருக்கிறது.

“உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்” என்றார் வள்ளுவர். ஆனால், உழவையும் தொழிலையும் கார்ப்பரேட்களுக்கு வசமாக்குவோம் என்கிறது திமுக. அதனால் பாதிக்கப்படும், ஒட்டாண்டிகளாகும் மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் என்னும் பெயரில் பிச்சை போடுவோம் என்கிறது.

முதலாளித்துவம் தழைக்க தொழிலாளி வர்க்கம் உயிரோடிருக்க வேண்டும். தொழிலாளர்கள் உயிரோடு இருக்க கடன், மானியம், நலவாரியம் உள்ளிட்ட நலத் திட்டங்கள் இந்த அறிக்கையிலும் உண்டு.

10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரமாக்கும் திட்டம் ஒன்றை திமுக அறிவித்திருக்கிறது. ஒப்பந்த தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கு பதிலாக விரிவுபடுத்தும் தொழிலாளர் விரோத சட்டங்களை ஆளும் பாஜக அரசு கொண்டு வர முயலும் இந்தக் காலக்கட்டத்தில், திமுகவின் இந்த அறிவிப்பு கண்துடைப்பே.

அடுத்த நாள் பிழைப்புக்கு உத்தரவாதம் இல்லாத அமைப்புசாரா தொழிலாளர்கள் சமூகக் கொந்தளிப்பு அடையாமல் முதலாளித்துவத்துக்கு சேவைசெய்ய, சிறப்பாக நலவாரியங்கள் அமைத்த வரலாற்றுப் பெருமை திமுகவுக்கு உண்டு.

மற்றைய தொழிற்பிரிவினரும், திமுகவின் அடித்தளமாக விளங்கும் அரசுத் துறை ஊழியர்கள், நெசவாளர்கள், ஆசிரியர்கள், நடுத்தர மக்கள், வணிகர்களுக்கான கடனுதவி, மானியம், வீட்டுவசதி, குடும்பநல நிதி, ஓய்வூதியம் உள்ளிட்ட திட்டங்கள் இந்த ஆண்டு அறிக்கையிலும் உண்டு. குடியிருப்புடன் கூடிய விசைத்தறிக்கு 100 யூனிட் இலவச மின்சாரம், தூய்மைப்

பணியாளருக்கு ஓவர்டைம் சம்பளம், பதவி உயர்வு, ஓய்வூதியம், மாற்றுத்திறனாளிகளுக்கான இட ஒதுக்கீடு உள்ளிட்ட திட்டங்கள் கவனம் பெறுபவை.

மீனவர்கள் சந்திக்கும் முக்கியப் பிரச்சனைகளான இலங்கை கடற்படைத் தாக்குதல், தென் தமிழகத்தில் நடக்கும் தாதுமணல் கொள்ளை ஆகியவை பற்றி போதிய முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. மீனவர்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ள ஆயுதம் வழங்க வேண்டும் என்னும் மீனவர்களின் நெடுநாளைய கோரிக்கை பற்றிய கருத்து எதுவும் இல்லை. கடற்கரை மணலை ஒட்டச் சுரண்டி மக்களுக்குப் புற்றுநோயைப் இனாமாகக் கொடுக்கும் தாதுமணல் கொள்ளை பற்றி ஒரு வார்த்தை கூட இல்லை. நலத்திட்டங்கள்தான் வரிசைகட்டி நிற்கின்றன. தேசிய மீனவர் ஆணையம், பழங்குடியினப் பட்டியலில் மீனவர்களை சேர்ப்பது, 5 இலட்சம் வீடுகள் என புதிய திட்டங்களை மட்டுமே அறிவித்துள்ளன.

பெண்களுக்கு திருமண உதவி, மகப்பேறு உதவித் திட்டங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. உள்ளாட்சியில் 50% இடஒதுக்கீடு அறிவித்துள்ளன.ஆனால், நாடாளுமன்ற, சட்டமன்றத்தில் 33% இடஒதுக்கீடு பல்லாண்டுகளாக கிடப்பில் கிடப்பது நினைவில் வந்துபோகிறது.

தமிழகத்தில் சிறப்பாக செயல்பட்டுவரும் பொது மருத்துவம், பொது விநியோகத் திட்டங்களை மேலும் விரிவுபடுத்தவேண்டியத் தேவை இருக்கிறது. சில நலத்திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருந்தாலும், அதை நடைமுறைக்கு கொண்டு செல்வதற்கான நிதி ஒதுக்கீடு குறைவாகவே உள்ளது. குறிப்பாக இலவச மருத்துவம் என மற்ற கட்சிகள் அறிவித்துள்ள வேளையில், அதுபற்றிய அறிவிப்பு திமுகவிடம் இல்லை.

இரண்டு மாதத்திற்கு ஒருமுறை மின்கட்டணம் வசூலிப்பதற்கு பதிலாக மாதமொருமுறை வசூலிக்கும் திட்டம் நடைமுறை படுத்தப்படும் என சொல்லியிருந்தாலும் தொடர்கிற மின்வெட்டு குறித்தும் மின்சாரக் கொள்முதல் ஊழல் குறித்தும் ஏதும் பேசவில்லை!

**கல்வி :**

கல்வி இலவசம் என்று மற்ற கட்சிகள் அறிவித்துள்ள வேளையில், இலவசக் கல்வி குறித்து அவ்வப்போது

வலியுறுத்திவரும் திமுக என்ன சொல்கிறது? கல்விக் கடனை மட்டும் தள்ளுபடி செய்கிறது. சமச்சீர் கல்வி, தாய்மொழியில் பயிற்று மொழி, மொழி சிறுபான்மையினருக்கான தாய்மொழிக் கல்வி உள்ளிட்ட நல்ல அம்சங்களை அறிமுகப்படுத்த கடந்த காலங்களில் திமுக முயற்சித்துள்ளது. சில நடைமுறைக்கும் வந்துள்ளன. பல பிரச்சனைகளுக்கு அடிப்படைக் காரணமான கல்வி தனியார்மயம் குறித்து திமுக வாய் திறக்கவில்லை. கல்வியை, மாநிலப் பட்டியலில் இருந்து பொதுப் பட்டியலுக்கு எடுத்துச் செல்லப்பட்டதை மாற்றி மீண்டும் கல்வியை மாநிலப் பட்டியலுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என திமுக சொல்வது தேர்தல் நேர கூற்றாக மட்டுமே உள்ளது.

தாய்மொழிக் கல்விக்கு மாறாக,அரசுப் பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்படுகிற ஆங்கில வழிக் கல்வியைக் களைவது குறித்தானத் திட்டம் திமுகவிடம் இல்லை. பிரிட்டிஷ் கவுன்சிலுடன் இணைந்து ஆங்கிலப் பயிற்சி கொடுக்கப் போவதாக அறிவித்துள்ளது.

உயர்க்கல்வி நிலையங்கள், குறிப்பாக மருத்துவக்கல்வி நிலையங்களில் அகில இந்திய ஒதுக்கீடு கூடாது, சமஸ்கிருதத் திணிப்பு எதிர்ப்பு, முதல் தலைமுறை மாணவர்களுக்கு இலவசக் கல்வி போன்றவற்றை குறிப்பிட்டுள்ளது. மாணவர்களுக்கு லேப்டாப்-உடன் 10 நிமி இணையவசதி இலவசம் என்பது தனியார் தொலைத் தொடர்பு நிறுவனங்களின் காட்டில் அடைமழை பெய்யப்போகிற திட்டம்.

கிராமப்புற இடஒதுக்கீடு, பொறியியல் கல்லூரிகளுக்கு வழங்கப்படுகிற அங்கீகாரத்தை முறைப்படுத்தல் போன்ற முந்தைய தேர்தல் அறிக்கையில் இருந்த திட்டங்கள் இதில் இல்லை.

திராவிட மக்களின் வரலாறு, மொழி, பண்பாடு விசயங்களில் ஆழமான ஆய்வை மேற்கொள்ள திராவிடப் பல்கலைக்கழகம் நிறுவப்படும் என்று திமுக தனது ஆரம்பகால தேர்தல் அறிக்கைகளில் தொடர்ச்சியாக சொல்லி வந்துள்ளது. ஆனால், அதை நடைமுறைப்படுத்தவில்லை.

**வேலைவாய்ப்பு :**

முதலாளித்துவத்தைப் போற்றி வளர்க்கும் திட்டத்தை முன்வைத்து, வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு தீர்வு

காணமுடியாது. வேலையில்லாத இளைஞர்களை ஆற்றுப்படுத்த தொழிற்பயிற்சி, கணிணிப் பயிற்சி, கடன் போன்ற சில திட்டங்கள் வழக்கம் போல உள்ளன.

தமிழகத்தில் உணர்வுப்பூர்வமான பிரச்சனையாக உருவெடுத்துள்ள சாதிமறுப்பு திருமண ஜோடிகளுக்கான சமூகப் பொருளாதார பாதுகாப்பு குறித்து அறிக்கையில் இல்லை. சாதி ஆணவப் படுகொலைகள் குறித்து தொடர்ந்து வாய் மூடி மௌனம் காத்து வருகிறது திமுக.

லோக் ஆயுக்தா பற்றி அறிக்கையில் இருக்கிறது. பொது ஊழியர் குற்ற ஒழிப்பு சட்டம் (1973), முதலமைச்சர் உட்பட அனைவரின் மீதானப் புகார்களை விசாரிக்க தனி அமைப்பு (ஓம்பட்ஸ்மென்) உள்ளிட்ட திட்டங்கள் திமுக அந்நாட்களிலேயே முன்மொழிந்ததுதான். ஆனால், ஊழலின் முக்கிய அடையாளமாக திமுக மாறியிருப்பதுதான் அதன் இன்றைய அடையாளம்.

மொத்தத்தில் பார்த்தால், தமிழகத்தின் பொருளாதார - அரசியல் - பண்பாட்டுத் தளங்களில், பொருளாதாரத்தை பெருமுதலாளித்துவத்துக்கு தாரை வார்த்து விட்டு, அதனால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து மக்களை மடைமாற்ற நலத்திட்ட அரசாங்கம் நடத்திவிட்டு, பண்பாட்டுத் தளத்தில் தான் இன்னும் பெரியார் வழிவந்த கட்சியாக இருப்பதுபோல் ஒரு தோற்றப்பாட்டை உருவாக்கியிருப்பது தான் திமுக அதன் வரலாறு தோறும் செய்துவருவதாகும்.

மொத்தத்தில் திமுகவிடம் மயக்கும் புனுகு எதிர்பார்க்கலாம். குணப்படுத்தும் மருந்து எதிர்பார்க்க முடியாது. கற்பனைக்கு கானல் எதிர்பாக்கலாம். தாகத்துக்கு தண்ணீர் எதிர்ப்பார்க்கக்கூடாது.

## அ.தி.மு.க

### மக்களால் நான் மக்களுக்காகவே நான்?

எங்கள் கட்சிக்கு வாக்களியுங்கள்,நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பாலாறும் தேனாறும் ஒடும் எனவும்,ஆளும் அரசுக்கு தாங்கள்தான் மாற்று என்றும் தமிழ்நாட்டை ஆண்ட, ஆளத்துடிக்கும் கட்சிகள் தங்களைத் தாங்களே மாற்று என சொல்லிக்கொண்டு ஒட்டுகேட்கின்ற குரலை பார்க்கிறோம். இந்த இறைச்சலுக்கு மத்தியிலும் அகங்காரமாய் ஒரு குரல் கேட்கிறது. அது பாசிச ஜெயலலிதாவின் குரல்.

“மக்களுக்காகவே நான் தவ வாழ்வு வாழ்கிறேன் ,மக்களால் நான் மக்களுக்காகவே நான்” என்ற முழக்கங்களை மேடைகளில் முழங்கிவருகிறார். நான்காவது முறையாக முதலமைச்சர் நாற்காலியை கைப்பற்றி தனது ஆட்சி அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ளத் துடிக்கும் ஜெயலலிதா, கடந்த ஐந்து ஆண்டுகளாகத்தான் மக்களுக்கு செய்த கொடுமைகளையே சாதனைகளாக பட்டி-யிலிட்டு எவ்வித குற்றஉணர்ச்சியும் இல்லாமல் ஒய்யாரமாக வானில் பறந்து பறந்து யாசகம் கேட்கிறார்.

பெரியார், அண்ணா சிந்தனைகளின் அடிப்படையில் தமிழகத்தின் பெரும்பகுதியான அரசியல், சமூக இயக்கம் வடிவமைக்கப்பட்டு வளர்ந்தது. அந்த சிந்தனைகளின் மையமாக, பிராமணிய வர்ணதர்ம எதிர்ப்பு - பகுத்தறிவு,பெரும்பான்மை மக்களை இழிவுபடுத்துதலை எதிர்த்த - சுயமரியாதை, சாதி ஆதிக்க எதிர்ப்பு, சாதி மறுப்பு. தலித்,பிற்பட்டடோர் முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்ட - சமூக நீதி,பொதுக் கல்வி,பொதுவுடமை சார்பான - சமூக முற்போக்குஇவ்வாறான பலவும் அந்த சிந்தனைகளின் மையமாக அமைந்தன.

பெரியார், அண்ணா சிந்தனைகளைக் கைவிட்டது மட்டுமின்றி குழிதோண்டி புதைத்தலை திராவிடக் கட்சிகள் தொடர்ந்து செய்து வருகின்றன. இதில் அ.தி.மு.க. பகிரங்கமாக முன்னணியில் நிற்கிறது. மற்ற கட்சிகள் மறைமுகமாக செய்துவருகின்றன.

தி.மு.க எதிர்ப்பு, அதிலும் குறிப்பாக கருணாநிதி எதிர்ப்பு எனும் ஒற்றை அஜெண்டாவுடன் தோன்றிய அ.தி.மு.க, பெரியார், அண்ணா சிந்தனைகளின் முதன்மையான, மையமான பிராமணிய வர்ணதர்ம எதிர்ப்பைக் கைவிட்டது மட்டுமின்றி அதனை பகிரங்கமாக கடைபிடிக்கவும் துவங்கியது. எம்,ஜி.ஆர். காலத்தில் மூகாம்பிகை வழிபாட்டுடன் மறைமுகமாக துவங்கிய இந்த கடவுள் வழிபாடு ஜெயலலிதா காலத்தில் பகிரங்கமாக தொடர்கிறது. வர்ண கடவுளரின் பெரும் கோயில்களை அரசு செலவில் பராமரித்தல், அன்னதானம், முதலமைச்சர், அமைச்சர்கள் பகிரங்கமாக வழிப்படுதல் என தொடர்கிறது.

இதன் உச்சமாக ஜெயலலிதா கர்நாடகா நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டபோது, அ.தி.மு.கவின் மொத்த நிறுவனமும் ஈடுபடுத்தப்பட்டு ஒவ்வொரு கோயிலிலும் யாகம் வளர்த்தல்,

*தேர் இழுத்தல், பாலாபிஷேகம், மொட்டையடித்தல், மண்சோறு திண்ணுதல் என அரசியல் இயக்கம் போலவே நடத்தப்பட்டன.*

*கடந்த 5 ஆண்டுகளில் அவர் செய்த சாதனைகளை அலசினால் அன்டார்டிக்கா பனிமலையில் இருந்தால்கூட கத்திரி வெயில் அனல் தகிக்கும்! அவர் சாதனைகளாக முன்வைப்பதையும்,ஆட்சியின் இறுதி மூன்று ஆண்டுகளின் முடங்கிய நிர்வாகத்தையும்,மழை வெள்ளப் பாதிப்பின்போது மேற்கொண்ட ஸ்டிக்கர் கலாச்சாரம்,கட்சியின் தனிநபர் அதிகார மையம்,சொத்துக் குவிப்பு,இதர ஊழல்கள் என அனைத்தையும் ஒருபுறம் வைத்துவிடுவோம்.இது குறித்து மேலதிகமாக விவாதிக்கப்பட்டதால்,அதிமுகவின் 2011-2016 ஆட்சி-யின்போது மேற்கொண்ட முக்கிய அறிவிப்பான விஷன் 2023 செயல் திட்டத்தின் ஊடாக அவரது ஆட்சிகாலகட்டத்தின் சமூகப் பொருளாதார சீர்கேடுகளை மட்டுமே குறிப்பாக பார்ப்போம்.*

*விஷன் 2023 செயல் திட்டத்தைக் கடந்த 2013 ஆம் ஆண்டில் ஜெயலலிதா அறிவித்தார். இத்திட்டத்தை நிறைவேற்ற 15 லட்சம் கோடி ருபாய் செலவாகும் எனவும், இத்திட்டத்தால்,தமிழ்நாடு வளர்ந்த உலகநாடுகளுக்கு இனையாக உயருமென்று கூறியும் இத்திட்டத்தைத் தொடங்கினார்.தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல நான் 2023 வரை தமிழ்நாட்டைத் தொடர்ச்சியாக ஆள வேண்டும் என்பதை சொல்லாமல் சொல்லி,தான் அதிகாரத்தில் தொடரவேண்டும் என்ற அவரது ஆசையை விஷன் 2023 திட்டத்தின் மூலம் வெளிப்படுத்துகிறார்.*

**விஷன் 2023:**

*விஷன் 2023 திட்டம் மேலோட்டமாகப் பார்த்தால் அது மக்கள் வாழ்வை வளமாக்கும் திட்டம்போல் தெரியும். ஆனால் சற்று ஆழமாக இத்திட்டத்தை உற்று நோக்கினால்,சாமனிய மக்களை சுரண்டுகிற, முதலாளிகளின் கனவுத் திட்டமே இது என்பது தெளிவாகும். விஷன் 2023 திட்டத்தின் மூலம் நாம் அடையும் பயன்களாக இத்திட்டத்தில் குறிப்பிடப்படுகிற மூன்று அம்சங்களைச் சுருக்கமாகப் பார்ப்போம்.*

1. *தனிநபர் வருமானம் 6 மடங்காக உயரும். அதாவது 2010-11 இல் ரூ 78,473 ஆக இருந்த தனிநபர் வருமானம், 2023 இல் ரூ 4,50,000 ஆக உயரும்.*
2. *தமிழ்நாட்டின் சமுக வளர்ச்சிக் குறியீடும், உலக நாடுகளுக்கு இணையாக வளரும்.*

*3. உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதி மேம்படும்.*

**தனிநபர் வருமானம்:**

*பன்னாட்டு நிறுவனங்களின், பெருநிறுவனங்களின் முதலீடுகள் அதிகமாக குவிந்த 2006 களில் தனிநபர் வருமானத்தின் வளர்ச்சி 20%ஆக இருந்தது. இப்போழுது அது படிப்படியாக குறைந்து 2013-14,14.2% ஆக இருக்கிறது. இந்த சுழலில்தான் தனி நபர் வருமானம் ஆறு மடங்கு உயரும் என்று அதிமுக அரசு கூறுகிறது. இன்றைய சூழலில் தொழில்துறை வளர்ச்சி, பெரும் நெருக்கடியை எதிர்கொண்டு வருகிறது.பன்நாட்டு நிறுவனங்களான நோக்கியா, பாக்ஸ்கான் போன்ற ஆலைகள் மூடப்பட்டும் பல்லாயிரம் தொழிலாளர்கள் வேலையிலிருந்து துரத்தப்பட்டும்,சிறுகுறு தொழில் நசுக்கப்பட்டு,தங்களது தொழிலை விட்டு வெளியேறி வருகின்றனர்.*

*விவசாயம் பொய்த்துபோன காரணத்தால், நகரங்களை நோக்கி விவசாயிகள் தினக்கூலிகளாக விரட்டப்படுகின்றனர். போதாக்குறைக்கு விவசாயப் பொருளாதாரத்திற்கு ஊறு விளைவிக்கக்கூடிய பல நாசகரத் திட்டங்களை கொண்டு வந்தும், தனியார் கார்ப்பரேட் முதலாளிக்கு விவசாய நிலங்களை தாரைவார்த்தும் தமிழக விவசாயத்தை இவ்வரசு அழித்துக்கொண்டிருகிறது.40% மக்கள் விவசாயத்தை நம்பி வாழும் தமிழ்நாட்டில், விவசாயம் செய்தால் சவக்குழிக்குத்தான் போவோம் என்ற நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.இந்த சூழலில் தனிநபர் வளர்ச்சி 6 மடங்காக உயர்த்தப்படும் என்று மக்களை ஏமாற்றுகிறது இந்த அரசு.*

**சமுக வளர்ச்சியும் மனித வளர்ச்சியும்:**

*இந்தியாவில் உள்ள தேசிய இனங்களில் தமிழ்நாடு வளர்ச்சியடைந்த தேசியஇனமாகும்.எல்லோரும் வெள்ளை காலனியாதிக்கத்திற்கு எதிராக அரசியல் விடுதலைக்காகப் போராடிய வேளையில் தமிழ்நாட்டில் சமுக விடுதலைக்கான போராட்டங்கள் நடந்துவந்தன. தேசியம் குறித்தும், மொழி குறித்தும், சாதி ஒழிப்பு, பெண் விடுதலை குறித்தும் மற்ற மாநிலங்களை காட்டிலும் தமிழ்நாடு ஒப்பீட்டளவில் முன்னேறிய மாநிலமாகவே இருந்து வருகிறது. இன்றோ சாதிய ஆணவக்கொலைகள் நடக்கும் மாநிலங்களில் முதல் இடத்தை நோக்கித் தமிழகம் சென்று கொன்டிருக்கிறது.*

கடந்த ஆண்டில் மட்டும் 100க்கும் மேற்பட்ட சாதிய ஆணவப் படுகொலைகள் தமிழகத்தில் நடந்திருக்கின்றன. இதில் 60% மேல் தலித்துகள் என்பது குறிப்பிடத்தக்கது. சாதிய மோதல்கள், சாதிய முரண்பாடுகள் அதிகரித்துக்கொண்டேபோவது குறித்து கள்ள மௌனம் சாதிக்கிறது ஜெயா அரசு.

தமிழ்நாட்டில் கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 9000க்கு மேற்பட்ட கொலைகளும் 8500 கொள்ளைகளும் நடந்துள்ளன என்று ஒரு ஆய்வு குறிப்பிட்டுள்ளது.

**மனித வளர்ச்சி:**

சமூகத்தை அரசியலற்றதாகவும், சாதிப் பெருமை பேசுபவர்களாகவும், நுகர்வு கலாச்சரம் பெருகி சுயநலமிக்கவர்களாகவும் ஆக்கியதுதான் உலகமய, தாராளமய காலகட்டத்திற்குப் பிந்தைய சமூகத்தின் மனித வளர்ச்சியாக உள்ளது. பேச்சு சுதந்திரம் சிறிதும் அற்ற ஆட்சியில்தான் இவர்கள் மனிதவள மேம்பாடு குறித்துப் பேசுகிறார்கள்.

**மக்களுக்கான உள்கட்டமைப்பு**

தனியார் நிறுவனங்கள், பன்னாட்டு முதலாளிகள் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய அடிப்படையான உயர்தர சாலை வசதிகள், விமானநிலையங்கள், துறைமுகங்கள், குறித்த நேரத்தில் செல்ல மேம்பாலங்கள், தடையில்லா மின்சாரம், நீர், நிலம்போன்ற கட்டுமான வசதிகளைச் செய்து கொடுப்பது அவர்களுக்கான தேவையாக உள்ளது. தொழில் தொடங்க வரி சலுகைகள், குறைந்த வட்டிக்கடன், குறைந்த விலைக்கு நிலம், மானியம், ஒற்றைச் சாளர முறையில் அனுமதி போன்ற வசதிகளைச் செய்து கொடுத்தால்தான் அவர்கள் முதலீடு செய்ய முன்வருவார்கள் என சொல்லப்படுகிறது.

கடந்த காலங்களில் இது போன்ற எண்ணற்ற சலுகைகளை அனுபவித்த நிறுவனங்களான நோக்கியா, பாக்ஸ்க்கான் போன்றவைத் தங்களின் வேலை முடிந்த பிற்பாடு நிறுவனத்தை மூடிச்சென்ற வரலாறும் உண்டு. பல்லாயிரம் பேருக்கு வேலை கிடைக்கும் என்று சொல்லி மக்களிடம் இருந்து விவசாய நிலங்களை கைப்பற்றி தனியார் நிறுவனங்களுக்கு தாரைவார்க்கிறது இவ்வரசு. மக்களின் வாழ்வாதரத்தை பறித்து, நடுத் தெருவில் நிற்கவைத்தப்பின்னும் மக்களுக்கானக் கட்டமைப்பு என்று மக்களை வேறு வகையில் ஏமாற்றுகிறது இந்த ஜெயா அரசு.

*பொதுத்துறை, தனியார் நிறுவனக் கூட்டு(றிறிறி) என்று ஒரு சரத்து இருக்கிறது.லாபகரமாக இயங்கும் அரசு நிறுவனங்களின் பங்குகளை தனியர் நிறுவனதிற்கு விற்றும்,மெல்ல மெல்ல ஒட்டுமொத்தமாக தனியார் மயமாக்குவதும் சூறையாடுகிற முதலாளிகளுக்கு நாட்டை அடமானம் வைப்பதும் தான் இத்திட்டத்தின் உள்நோக்கமாக உள்ளது.*

**விவசாயம்:**

*சோழ நாடு சோறுடைத்த நாடு என்று பார் போற்றிய தமிழ்நாட்டில் இன்று கர்நாடக பொன்னி சாப்பிட்டுக் கொண்டு இருகிறான் தமிழன். நஞ்சில்லா மரபு விவசாயமுறை பசுமை புரட்சியால் தனது பரம்பரிய விவசாயத்தை இழந்து, செயற்கை விவசாயம் செய்து மண்ணை மலடாக்கியது தான் மிச்சம். விவசாயத்தைப் பறித்து நிலத்தையும் பறித்து அவனைப் பிச்சை எடுக்கும் நிலைக்கு தள்ளியது தமிழகத்தை ஆண்ட ஆளும் அரசுகளும்தான்.*

*கெயில், மீத்தேன் போன்ற நாசகரத் திட்டங்களும்,நீர்நிலைகளை அழித்தும் செயற்கையாக ஒரு நெருக்கடியை ஏற்படுத்தி மக்களிடமிருந்து விவசாயத்தை பறித்து பெருமுதலாளிகளிடம் தாரை வார்க்கும் பெரும் முயற்சிதான் இந்த விசன் 2023 செயல்திட்டம். இதைத்தான் வெளிப்படையாக அறிவிக்கிறது அதிமுக அரசு. ஜிடிபியில் 2010-2011 இல் 12.6 ஆக இருந்த விவசாயத்தின் பங்கு 7% விதமாக 2022-2023 இல் குறைக்கபடும் என்று கூறியுள்ளது அதிமுக அரசு. அதற்கான சான்றுகளை கிழேப் பார்க்கவும். அரசுத் திட்டமிட்டு விவசாயத்தை அழிக்கிறது என்பது இங்கு உறுதியாகிறது.*

| துறைகள் | *2004-2005* | *2010-2015* | *2022-2023* | ஆண்டு வளர்ச்சி வீதம் % |
|---|---|---|---|---|
| விவசாயம் | *12%* | *12.60%* | *7%* | *5%* |
| தொழில் துறை உற்பத்தி | *20%* | *16.60%* | *22%* | *13.80%* |
| தொழில் துறை உற்பத்தி அல்லாதவை | *11%* | *9.20%* | *8%* | *9.50%* |

| | | | | |
|---|---|---|---|---|
| சேவைத்துறை | 57% | 61.60% | 63% | 11.1% |
| மொத்தம் | 100% | 100% | 100% | 11% |

கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 2423 விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டதாக தமிழக அரசு தனது இனையதளத்தில் குறிப்பிட்டுள்ளது.9000 கோடி கடன் வாங்கிய விஜய் மல்லையாக்கள் பூரண கும்ப முதல் மரியாதையுடன் அரசின் விருந்தாளியாக வெளிநாட்டுக்கு வழி அனுப்பப்டுகிற அதே சமயம் சில ஆயிரம் கடன்கள் வாங்கிய விவசாயி, நெருக்கடி தாங்க முடியாமல் தற்கொலைக்குத் தள்ளப்படுகிறான்.

டிராக்ட்டர் வாங்கியக் கடனில் கடைசித் தவனை கட்ட முடியாத விவசாயியை ஒரு தனியார்வங்கியிடம் கையூட்டு வாங்கிய காவல்துறை குண்டர்களால் ஒட ஒட அடித்து துன்புறுத்தப்பட்டு கைது செய்யும் சம்பவமும் ஒரேநேரத்தில் நடப்பதில் இருந்து ஜெயாவின் விவசாய விரோத போக்குஅம்பலப்படுகிறது. இதையெல்லாம் பார்க்கும் பொழுது ஒரு பழைய தமிழ் பாடல் நினைவுக்கு வருகிறது “காடு விளைஞ்சு என்ன மச்சான் கையும் காலும் தானே மிச்சம்” இன்றைக்கு அந்த கவிஞன் இருந்தால் இப்படித் தான் பாடியிருப்பான்“விவசாயம் செஞ்சு என்னா மச்சான் உசிரு போனதுதான் மிச்சம்ன்னு பாடியிருப்பன்”

இந்தக் கனவுத் திட்டத்தில் ஜீஜீஜீ என்ற முன்றெழுத்து அடிக்கடி காண நேரிடும். அதாவது அரசு மற்றும் தனியார் நிறுவனத்தின் கூட்டில் விவசாயமாம். லாபம் தரும் நடவடிக்கை எல்லாம் தனியார் கையில். நட்டமாக வாய்ப்பு உள்ளவைகள் எல்லாம் அரசு கையில். விதைகள்,விவசாய கருவிகள்,உரங்கள்,விற்பனை போன்றவை எல்லாம் தனியார் இடத்திலும், விவசாயம் மட்டும் அரசு செய்யும். இதில் என்ன பெருமை.

**கல்வி:**

இலவசக் கல்வி வழங்கப் போவதாக திட்டம் விவரிக்கிறது:

பள்ளிகளை மூடுவதை லட்சியமாக கொண்டுள்ள புரட்சித் தலைவி, தனியார் நிறுவனங்களைக் கொள்ளை லாபத்திற்கு திறந்துவிடும் தெய்வத் தாய்,கல்வியை இலவசம் என்று அறி-வித்திருப்பது முதலில் ஆச்சர்யமளித்தாலும் உண்மை வேறாக உள்ளது.அதாவது தனியார் கல்வி நிறுவனங்களில் படிக்கின்ற மாணவர்களின் கல்விச் செலவை அரசே ஏற்குமாம்.

*2008-2009ம் ஆண்டில் 43.67 லட்சம் படித்த ஆரம்ப பள்ளியில் 2012-2013ம் ஆண்டு வெறும் 36.5 லட்சமாக குறைந்து இருந்தது. இப்படியான முறைகள் அமுலுக்கு வந்தால் மேலும் எழை எளிய மக்களுக்கு எட்டாக்கனியாக மாறிவிடும் கல்வி.*

**மருத்துவம்:**

*கல்வியைப் போல மருத்துவத் துறையும் முதலாளிகளுக்கு ஒரு அட்சயப் பாத்திரம்தான். ஒவ்வொரு மனிதனும் கல்விக்கு செலவு செய்யாமல் கூட இருக்கலாம் ஆனால் மருத்துவத்துக்கு வருமானத்தில் ஒரு பகுதி ஒதுக்கியே ஆகவேண்டும் என்ற நிலை உள்ளது.*

*உணவே மருந்தாக இருந்த சமூகம் இன்று மருந்தை உணவாக உண்கிற அளவுக்கு வந்தடைந்துள்ளதுதான் இந்த அரசுகள் செய்த புரட்சி. காற்று, நிலம், நீர்,உணவு எல்லாம் விசமாகிப் போனதின் விளைவு, நாம் இன்று மருந்துக்களின் உதவி இல்லாமல் வாழமுடியாது என்ற நிலைக்கு காரணம்.*

*பெரும்பாலான மருத்துகளைப் பன்னாட்டு நிறுவனங்கள்தான் தயாரிக்கின்றன.இந்தத் தொழிலில் இந்திய நிறுவனங்களின் பங்குமிக குறைவுதான். அரசு மருத்துவமனையின் மோசமான பராமரிப்பு தனியார் மருத்துவமனையின்பால் மக்களைத் திருப்புகிறது.தரமன வைத்தியத்தை தனியார் மருத்துவமனைதான் வழங்குகிறது என்ற உணர்வும் உருவாக்கப்படுகிறது.*

*பணம் இருந்தால்தான் நல்ல மருத்துவம் பெறமுடியும் என்ற நிலைக்கு இன்றைய சமூகம் தள்ளப்பட்டுள்ளது. பெரும்பான்மையான மக்கள் தனியார் மருத்துவமனை நோக்கி செல்லுகின்ற இச்சூழலில்தான்,அரசு இலவச மருத்துவம் என்று இத்திட்டத்தில் அறிவிக்கிறது.அதாவது தனியார் மருத்துவமனையில் வைத்தியம் பார்த்தாலும் அதன் செலவை அரசே ஏற்கும் என்பதுதான் இதன் பொருள். தனியார் நிறுவனங்கள் தங்கள் விருப்பப்படி பில்லை அரசு தலையில் கட்டுவார்கள்.இவ்வாறு அரசின் வளர்ச்சிக் கொள்கை எல்லாம் மக்கள்விரோத போக்காகவும்,மக்களை மேலும் சுரண்டுகிற திட்டங்களாகவும்,தனியாருக்கு அதிக இலாபம் அளிக்கிற வகையிலும் இருப்பதுதான் இந்த விசன் 2023 செயல் திட்டதின் சிறப்பம்சமாக உள்ளது!*

*விசன் 2023 செயல் திட்டமென்பது அதன் தோற்றத்தில் சமூக வளம்,மனித வளம்,உள்கட்டுமானம் என கவர்ச்சிகரமாக*

*தெரிந்தாலும் அதன் உள்ளடக்கத்தில் தமிழகத்தின் அரசியல் பொருளாதாரத்தை பன்னாட்டு உள்நாட்டு நிறுவனங்களுக்கு தாரை வார்ப்பதிலேயே வேர்விட்டுள்ளது தெளிவாகிறது.*

## பெருமுதலாளிகளின் நலன் + இந்துத்துவம் = பாரதீய சனதா கட்சி!

*2016 சட்டமன்றத் தேர்தலில் பிற கட்சிகள் கூட்டணிக்கு வராமல் புறக்கணிக்கப்பட்டது பாரதீய சனதா கட்சிதான். இந்திய அளவில் ஆட்சியைக் கையில் வைத்திருந்தும், தமிழக சட்டமன்ற தேர்தலில் ஒரு கூட்டணியை உருவாக்கவோ, பிற கட்சிகளுடன் கூட்டணி சேரவோ முடியாத பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது பா.ச.க. 2014-ல் மோடி தலைமையிலான ஆட்சி அமைந்து இரண்டே வருடங்களில் கூட்டணிக்கு யாருமில்லாமல் அனாதையாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. இதற்கான காரணம், பாரதீய சனதா கட்சியின் இந்துத்துவ அராஜகங்களும், காங்கிரசு பின்பற்றிய உலகமயப் பொருளாதாரக் கொள்கையைத் தீவிரமாக தொடர்வதும்தான்.*

*தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டுப் பேசிய பா.ச.க-வின் முக்கியத் தலைவர் நிதின் கட்கரி, பாரதீய சனதா கட்சி ஆட்சிக்கு வந்தால், முழு மதுவிலக்கை அமல்படுத்துவோம் எனக் தெரிவித்தார். மது ஒழிப்பு தியாகி சசி பெருமாளின் மரணத்திற்குப் பிறகு, மதுவுக்கு எதிராக தமிழகத்தில் நடந்த போராட்டங்களால் அனைத்து கட்சிகளின் தேர்தல் அறிக்கையிலும் இடம் பெற்றுள்ள மது விலக்கு, பாரதீய சனதா கட்சியின் அறிக்கையிலும் இடம்பெற்றுள்ளது.*

*கடந்த முறை சல்லிக்கட்டு நடத்தப்படும் என்று இறுதிவரை போக்குக் காட்டி கடைசியில் கம்பி நீட்டிய அதே பாரதீய சனதா கட்சிதான், தங்களுடைய தமிழக தேர்தல் அறிக்கையில் சல்லிக்கட்டு நடத்தப்படும் என்று தெரிவிக்கிறது. இந்திய ஆட்சிக் கட்டிலில் இருக்கும் பாரதீய சனதா கட்சி அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் விலங்குகள் நல வாரியம்தான் கடந்த முறை சல்லிகட்டுக்கு தடை விதிக்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு, தடையை நீடிக்கவும் வைத்தது.*

2ஜி தி.மு.க முதல் சொத்துக் குவிப்பு ஜெயலலிதா வரை என அனைத்துக் கட்சிகளும் லோக் ஆயுக்தா கொண்டு வருவோம் என்பது போலவே, பாரதீய சனதாவும் லோக் ஆயுக்தாவை அமைப்போம் என்கிறது. கர்நாடாகாவில் எடியூரப்பா, மகாராஷ்ட்ரத்தில் கடலை மிட்டாய் ஊழல்,வியாபம் ஊழல் என தங்களின் ஊழல் முகத்தை கொஞ்சம் கண்ணாடி வைத்து பார்த்தால் நல்லது.

இது தவிர்த்து முக்கிய அம்சங்களாக தெரிவது யாதெனில்,

- கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்ட அனைத்து விவசாயக் கடன்களும் தள்ளுபடி செய்யப்படும்.
- இயற்கை விவாசாயத்திற்காகப் புதிய கொள்கைகள் உருவாக்கப்படும்.
- ஆழ்கடல் மீன்பிடித்தல் ஊக்குவிக்கப்படும்.
- அனைத்து மாவட்டகளிலும் திறன் வளர்ச்சி மையங்கள் உருவாக்கப்படும்.
- சூரிய ஒளி மின்சார உற்பத்திக்கு 50 விழுக்காடு மானியம்
- புதிய துறைமுகம் அமைக்கப்படும்.
- இருபத்தி நான்கு மணி நேர தடையில்லா மின்சாரம்
- இரண்டே வருடங்களில், தமிழ்நாடு மின்மிகை மாநிலமாக மாற்றப்படும்.

விவசாயத்தின் வளர்ச்சிக்கும், விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கும் துணைசெய்வோம் என்று கட்சிகள் அளிக்கும் வாக்குறுதிகள் தேர்தல் அறிக்கையில் இடம்பெறும் சடங்கு பொருளாகவே மாறிவருகிறது. இந்தியா முழுக்க கடுமையாக பாதிப்புக்கு உள்ளாகி இருக்கும் மக்களாக விவசாயிகள் உள்ளனர். ஆனால், இந்திய அளவில் ஆட்சியில் இருக்கும் பாரதீய சனதா கட்சியாகட்டும், முன்னர் ஆட்சியில் இருந்த காங்கிரசு ஆகட்டும், தங்களுடைய பொருளாதாரக் கொள்கைகளை விவசாயத்தை ஒட்டி வகுத்ததே இல்லை. மாறாக, விவசாயிகளிடம் இருந்து நிலத்தை அபகரித்தல், கடன் சுமையை தீர்க்காதது, விளைபொருளுக்கு உரிய விலை வழங்காதது என அனைத்தையும் செய்துவிட்டு பக்கம்பக்கமாக வாக்குறுதிகள் வழங்குவது மட்டும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தப் போவதில்லை.

தொழிலாளர் உரிமைகளைப் பறிக்கும் சட்டத்திருத்தங்களைக் கொண்டு வந்த பா.ச.க அரசு, தொழிலாளர்களுக்கு மருத்துவமனை கட்டுவேன் என்று வாக்குறுதி அளிப்பது நகைப்புக்குரியது

மட்டுமல்ல, தொழிலாளர்களின் உரிமைகளைச் துச்சமாக எண்ணும் ஒரு அரசுதான் நம்மை ஆள்கிறது என்பது தீவிர சிந்தனைக்கு உட்படுத்த வேண்டிய விடயமாகும்.

நாம் மேற்கூறியுள்ள வாக்குறுதிகளைப் பார்த்தாலே பா.ச.க யாருக்கான கட்சி என்பது தெளிவாகிவிடும். சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரிப்பதற்கு 50% மானியமும், புதிய துறைமுகம் அமைக்கப்டுவதும் மக்களின் நன்மைக்காகவா? நிச்சயமாக இல்லை. சூரிய ஒளி மின்சார தயாரிப்பு, துறைமுகக் கட்டுமானம் போன்ற ஒப்பந்தங்களை அதானி போன்ற பெருமுதலாளிகள் எடுத்து கொழுக்கவே இந்த வாக்குறுதிகள் உதவும்.

இந்தியா முழுக்க கல்வித் துறையில் காவிமயத்தைப் புகுத்தி வரும் பாரதீய சனதா கட்சி, தமிழகத்தில் நடைமுறையில் உள்ள சமச்சீர் கல்வியைக் குறை கூறி, நடுவண் அரசின் பாடத்திட்டம்தான் ஐ.ஐ.டி, ஐ.ஐ.எம் போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் படிக்க உதவும் என பொய்யைச் சொல்ல இந்த தேர்தல் அறிக்கையிலும் தவறவில்லை.

இவ்வாறு, பெருமுதலாளிகளின் நலனை முன்னிறுத்தி, நடுத்தர, மாத சம்பளக் குடும்பங்களை இலக்காகக் கொண்டுள்ள ,

- பசுப் பாதுகாப்பு,
- மதமாற்றத்தைத் தடை செய்யும் “மத சுதந்திரச் சட்டம்“,
- இடஒதுக்கீடு உரிமைகளை கெடுக்கும் மத அடிப்படையிலான இட ஒதுக்கீடு,
- இந்துக் கோவில்களை சுதந்திரமாக செயல்ட அனுமதி

என தன்னுடைய இந்துத்துவக் கோர முகத்தையும் காட்டத் தவறவில்லை.

பெருமுதலாளிகளின் நலனும், பார்ப்பனீய இந்துத்துவாவும் இணைந்த முகம்தான் பாரதீய சனதா கட்சி என்பதை உறுதி செய்கிறது 2016 தமிழக சட்டமன்றத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கை.

## காங்கிரசு - பார்த்துப் புளித்தப் பழைய படம்!

2ஜி அலைக்கற்றை ஊழல், ஈழப் பிரச்சினை போன்ற விவாகரங்களில் உடைந்த தி.மு.க, காங்கிரசு கூட்டணி 2016 சட்டமன்றத் தேர்தலுக்காக மீண்டும் ஒன்றிணைந்துள்ளது.

2004-ம் ஆண்டில் இருந்து 2014 ஆம் ஆண்டு வரை கூட்டணி அமைத்து, இந்திய அளவில் ஆட்சியில் இருந்த காங்கிரசு, மீண்டும் வழமையான ஒரு தேர்தல் அறிக்கையையே கொடுத்துள்ளது.

இந்திய அளவில் எதிரிகளாக மோதிக் கொள்ளும் பாரதீய சனதா கட்சியின் தேர்தல் அறிக்கைக்கும், காங்கிரசின் தேர்தல் அறிக்கைக்கும் இருக்கும் ஒரே வேறுபாடு பாரதீய சனதா கட்சியின் அடிப்படைத் திட்டமான இந்துத்துவம் மட்டும்தான்.

தமிழகத் சட்டமன்றத் தேர்தலுக்கான அறிக்கைகளில் இரண்டு கட்சிகளின் வாக்குறுதிகளும் பெரும்பாலும் ஒன்று போலவே உள்ளது. குறிப்பாக ஒரே மாதிரியான வாக்குறுதிகள் முக்கிய அமசங்களாக இடம்பெற்றுள்ளன.

காங்கிரசின் தேர்தல் அறிக்கையின் முக்கிய அம்சங்கள்,

- ஊழலை ஒழிப்போம், நல்லாட்சி அமைப்போம்
- முழுமையான மது விலக்கு
- லோக் ஆயுக்தா அமைத்தல்.
- விவசாய கொள்கையை விரிவாக வகுப்போம்

வார்த்தைகளும், வரிசையும் மாறுகிறதே ஒழிய வாக்குறுதிகள் அதேதான்.

ஊழல் ஒழிப்பு என்று பேச காங்கிரசுக்கு என்ன தகுதி இருக்கிறது என்பது தெரியவில்லை. 2004 ஆம் ஆண்டு முதல் 2014 வரை நாட்டின் பல்வேறு வளங்களைப் பெருமுதலாளிகளுக்குத் தாரை வார்த்தது இதே காங்கிரசுதான்.

மாநிலங்களின் இந்திய அரசின் ஆதிக்கத்தைச் செலுத்துவதில் காங்கிரசிற்கும், பாரதீய சனதாவிற்கும் எந்த வேறுபாடும் இல்லை.

கல்விப் பிரச்சினையில் தமிழ் வழிக் கல்வி என்று வாக்குறுதி அளித்தாலும், காங்கிரசின் தீர்வாக இருப்பது நவோதயா பள்ளிகள்தான். பாரதீய சனதாவின் தீர்வு சிபிஎஸ்ஐ பாடத் திட்டம் தான்.

நாம் உற்றுக் கவனிக்க வேண்டிய காங்கிரசு கட்சியின் வாக்குறுதிகள் பின்வருமாறு,

- ஜல்லிக்கட்டு நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
- லோக் ஆயுக்தா அமைக்கப்படும்.

- உழவர் சந்தைகள் விரிவாக்கப்படும்.
- தடையில்லா மின்சாரம் வழங்கப்படும்
- 60 வயதைக் கடந்த விவசாயிகளுக்கு ஒய்வூதியமாக 2000 ரூபாய் வழங்கப்படும்.
- உலகத்தரம் வாய்ந்த நூலகங்கள் மாவட்டந்தோரும் அமைக்கப்படும்.
- காவேரி நதிநீர் பிரச்சினை, முல்லைப் பெரியாறு பிரச்சினைகளில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
- மதுரை, திருச்சி, கோவை, சேலம் ஆகிய மாவட்டங்களில் மெட்ரோ வசதி.
- மீன்பிடித் தடை காலங்களில் மீனவர்களுக்கான படித்தொகை உயர்த்தி வழங்கப்படும்.

இப்படி பல்வேறு வாக்குறுதிகளைத் தமிழக காங்கிரசு கட்சி அறிவித்திருந்தாலும்,இதை எப்படி செய்வார்கள் என்பதை அவர்கள்தான் விளக்கவேண்டும்!

ஒருவேளை, தாங்கள் மத்தியில் ஆட்சிக்கும் வந்து இதையெல்லாம் செய்வோம் என்று சொன்னால், கடந்த பத்தாண்டுகளில் ஆட்சியில் இருந்தபோது என்ன செய்தீர்கள் எனும் கேள்வி தொக்கி நிற்கிறது.

கடந்த பத்தாண்டுகளில், காங்கிரசு தலைமையிலான கூட்டணி இந்திய அளவில் ஆட்சியில் இருந்த போது அவர்கள் தமிழகத்திற்கு செய்த துரோகங்கள்தான் அதிகம். அவர்கள் செய்த துரோகப் பட்டியல் தற்போது வெளியிடப்பட்டிருக்கும் வாக்குறுதிகளின் பட்டியலை விட நீளம் என்பதாலும், மற்றபடி இவை வெற்று வாக்குறுதிகள் என்பதாலும்

தமிழகத்தில் காங்கிரசும், பாரதீய சனதா கட்சியும் தமிழக மக்களால் புறக்கணிக்கப்பட வேண்டிய கட்சிகளே!

## மதிமுக

1989 இல் ஈழத்திற்கு சென்றதிலிருந்து கருணாநிதியால் குற்றம்சாட்டப்பட்ட வைகோ,ஐந்து பேர் மரணத்தை தொடர்ந்து 1993 ஆம் ஆண்டில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்குகிறார்.நடைபயணம் மூலம் வெளிச்சம் பெற்ற வைகோவின் கொள்கை என்ன?

*பெரியாருக்குப் பின்,பெரியாரியத்தை வளர்த்தெடுக்க வேண்டிய அண்ணா, கருணாநிதியே அவற்றைக் குழிதோண்டிப் புதைத்த இடத்தில் இருந்து தனிநபர்(அ)உட்கட்சி சண்டையால் வைகோ மறுமலர்ச்சி திமுகவை நிறுவுகிறார்.*

*மதிமுகவின் கொள்கையில் புதுமையாக ஏதும் இருப்பதற்கில்லை. 1996 ஆம் ஆண்டில் சிபிஐஎம் மற்றும் ஜனதாதளத்துடன் சேர்ந்து சட்டமன்றத் தேர்தலை சந்தித்த வைகோ சற்றும் அவரே எதிர்பாராத வகையில் படுதோல்வியைச் சந்திக்கின்றார்."டான்சி ராணி" என வருணித்த ஜெயலலிதாவோடு கூட்டணி வைத்து 1998 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், பாஜக அரசிற்கு ஆதரவு தருகிறார். வாஜ்பாயி ஆட்சிக் கவிழ்ப்பிற்கு பின்பாக, 1999 இல் திமுக அணியில் இணைந்து அதே பாஜகவுடன் இடம் பெறுகிறது.*

*"இரட்டைக்குழல் துப்பாக்கி" என திமுகவால் வர்ணிக்கப்பட்ட மதிமுக 2001 ஆம் ஆண்டில் பாஜக நின்ற 23 தொகுதிகளைத் தவிர்த்து பிற தொகுதிகளில் களம் கண்டு அதிமுகவின் வெற்றிக்கு மறைமுகமாக பயனளித்தது.*

*தடைசெய்யப்பட்ட இயக்கங்கள் குறித்து பேசுவதே குற்றம் என்று பாசிச சட்டமான பொடாவில்,19 மாதங்கள் வைகோவை சிறையில் அட்டைத்தார் ஜெயலலிதா.வெளிவந்த வைகோ, 2004 பாராளுமன்ற தேர்தலில் காங்கிரசுடனும்,திமுகவுடனும் உடன்பாடு கண்டு,வெளியிலிருந்து ஐக்கிய முற்போக்கு கூட்டணியை ஆதரித்தார்.*

*மீண்டும் 2006 இல் திமுகவுடன் முரண்பட்டு அதிமுகவுடன் இணைந்த வைகோ .2009 இல் திருப்பரங்குன்றத்தில் நின்று தோற்கிறார்.பின்னர் 2011 வரை அதிமுகவில் நீடித்திருந்தார்.2011 இல் அதிமுவிலிருந்து வெளியேற்றப்பட்ட வைகோ தேர்தலை புறக்கணித்தார். 2014 இல் பாஜக,தேமுதிக,பாமகவுடன் அணிசேர்ந்து மோடியைப் பட்டிதொட்டியெல்லாம் அறிமுகப்படுத்திய வைகோ 2015 இல் இறுதியாக மக்கள் நலக் கூட்டியக்கத்தை தொடங்கி, 2016 இல் மக்கள் நலக் கூட்டணி என்கிற மெகா அணியை மாற்றணியாக வைத்து தேர்தலை சந்திக்கிறார்.வைகோவை மேலோட்டமாகப் பார்த்தால்,உணர்ச்சிவசப்பட்டு முடிவு எடுக்கக்கூடியவராகவும்,மக்கள் போராட்டங்களை பெரிதும் முன்னின்று நடத்துபவராகவும் அறியப்படுவார்.*

ஆனால் திமுக வெளியற்றத்தில் தொடங்கிய அவரது அரசியல் பயணம் இலக்கில்லாதது,தெளிவில்லாதது என்பதை விடவும் அவர் யாருக்கானவர்?மதிமுகவின் தேவை என்ன?மதிமுகவின் பொருத்தப்பாடு என்ன?என்று விவாதிப்பது பொருத்தமுடையதாக இருக்கும்.

பாராளுமன்றத் தேர்தலில் குழப்பமில்லாமல் முடிவெடுக்கின்ற மதிமுக,சட்டமன்றத் தேர்தல்களின் ஒவ்வொரு முறையும் குழப்பத்திலேயே இருந்து வந்திருக்கிறது.

திராவிடக் கட்சிகளின் மாற்று என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட மதிமுக,திராவிடக் கொள்கைக்களுக்கு முரணாகவே எப்போதும் இருந்துவந்திருகின்றது.மதவாத பாஜகவுடன் கூட்டணி வைத்த மதிமுக தனிநபர் துதியை பட்டி தொட்டியெல்லாம் கொண்டுசென்றது.

இரத்தக் கரை படிந்த மோடியை 2014 இல் தமிழகம் முழுவதும் கொண்டு சென்ற இவரது செயல்பாடு அதிர்ச்சியளிப்பதாக இருந்ததில்லை.ஏனெனில் வாஜ்பாயிக்கு சான்றிதழ் வழங்கி இந்துத்துவத்தை ரொமன்டிசைஸ் செய்தவர்தான் வைகோ.

டான்சி ராணி,கொலைகாரி என்று ஜெயலலிதாவை வர்ணித்த வைகோ,ஜெயலலிதாவோடு இன்முகத்துடன் கூட்டணி வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.மொத்தத்தில் கருணாநிதி எனும் தனிநபரை பழிவாங்க கட்சி நடத்துகிறார் வைகோ.அப்படி விடாமல் பார்த்தால்,திராவிட இயக்கத்தை வீழ்த்த ஆர் எஸ் எஸ் இன் துருப்புச்சீட்டு வைகோ எனும் அளவிற்கு மதிமுகவின் செயல்பாடுகள் இருக்கின்றன.

மக்கள் போராட்டங்களில் அதிக அளவில் பங்குபெற்ற மதிமுக, பெரும்பாலும் போராட்டங்களைத் தொடங்கியதும் இடையில் இணைந்துகொண்டு கவனம்பெறும்.ஈழம்,மது ஒழிப்பு,முல்லைப் பெரியாறு, கூடங்களும், நியூட்ரினோ, மீத்தேன், ஸ்டர்லைட், சேது சமுத்திர திட்டம் என மக்கள் திரள் அனைத்து போராட்டங்களிலும் நின்றுகொண்டு அதை நடைமுறைப் படுத்துகிற ஆளும்வர்க்க கட்சிகளோடு கூட்டணி வைத்துக் கொள்வதுதான் அவரது வாடிக்கையாக இருந்துவருகிறது.

மக்கள் நலக் கூட்டணியின் தேர்தல் அறிக்கையில் ஈழம் இல்லை, நியூட்ரினோ இல்லை என்பதைப் பார்க்கும்போது இந்த அணி மக்கள் நலக்கூட்டணியா? என்பதே சந்தேகத்திற்குரியது.

மதிமுகவின் சுயாட்சிக் கொள்கை, ஈழம் குறித்த நிலைப்பாடு, சுற்றுச்சூழல் சிக்கல் என அனைத்தையுமே முன்வைக்காத இந்த அணியின் ஒருங்கிணைப்பாளர் வைக்கோ என்றால் இதை விட நகைச்சுவை என்னவாக இருக்கமுடியும்?

மதிமுகவில் மறுமலர்ச்சியும் இல்லை,திராவிடமும் இல்லை.அவர்களுக்கே கூட முன்னேற்றம் இல்லை.பின் எப்படி மாற்று?மாற்றும் இல்லை!

## விடுதலை சிறுத்தைகள் கட்சி

தலித் அரசியலின் மூலம் அரசியலுக்கு வந்த திருமாவளவன் அடையாள அரசியலின் கவனிக்கப்பட வேண்டிய ஆளுமை. விடுதலைச் சிறுத்தைகள் கட்சியாக உருவெடுத்த இக்கட்சியின் அரசியல் முக்கியத்துவமும் சாதி ஒடுக்குமுறைகெதிரான அதன் செயல்வழியும் கவனிக்கப்படவேண்டியவை.1990 லிருந்து 1999 வரை அரசியல் புறக்கணிப்பு செய்த வி சி க , 1999 ல் தேர்தலில் போட்டியிட்டது . 2001 ல் திமுகவுடன் இணைந்து போட்டியிட்ட விசிக மங்களூர் தொகுதியில் மட்டும் வெற்றி பெற்றது . 2006 இல் அதிமுக உடன் அணி சேர்ந்து , மீண்டும் 2009 இல் திமுக-காங்கிரஸ் கூட்டணியிலும் , 2011 இல் அதே திமுக கூட்டணியிலும் தேர்தலைச் சந்தித்தது. 2011 இல் திமுக அணியுடன் இணைந்து போட்டியிட்டு தொடர் தோல்வியை சந்தித்தது. தற்போது,2016 இல் மக்கள் நலக் கூட்டணியில் பிரதானப் பாத்திரம் வகிக்கிறது.

அம்பேத்கரைத் தலைவராகக் கொண்டுள்ள தலித் கட்சிகளில் விசிக சற்று வித்தியாசமானது. தமிழ்த் தேசிய அரசியலையும், இடதுசாரி அரசியலையும் உள்வாங்கி இருக்கிற விசிகவின் வளர்ச்சியும் சமூகக் கண்ணாடியாகும். வட மாவட்டங்களில் கனிசமான பலம் பொருந்திய விசிக வின் உற்ற தோழனாக திமுகவே இருந்ததும் பாமகவுடனான அரசியல் ஊடாட்டத்தில், விசிக நீந்திக் கரையேறியதும், பாஜகவுடன் எந்நாளும் கூட்டணியில்லை என்று அறிவித்த விசிக வின் அரசியல் கவனிக்கப்பட வேண்டியது. சாதியொழிப்பு அரசியலில் பழைய தலித் இயக்கங்கள் எல்லாம் ஏற்கனவே இருக்கின்ற ஆளும்கட்சிகளுக்கு சேவை செய்வதாகவே இருக்கின்றன.தாழ்த்தபப்ட்ட மக்களுக்கான உரிமையையோ பாதுகாப்பையோ உத்தரவாதப்படுத்தவேண்டும் என மாற்றாக முன்னெழுந்த விசிக, தற்பொழுது சாதிய வன்முறைகள் தீவிரம்

பெற்றுவருகிற சூழலில் தனது செயல்பாடுகளும் கொள்கைகளும் தேர்தல் நடவடிக்கைகளும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பை வழங்கிருக்கிறதா என மறுபரிசீலனை செய்யவேண்டிய நிலையில் உள்ளது!

இந்நிலையில் மநகூவை அமைத்ததிலும் தனது கொள்கையாக விளிம்புநிலை மக்களின் அதிகாரத்திற்கான கூட்டணி என அறி-வித்ததிலும் சொல்லுக்கும் செயலுக்கும் எந்த ஒற்றுமையும் இல்லை!வழக்கம்போல சந்தர்ப்பாவாத தேர்தல்கால செயல்பாடு போன்றே உள்ளது!

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

வர்க்கக கருத்தியல் அடிப்படையிலான இரு இடதுசாரி இயக்கங்களின் வர்க்கப் போராட்ட அரசியலுக்கு நீண்ட நெடிய இயக்க மரபு உண்டு.அடிமட்டத் தொண்டர்களின் அர்ப்பணிப்பிலும் தியாகத்திலும் வளர்ந்த இடதுசாரிக் கட்சிகள் இன்று கிட்டத்தட்ட அதன் வர்க்க அரசியல் பாதையை நீண்டகாலமாகவே நாடாளுமன்ற வாதத்திற்குள்ளாகவே தொலைத்துவிட்டது போன்றே தெரிகிறது. இரு திராவிடக் கட்சிகளுடனான கூட்டணியே, தேர்தல் நேர தந்திரங்களாக இதுநாள்வரை இருந்தநிலையில்,இன்று மதிமுக தேமுதிகவிற்கு வந்து சேர்ந்துள்ளதுதான் தற்போதைய தேர்தல் தந்திரமாக இடதுசாரிக் கட்சிகள் கருதுகின்றன.

தமிழகத்தில் காங்கிரஸ் பண்ணையார் ஜி,கே,வாசன், தி.மு.க., அ.தி.மு.க. பதிலிகளான ம.தி.மு.க., தே.மு.தி.க தலைமையில் மாற்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடுகிற கம்யூனிஸ்ட் கட்சிகள் இதை தேர்தல்நேர செயற் தந்திரம் எனப் பூசி மெழுகுகிறது.

முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ ஆதரவு கட்சிகளாகவும் இக்கட்சிகளின் தலைமை முதல் அமைச்சர்கள் வரை முதலாளிகளாக இருக்கிற யதார்த்தத்தை அம்பலப்படுத்தி அரசியல் நடத்த வேண்டிய இடதுசாரிக் கட்சிகளே இக்கட்சிகளுடன் கூட்டணி வைத்துள்ளதுதான் கொடுமை!

### தேர்தலும் வர்க்க அரசியலும்:

வர்க்கம், வர்க்க கண்ணோட்டம், வர்க்க அணுகுமுறை, வர்க்கப் போராட்டம் ஆகியவற்றைக் கைவிடுவது அல்லது

*நீர்த்துப்போகச் செய்வது என்கிறப் போக்கு இடதுசாரிக் கட்சிகளை, தொழிற்சங்க இயக்கங்களை அழிப்பதற்கு கையாளப்படுகிற தந்திரம். கம்யூனிஸ்ட் அகிலங்களின் வரலாறு நெடுகிலும் இதைக் காணலாம்.*

*தேர்தல் நேரத்தில் வர்க்கத்தை பற்றி போசலாமா? என சில தோழர்கள் ஆதங்கப்படுகிறார்கள்.வர்க்க கண்ணோட்டம், வர்க்க அணுகுமுறையை பொருத்துவதற்கும், பேசுவதற்கும் நேரம், காலம், இடம் வரையறைகளை வகுப்பதே வர்க்க அரசியலை நீர்த்துப்போகச் செய்வற்கான முதற் தந்திரமாகும்!*

*தொழிலாளி வர்க்கக் கட்சிகளையும், இயக்கங்களையும் வர்க்க கண்ணோட்டமற்றவையாக ஆக்குவதற்கு அடுத்து கையாளப்படுகிற தந்திரம், மார்க்சியத்தின் அடிப்படைகளை காலச் சூழல் தொடர்புடைவையாக்கி, காலாவதியானதாக நம்பச் செய்வது. மார்க்கியத்தின் அடிப்படைகளைக் கொண்டு அரசியல் சமூக நிகழ்வுகளை அணுக முற்படுவதை ஏட்டுச்சுரக்காய்த் தனம் என மொக்கையாக்குவது. நடைமுறை வாதத்தை வழிபடுவது. ஒரு வகையான நடைமுறைக்குத் தலைமை கைதியாகி, அணிகளையும் அடிப்பணியச் செய்வது.*

*இதன் வெளிப்பாட்டை அன்மைய நிகழ்வுகளில் காண்கிறோம். மேற்கு வங்கத்தில் இடதுசாரித் தலைமை, தனது அணிகளை ரத்தன் டாட்டா ஜிந்தாபாத் என கோஷமிடும் அளவிற்கு தாழ்த்தியது. தற்போது காங்கிரசுடன் தொகுதி உடன்பாட்டை விமர்சனமற்ற முறையில் ஏற்றுகொள்ள செய்திருக்கிறது.*

*தமிழகத்தில் இடதுசாரிக் கட்சிகள், நேற்று வரை பிஜேபி தலைவர்களை பல்லாக்கில் சுமந்த மதிமுக தேமுதிக போன்ற கட்சிகளை ஏற்றுக் கொண்டதன் மூலம், ஊர் அறிந்த காங்கிரஸ் பண்ணையார்கள் தலைமையை ஏற்றும், வர்க்க கண்ணோட்டத்தை தொலைத்து, வர்க்க அணுகுமுறையை கைவிட்டு நிற்பதை வெளிப்படையாக காண்கிறோம்.*

**கட்சி தீர்மானமும் நடைமுறை உத்தியும்:**

*மேற்கு வங்கத்தில் இடதுசாரிகள் மற்றும் காங்கிரஸ் தேர்தல் கூட்டணி (நீண்டகால நடைமுறையில் மக்கிப்போன சில மூளைகள் இதனை அறிவியல் மார்க்சியம் என, டிமிட்ரோவின் ஐக்கிய முன்னணித் தந்திரம் எனப் பதிவிடுகின்றன) சி.பி.ஐ(எம்)*

கட்சியின் விசாகப்பட்டிணம் அகில இந்திய மாநாட்டு அரசியல் தீர்மானத்தை (2015) காற்றில் பறக்கவிட்ட செயலாகும்.

தமிழக இடதுசாரி தலைமையோ, இங்கு திட்டத்தையே காற்றில் பறக்க விடுகிறது.அண்மையில் வெளியான ம.ந.கூ. தேர்தல் அறிக்கையில் கூட்டணி ஆட்சியில் பங்கேற்பதைப் பற்றி முதன்மையாக குறிப்பிடப்பட்டது.ஆட்சியில் பங்கேற்பு பற்றி இந்திய இடதுசாரி இயக்கத்திற்கு (குறிப்பாக சி.பி.ஐ.(எம்) க்கு) ஒரு வரலாறு இருக்கிறது. 1950களில் கேரள சட்ட சபைக்கு தேர்தெடுக்கப்பட்டதை யொட்டி கட்சிக்குள் இது விவாதப் பொருளானது. 1964 சி.பி.ஐ. (எம்), திட்டத்தில் பத்தி 112ல் இது இடம் பெற்றது. மீண்டும் 1990களில் மத்திய அரசில் பங்கேற்பது பற்றி ஒரு விவாதம் வந்தது. அப்போது 1964 திட்டத்தை உருவாக்கிய சிற்பிகளில் முக்கியமானவரான தோழர் பசவ புன்னய்யா ஆங்கில மார்க்சிஸ்டில் ‘பத்தி 112 பற்றி’ எனும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினார். அதில் அவர் அந்த பத்தியில் விளக்காமல் விடப்பட்டாலும் அது மாநில அரசுகளை மட்டும்தான் குறிப்பிடுகிறது. எதிரி வர்க்கத்தின் உண்மையான அதிகாரம் பொதிந்துள்ள மத்திய அரசை குறிப்பிடவில்லை என விளக்கினார். வி.பி.சிங் அழைப்பை ஏற்று மத்திய அரசில் பங்கேற்காமல் போனது “வரலாற்றுத் தவறு”(Historical Blunder) என தோழர் ஜோதிபாசு வெளிப்படையாகவே விமர்சித்தார்.

அடுத்து, கொல்கத்தாவில் நடந்த சி.பி.ஐ.(எம்)ன் 16வது அகில இந்திய மாநாட்டில் இதுகுறித்து விவாதிக்கப்பட்டது. ஆட்சியில் பங்கேற்க வலியுறுத்திய, மத்தியக் கமிட்டியில் சிறுபான்மையினர் கருத்தை தோழர் சுர்ஜித்தும், பெரும்பான்மையினர் கருத்தை தோழர் பிரகாசும் மாநாட்டில் பிரதிநிதிகள் விவாதத்திற்கு முன்வைத்தனர். மாநாடு மத்தியக் கமிட்டியின் பெரும்பான்மை முடிவு சரி என வாக்கெடுப்பில் ஒப்புதல் கொடுத்தது. இந்த இரண்டு வாதங்களும் 16வது மாநாட்டு ஆவணங்களில் அனைவரின் விவாதத்திற்காக வெளியிடப்பட்டன. இன்றும் அச்சில், ஆன்லைனில் கிடைக்கின்றன.

அடுத்து. 2000 ஆம் ஆண்டில் கேரளாவில் நடந்த கட்சித் திட்டத்தை மேம்படுத்தும் (Up date) சிறப்பு மாநாட்டில் ஆட்சியில் பங்கெடுப்பதை பற்றி விவாதித்து, மாநில அரசிலும்,மத்திய அரசிலும் பங்கேற்பதை பற்றி சில அடிப்படை நிபந்தனைகளை

வரையறுத்தது. இந்த நிபந்தனைகள், சட்டமன்றங்களில் முடிவெடுத்திட செல்வாக்கு செலுத்தும் வகையில் ஏற்ற உறுப்பினர் எண்ணிக்கை, எடுத்த முடிவுகள் உழைக்கும் வர்க்க நலன்களுக்கு ஏற்ற வகையில் அமலாவதை உத்தரவாதப்படுத்தும் வகையில் சட்டமன்றங்களுக்கு வெளியில் கட்சி மற்றும் வர்க்க வெகுஜன அமைப்புகளின் ஸ்தாபன பலம் ஆகியவையே. இந்த அவசிய நிபந்தனைகளை, நிலவும் சூழல்களை ஆராய்ந்து ஆட்சியில் பங்கேற்புக்கு மத்தியக் கமிட்டி ஒப்புதல் வழங்கும். இவ்வாறு திட்டத்தில் இடம் பெற்றுள்ளது.

இன்று தமிழக சட்டமன்த் தேர்தல் களத்தில் தி.மு.க., அ.தி.மு.க. கட்சிகளுக்கு ஒரு உண்மையான மாற்றை உருவாக்க கடமைப்பட்ட கம்யூனிஸ்டுகள், ஒரு ஜெராக்ஸ் மாற்றை கையிலேந்தி, அந்த மாற்று பிரமையில் தமது கட்சித் திட்டத்தையே காற்றில் பறக்கவிடுகிறார்கள். இடதுசாரிகள் போட்டியிடுகிற மொத்த தொகுதிகளிலும் வெற்றி பெற்றாலும் திட்டம் வலியுறுத்துகிற குறைந்தபட்ச நிபந்தனைகளை நிறைவு செய்யுமா? வைகோ. விஜயகாந்த்,காங்கிரஸ் பண்ணையார் வாசன் திட்டம் சொல்கிற உழைக்கும் வர்க்கத்திற்கு சாதகமான முடிவுகளை எடுக்க அனுமதிப்பார்களா? எடுத்த முடிவுகள் அமலாவதை உத்தரவாதப்படுத்தும் வர்க்க வெகுஜன பலம் இன்று கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு தமிழக சூழலில் இருக்கிறதா?

**தேவை இடது ஜனநாயக ஒற்றுமை:**

இந்திய அரசியலில் இடதுசாரிகளின் இன்றைய அடிப்படைக் கடமை, இடது ஜனநாயக முன்னணியை கட்டமைப்பது. இடது ஒற்றுமை,இடது முன்னணியை மையமாகக் கொண்ட இடது ஜனநாயக முன்னணிதான் இந்திய அரசியலில் ஒரு உண்மையான மாற்றாக இருக்க முடியும். இந்த வர்க்க மாற்றை தவிர்த்து வேறெந்த மாற்றை முன்வைத்தாலும் அது கால விரயம் மட்டுமின்றி பாட்டாளி மற்றும் உழைக்கும் வர்க்கத்திற்கு செய்கிற தீங்காகவும் முடியும்.

இன்று தமிழக சட்டமன்ற தேர்தல்களில் மாற்று, மாற்றம் என்கிற முழக்கம் திரும்புகிற திசையெல்லாம் ஒலிக்கிறது. அவரவர் தன்னை மாற்று எனவும், மாற்றத்திற்கான அணி எனவும் சவடால் விடுகிறார்கள். இந்த சூழலில் உண்மையான மாற்றை விவாதத்திற்கு கொண்டுவர கடமைப்பட்ட இடதுசாரிகள்,

அதைப்பற்றி ஒரு வார்த்தையும் பேச முடியாத ஒரு உத்தியில் தாமாகவே சிக்கிக்கொண்டார்கள்.

இத்தனைக்கும் மேல் ஜனநாயக முன்னணி,இந்திய உழைக்கும் மக்களின் பொது விருப்பமாக இருக்கிறது. சிறியப் பெரிய இடதுசாரிக் கட்சிகளின், தொழிற்சங்க, வெகுஜன அமைப்புகளின் கீழ்மட்ட தோழர்களின் பொது விருப்பமாக இருக்கிறது. அதற்கும் மேல் சமூகத்தில் முற்போக்கு வட்டங்களின் பொது விருப்பமாக இருக்கிறது.இந்த சூழலில்,இடதுசாரி ஜனநாயக ஆற்றல்களைக் கண்டறிவதில் உள்ள குறைகளும்,நாடாளுமன்றவாதத்திற்குள்ளான மாற்றில் சிக்கிக்கொள்வதும், உண்மையான மாற்றைக் கட்டமைப்பதில் உள்ள தடைகளாக உள்ளன.அதேநேரத்தில் திமுக,அதிமுக என்ற இருதுருவக் கட்சிகளுக்கு மாற்றாக மற்றுமொரு முதலாளியக் கட்சியை ஆட்சியில் அமர்த்துவதே சிபிஐ, சிபிஐ(எம்)இன் மாற்றாக உள்ளது.

## பாட்டாளி மக்கள் கட்சி

தமிழ்நாட்டில்; திராவிடக்கட்சிகளின் வகுப்புவாரி உரிமைப் போராட்ட அரசியல் எழுச்சியின் தொடர்ச்சியாக வன்னியர் சங்கம் என்ற பெயரில் தொடங்கிய பாட்டாளி மக்கள் கட்சிஇ இடஒதுக்கீடு போராட்டத்தில் வெற்றியடைந்தது. மண்டல் கமிசன் பரிந்துரைகளைத் தொடர்ந்து நாடு முழுவதும் எழுந்த சமூகநீதி அரசியல் பா.மா.க வையும் பாதித்தது. நாடு முழுக்க சிறுபான்மை தலித் பிற்பட்ட சாதிகளின் ஐக்கியம் தற்காலிகமாக முற்பட்ட சாதிகளுக்கெதிராக எழுந்தது. அதன் எதிரொளியாக பாட்டாளி மக்கள் கட்சியில் தேவேந்திர சாதியிலிருந்து ஜான்; பாண்டியனும் சிறுபான்மை பிரதிநிதியாக குணங்குடி அனிபாவும்.. பறையர் பிரதிநிதியாக தலித் எழில்மலையும் வண்ணார் பிரதிநிதியாக ராமனும் இன்னும் பிறரும் அங்கம் வகித்தனர். மருத்துவர் ராமதாசு தாழ்த்தப்பட்ட மக்களின் சுடுகாட்டுப் பொதுவழி உரிமைக்காக போராடிய சம்பவங்கள் எல்லாம் நடந்தன.

ஆனால் இடஒதுக்கீட்டுப் போராட்டம் வெற்றியடைந்த பின்னணியில் பா.மா.கவுக்கு மேலும் சமூகநீதி ஐக்கியம் தேவைப்படாமல் போனது.சாதி ஐக்கியம் என்ற நோக்கு திசையில் ; போனது. 90க்குப் பிறகு தொடர்ந்து சமூகநீதி அரசியலின் தேவையை மேலும் வற்புறுத்தியும் அதிலுள்ள பிற்பட்ட சாதிகளின்

சுயமுரண்பாட்டையும் சுட்டிக்காட்டி தாழ்த்தப்பட்ட மக்களின் இயக்கம் எழுச்சிக்கு வந்த போது எல்லா பிற்பட்ட சமூகநீதி அரசியல் தலைமைகளும் சாதியவாத நிலை எடுத்தன. இதன் வளர்ச்சிப் போக்கில் ஏற்கனவே சமூக நீதியை முன்வைத்து வந்த திராவிட, இடதுசாரி அரசியல் இயக்கங்களே தாழ்த்தப்பட்ட கட்சிகளின் தோழமை சக்திகளாக தொடர்ந்து நீடித்து வந்தன. இதனிடையே பிற்பட்ட சாதிப்பின்னணியில் சமூகநீதி பேசிய பா.ம.க, பார்வர்ட் பிளாக், போன்ற கட்சிகள் முழு சாதியவாத நிலைக்குச் சென்றன.

இதே காலப்பின்னணியில் நேரடியாக சாதிக்கட்சிகளாக உருவானவை அனைத்தும் மிக மோசமான சாதியவன்ம அரசியலை தாழ்த்தப்பட்டோருக்கு எதிராக முன்வைத்தன. தொடர்;ந்து பல சாதிமோதல்களும் தாழ்த்தப் பட்டோர் மீதான தாக்குதல்களும் அதிகரித்தன. அதுவரை சமூகநீதி அரசியலின் வாரிசுகளாக பறைசாற்றிக் கொண்ட தி.மு.கவும் அ.தி.மு.கவும் மிக வெளிப்படையாக தாழ்த்தப்பட்டோரை விலக்கி இந்த சாதியக்கட்சிகளை இடமும் வலமுமாக அணிசேர்த்துக் கொண்டன. சாதியக் கட்சிகளை எதிர்ப்பதாக சொன்ன சிபிஐயும் சிபிஎம்மும் தமது ஓட்டுவங்கி அரசியலின் சந்தர்ப்பவாதத்திற்கு இரையாகி அக்கூட்டணிகளில் சங்கமித்தனர். இது தாழ்த்தப்பட்ட இயக்கங்களையும் அமைப்புகளையும் மிகத் தெளிவாக தனிமைப்படுத்தியதன் விளைவாக அவை தீவிர அடையாள அரசியல் கட்சிகளாக தம்மை மென்மேலும் சுருக்கிக் கொள்ள நேர்ந்தது.

ஒரு கட்டத்தில் சாதியவாதக் கட்சிகளின் ஆற்றல் கூடுவதைக் கண்ட நிலையில் சாதியக்கட்சிகளின் எண்ணிக்கை மென் மேலும் பெருகியது. பாட்டாளி மக்கள் கட்சி சாதியரசியல் பின்னணியில் போட்டிபோடுபவர்களுக்கு முன்னணி நட்சத்திரமாகத் திகழ்ந்தது. எனினும் பா.ம.கவின் சாதியக் குறுங்குழுவாத அரசியலின் இறுதி தர்க்கமாக அது தனது குடும்ப அதிகாரத்தை நிறுவியது. இது அக்கட்சிக்குள்ளும் வெளியிலும் அதன் பொது வேடங்களை கலைத்தது. முடிவில் நான் அன்புமணி எனது ஆட்சியில்.. இந்த அன்புமணி ஆட்சிக்கு வந்தால் செய்வான்.. என்று அது அன்புமணி கட்சியாகி பல்லிளித்து வருகிறது.

ஆனால் முரண்பாடாக பா.ம.க வின் தேர்தல் அறிக்கை இப்படித் தொடங்குகிறது. பா.ம.கட்சி சமூக ஜனநாயகப் பாதையை மேற்கொள்ளும் என்கிறது. சமூக ஜனநாயகமும், மாற்றம் - முன்னேற்றம் - அன்புமணி என்பதும் அடிப்படையில் முரண்பாடானது. சமூக ஜனநாயகம் என்றால் மக்கள் ஜனநாயகம் என்று பொருள். பா.ம.க வயதுவந்த ஆண்பெண்ணின் விருப்பப்பூர்வ திருமண தேர்வுரிமையை மறுப்பதும் ;இடஒதுக்கீட்டின் மூலமாக அதிகாரம் பெற்று முன்னுக்குவந்த பா.ம.க அதன் சமூகநீதி அரசியலை தனது அறிக்கையில் இருட்டடிப்பு செய்வதும், தாழ்த்த;ப்பட்டோர் வன்கொடுமைத் தடுப்புச்சட்டத்தை ஒழிக்கக் கோருவதும்.. கூலிங்கிளாசும் ஜ{ன்சும் பெண்களை சோரம் போகச் செய்வதாக பெண்களை இழிவுபடுத்துவதும் எப்படிப்பட்ட சமூக ஜனநாயகம்இ ஒப்புக்கு விகிதாச்சார இடஒதுக்கீட்டை முன்வைக்கிறது.

ஒரு கேரள நிறுவனத்திடம் அன்புமணியை விளம்பரப்படுத்தும் திட்டத்தை பாமக ஒப்படைத்திருக்கிறது. மக்களிடம் அரசியல் செல்வாக்கை போராட்ட அரசியல் மூலம் ஏற்படுத்த முடியாதவர்கள் கம்பெனிகளின் விளம்பர உத்திகளை நாடுகிறார்கள். அன்புமணி மட்டுமின்றி ஸ்டாலினும் பி.ழிஜ.பி போன்றோரும் இதே கம்பெனி விளம்பரத்தை நாடியவர்கள். இது முதலாளித்துவ அரசியலின் சீரழிந்த கார்ப்பரேட் வடிவம்.

இந்தத் தேர்தலில் பா.ம.க தனது கார்ப்பரேட் சேவகத்தை மூன்று முக்கிய அரங்குகளில் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.

1. விவசாயிகளுக்கு விவசாய இடுபொருள்களை இலவசமாகத் தருவோம் என்கிறது. வேளாண் நெருக்கடியின் முதன்மைப் பிரச்சனையே விவசாயம் உரம், பூச்சிமருந்து கம்பெனிகளின் பிடியில் சிக்கியதும் அதனால் வேளாண் உற்பத்தித்திறன் தொடர்ந்து குறைந்து வருவதும் இதனால் விவசாயிகள் திவாலடைவதும் தான் முதன்மைப் பிரச்சனை. ஆனால் பா.ம.க இலவசமாக இடுபொருள்கள் கொடுப்பது என்றால் அரசு கஜானாவில் இருந்து பணத்தை எடுத்து இந்த கம்பெனிகளுக்கு பைசா சுத்தமாக பட்டுவாடா செய்வோம் என்பதுதான். இதனால் அந்த கம்பெனிகள் கொழுக்கப் போகின்றன. முரணாக பா.ம.க இயற்கை வேளாண் தொழில்நுட்பங்களை ஆதரிப்பதாகச் சொல்கிறது.

2. இரண்டாவதாக அரசு மருத்துவமனைபோல நோயாளிகள் தனியார் மருத்துவமனையில் இலவசமாக சிகிச்சை பெறச் செய்து அதற்கான கட்டணத்தை தனியார் மருத்துவமனைக்கு அரசே செலுத்திவிடும் என்கிறது. இதுவும் அரசு கஜானாவில் இருந்து பணத்தை எடுத்து இந்த கம்பெனிகளுக்கு பைசா சுத்தமாக பட்டுவாடா செய்யும் வேலைதான். இது அரசு மருத்துவமனைகளுக்கு மூடுவிழா நடத்துவதற்கு பூஜை போடும் செயல்.

3. அதே போல தொழிற்துறையை ஊக்குவிக்கும் வகையில் அந்நிய மூலதனத்தை ஈர்க்க மாவட்டம் தோறும் ; அலுவலகம் திறக்கப்படுமாம். அதாவது உலகமுதலாளிகளை எல்லாம் கூவிக்கூவி அழைத்துவந்து தொழில் தொடங்க வைப்பாராம். அதன்; அர்த்தம் என்னவென்றால் உள்நாட்டில் நிலவக்கூடிய வேளாண்மை கைத்தொழில் தொழிற்துறைக்கு ஒரு இணைப்பை உருவாக்கி அதை வளர்த்தெடுப்பதற்கு மாறாக கார்ப்பரேட் அடியாள் சேவகம் செய்யுமாம்..

தவிர இத்தேர்தலில் பா.ம.க மறைத்துக் கொண்ட சாதிவெறி அரசியலுக்கு ஒரே காரணம் அன்புமணி முதல்வராக அது தடை என்பதே. ஆனால் மண்டையை மறைத்தாலும் கொண்டையை மறைக்காதவர் போல மக்கள் அவ்வளவு எளிதாக மறக்கப்போவதில்லை.

## நாம் தமிழர் கட்சி

நாம் தமிழ்ச்சாதிக் கட்சி என்பதே அதன் பெயர் பொருத்தம்.; அல்லது சீமான் முதல்வர் கட்சி என்றும் சொல்லலாம். ஈழப்போராட்டத்தின் பின்னணியில் தோன்றிய நாம் தமிழர் கட்சியின் தோற்றம் ஒரு தமிழ் இன உணர்வான கட்சி என்று பார்க்கப்பட்டது. ஆனால் சீமான் தமிழ்ச்சமூகத்தின் சொத்தான பெரியார் அரசியலின் மூலமாக அரசியல் முகவரி பெற்றிருந்தாலும் போலித்தமிழினவாதத்தை முன்வைத்தார். அது தமிழ்ச்சாதி என்ற பெயரில் சற்றே பெரிய சாதியவாதத்தை முன்வைத்தது. புஜீறப்பின் அடிப்படையில் இனவரையறை செய்யும் பிற்போக்கான காட்டுமிராண்டி காலத்து அளவுகோல்களை முன்வைத்தது. நூறாண்டுகளுக்கு மேல் ஆனாலும் தெலுங்கு கன்னட வரலாற்று

மூலம் கொண்ட அத்தனைச் சாதிகளும் அரசியல் உரிமையற்று வயிற்றுப்பிழைப்பை மட்டும் தமிழ்நாட்டுக்குள் பார்க்க வேண்டும் என புதிய ராஜபக்சே அரசியலை முன்வைக்கிறது.

ஒரு தேசிய இனம் என்பது இனவரையறையில் ஜனநாயகப் ; பூர்வ முடிவையே எடுக்க முடியும். சாதி, மதம் என தாம் விரும்புவதை அடையாளப்படுத்தி;க் கொள்ளும் உரிமை போன்றே தேசிய இனத்தையும் அடையாளப்பபடுத்திக் கொள்ளும் உரிமை ஒவ்வொருவரின் தேர்வு சம்மந்தப்பட்டதும் ஆகும். நூற்றாண்டுகளுக்கு முன்பே பல்வேறு அரசியல் பொருளியல் நிலைமைகளின்கீழ் வந்து குடியேறிய மக்களின் தன்விருப்புரிமையின் அடிப்படையிலேயே அவரின் தேசிய இனம் அடையாளப்படுத்த வேண்டும். தமக்கு மொழிச்சிறுபான்மையினர் அந்தஸ்து கேட்கும் மக்களை அந்த நிலையில் வைத்து அதற்கான உரிமைகளுடன் நடத்தலாம்.

இரண்டாவதாக மொழியைப் பொருத்தளவில் ஒருவரின் வாழ்க்கை மொழியே தேசிய பொது;மொழியாகும். அவர் தனது வீட்டுக்குள் எந்த மொழி பேசினாலும் அவரது வாழ்க்கை மொழியே தாய்மொழி ஆகும். எனவே அவ்வாறு வீட்டளவில் தாய்மொழி பேசும் அனைத்து வேற்று தேசிய இன வரலாற்று மூலம் கொண்ட மக்களை அந்நியராக நடத்த வேண்டும் என்பது போலித்தேசியவாதம். அது அப்பட்டமான பெருஞ் சாதிவாதமே. எனவே இந்த போலித்தமிழ்தேசிய அரசியலை முன்வைத்துவரும் சீமான் தனது தேர்தல் அறிக்கையில் இந்த வெறிகக்கும் விளக்கங்களை அடக்கி வாசித்திருக்கிறார். ஓரிரு மேற்கோள்களைத்தவிர வேறு விசமப்பிரச்சாரங்கள் இல்லை. ஏனெனில் முதல்வர் கனவில் அவருக்கும் எப்படியாவது ஓட்டுக்களைக் கூட்டிக்கொள்ள வேண்டும்.

அவரது தேர்தல் அறிக்கை "மாற்றம் ஒன்றே மாறாதது" என்ற மார்க்சின் மேற்கோள் ஒன்றை மட்டும் தேர்தல் தலைப்புகளாக புதிய முதல்வர் போட்டியாளர் கட்சிகளான பா.ம.க, நாம் தமிழர் அறிக்கைகளில் முதல் பக்கங்களில் போட்டுள்ளார்கள். அம்பேத்கர் நாம் தமிழர் அறிக்கையின் கடைசிப்பக்கத்தில் "அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றாமல் ஒன்றும் ஆகப்போவதில்லை" என்று சொல்கிறார். பெரியாரைக் காணவில்லை.

இடஒதுக்கீட்டு அரசியலின் தமிழக வரலாற்றின் பெருமைமிகு மரபை, அறிக்கையில் தீவைக்காத குறைதான். ஒரு வரி கூட மருந்துக்கும் இல்லை. மற்றொரு புறம் ஆர்.எஸ்.எஸ்ஸை மிஞ்சும் திட்டம் ஒன்றை போகிற போக்கில் கொளுத்திப் போடுகிறது அறிக்கை. அதாவது தமிழ்நாட்டில் எஸ்.சி, எஸ்,டி, எம்.பி;.சி, பி.சி என இடஒதுக்கீடு பெற்றுவரும் சாதிகள் 200 இருக்கின்றன. அவற்றில் 100க்கும் மேற்பட்ட சாதிகளை நீக்க வேண்டி இருக்கிறது என்கிறது அறிக்கை.. இது சீமான் அரசியலின் பாசிசக் கோரம்.

மற்றபடி தமிழகத்தின் பல சுற்றுச்சூழல் இயக்கங்கள் இயற்கை வேளாண் இயக்கங்கள் போன்ற பல்வேறு தரப்பினரின் ஆலோசனைகள் தேர்தல் அறிக்கையில் சேர்;க்கப்பட்டுள்ளன. வழக்கம் போல ஈழம், தமிழ் ஆட்சிமொழி, ஆற்றுநீர் உரிமை போன்ற முழக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சீமானின் அரசியல் நகர்வும்; பா.ம.கவின் அரசியல் நகர்வும் ஒரே பிரச்சனையை இரு முனைகளில் இருந்து பேசுகின்றன. பா.ம.க தன் சாதிய நிலையில் இருந்து சமூகஜனநாயக அரசியல் என்று சொல்லி கார்ப்பரேட் அரசியலில் மிதவாத சேவையைப் பேசுகிறது.. நாம் தமிழர் கட்சி கார்ப்பரேட் அரசியலை நிலவுகிற சாதி - மத - இன அடையாள அரசியலை மொத்தமாக ஒரு கலக்கு கலக்கி பெருந்தமிழ்ச்சாதி அடையாளம் பேசி குறுக்குவழியில் முதல்வர் பதவிக்கு முயற்சிக்கிறது.. இவர்களின் அரசியலின் உண்மையான நிலையில் அர்த்தத்தில் இருந்து நோக்குகையில் பா.ம.க நாம்தமிழர் இரண்டு கார்ப்பரேட் முதலாளித்துவ எதிர்ப்பு அரசியலை மடைமாற்றி தாழ்த்தப்பட்டோரையும் தமிழ்தேசியமக்களைப் பிளவுபடுத்தியும் எதிரிகளாக சித்தரிக்கின்றன. முடிவில் முதலாளிகளிடம் மண்டியிடுகின்றன. அடையாள அரசியல் பிழைப்புவாதிகளின் பட்டியலில் சீமான் மிகக் குறுகிய காலத்தில் நுழைந்திருப்பதில் ஒரு சினிமாக்காரரின் அவசரம் தெரிகிறது.

மீண்டும் அவர்களின் அறிக்கைகளின் முதல்பக்கத்தின் படிஞ் மாற்றம் ஒன்றே மாறாதது காத்திருப்போம்.

## சாதியக் கட்சிகள்

சுதந்திர இந்தியாவில் 1952ல் தமிழ்நாடு முதல் தேர்தலை எதிர் கொண்டது. சுதந்திரம் பெற்ற பின்னணியில் காங்கிரஸ் கட்சி

இந்தியா முழுவதும் செல்வாக்கு பெற்றிருந்தது. தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சிக்கு அடுத்ததாக கம்யூனிஸ்ட் கட்சி செல்வாக்குடன் இருந்தது. திமுக சந்தித்த இந்த முதல்; தேர்தலில் அது நேரடியாக வேட்பாளர்களை நிறுத்தவில்லை.

சுஜீதம்பரம், கடலூர், விழுப்புரம் பகுதிகளில் ராமசாமி படையாட்சியாரால் நடத்தப்பட்டு வந்த வன்னியர் சங்கம், உழைப்பாளர் கட்சியாக உருமாறி இந்தத் தேர்தலை எதிர்கொண்டது. வன்னிய சமுதாய மக்கள் செல்வாக்கு பெற்ற மாணிக்கவேல் நாயக்கரின் தலைமையில் இயங்கிய பொதுநலக் கட்சியும் (உழஅஅழஸீ றநடட ஜீயசவல) தேர்தலில் போட்டி-யிட்டது. இத்தேர்தலில் ஆதரவளிக்க திமுக சில நிபந்தனைகளை விதித்தது. திராவிட நாடு ஆதரவு, சட்டமன்றம் நாடாளுமன்றத்தில் திராவிடநாட்டுக் கொள்கைக்காக போராடுவது, காங்கிரசையும் அதன் சுரண்டல் மற்றும் எதேச்சதிகாரப் போக்கை எதிர்ப்பது போன்ற நிபந்தனைகளை விதித்தது. இவற்றை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் இவ்விரு கட்சிகளுக்கும் திமுக ஆதரவு அளித்தது. கம்யூனிஸ்ட் கட்சி இந்நிபந்தனைகளை ஏற்கவில்லை.

திராவிடர் கழகம் ஏற்படுத்தியிருந்த திராவிடஉணர்வும், திமுக ஆதரவும் தமிழ்நாடு உழைப்பாளர் கட்சிக்கு போட்டி-யிட்ட 34 சட்டமன்ற இடங்களில் 19 இடங்களில் வெற்றியைத் தந்தது. இதில் 11 பேர் வன்னியர், 6 பேர் தலித்துகள், பிற்பட்ட சாதிகளிலிருந்து 2 பேர் என்று வெற்றி பெறுகின்றனர். அதைப் போன்றே பொதுநலக் கட்சி தான் போட்டியிட்ட 13 இடங்களில் 6 இடங்களில் பெற்றிபெற முடிந்தது. இத்தேர்தல் அன்றைய சென்னை மாகாண அளவில் இருந்த ஆந்திரா, கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு அளவில் நடைபெற்றது. ஒரேநேரத்தில் நாடாளுமன்றத்திற்கும் மாகாண சட்டசபைகளுக்கும் நடைபெற்ற இத்தேர்தலில் காங்கிரஸ் இரண்டிலும் மாபெரும் வெற்றி பெற்றது.

மாகாணசட்டசபைத் தேர்தலில் போட்டியிடாத ராஜாஜியை முதல்வராகக் கொண்டு சட்டமன்றம் கூட்டப்பட்டது. 1954 ல் ராஜாஜி கொண்டுவந்த குலக்கல்வித் திட்டம் காமராஜர் உட்பட அனைவராலும் எதிர்க்கப்பட்டது. எனவே ராஜாஜி தனது செல்வாக்கினை இழந்து பதவியிழக்கிறார். காமராஜர் முதல்வராகிறார். 1957 தேர்தலிலும் காமராஜரை முதல்வர் வேட்பாளராக காங்கிரஸ் முன்னிறுத்தியது. இதில் திராவிடநாட்டுக்

கோரிக்கை, குலக்கல்வி எதிர்ப்பு, 56ல் மொழிவாரி மாநிலம் உருவாக்கப்பட்ட பின்னணியில் எல்லைகாப்பு உரிமைப் போராட்டம் போன்ற பல்வேறு கோரிக்கைகளை எழுப்பிய திமுக வளர்ச்சி கண்டது. இதன் விளைவாக இத்தேர்தலில் தி.மு.க முதன்முறையாகப் போட்டியிட்டு 15 இடங்களையும் நாடாளுமன்றத்தி;ல் 2 இடங்களையும் கைப்பற்றியது.

1962 தேர்தல் பல திருப்புமுனைகளைக் கண்டது. 1957 இடைத்தேர்தலில் நடைபெற்ற இந்தியளவில் கவனம் பெற்ற முதுகுளத்தூர் கலவரம் காமராஜருக்கு பெரும் சரிவை உண்டாக்கியது. திமுகவிலிருந்து ஈவிகே சம்பத் பிரிந்து சென்று தமிழ்தேசக்கட்சியைத் தொடங்குகிறார். அதே போல் குலக்கல்வித்திட்டம் காரணமாக ஒதுக்கப்பட்ட சுதந்திரா கட்சியைத் தொடங்கிய ராஜாஜி இத்தேர்தலில் போட்டியிட்டார். இதில் போட்டியிட்ட திமுக 50 இடங்களில் வெற்றிபெற்றது. அடுத்துவந்த 1967 தேர்தலுக்கு முன்பு இந்திய சீனப் போர்நடந்துவந்த நிலையில் உள்நாட்டில் பிரிவினைக் கோரிக்கையை முன்வைத்தக் கட்சிகளை தேசபக்தியின் பெயரால் அச்சுறுத்தி காங்கிரஸ் அரசு தடைச்சட்டம் கொண்டுவந்தது.

1965ல் கொண்டுவரப்பட்ட இந்தி ஆட்சி மொழி மசோதா தமிழகத்தில் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்த 67 தேர்தலில் காமராஜர் திமுகவைச் சேர்ந்த மாணவத்தலைவர் சீனிவாசனிடம் தோற்றார். திமுக ஆட்சியைக் கைப்பற்றியது. 1977ல் எம்ஜிஆர் ஆட்சிக்கு வருகிறார். அங்கிருந்து திராவிட அரசியல் மிகப்பெரும் சரிவை சந்திக்கிறது. அதுவரை செல்வாக்கில் இருந்த திராவிட அரசியல் பின்தள்ளப்பட்டு தனிநபர் துதி அரசியலாக அனைத்தும் மாறியது. இது திமுகவையும் தொற்றியது. அதைத் தொடர்ந்து அடையாள அரசியல் முன்னுக்கு வரத்தொடங்கியது.

1980 களில் முக்குலத்தோர் வாக்குகளை மட்னைனைடுமே நம்பி உருவான கட்சி, பசும்பொன் பார்வர்ட் பிளாக். ஆனால் அக்கட்சியால் செல்வாக்கு பெறமுடியவில்லை.

தொடர்ந்து வந்த தேர்தல்களில் சாதிச் சங்கங்கள் தேர்தலில் போட்டியி;ட்டோ அல்லது ஆதரவளித்தோ செல்வாக்கு பெற முயன்றன. திராவிடக் கட்சிகளும் பெரும்பாலும் வேட்பாளர்களை தொகுதிகளின் சாதியடர்த்தியின் அடிப்படையில் நிறுத்தின.

மாறிமாறி திமுக, அதிமுக தந்த மோசமான ஆட்சியின்

விளைவால் மக்களிடம் அவ்விரு கட்சிகளும் செல்வாக்கினை இழந்தன. கம்யூனிஸ்ட் கட்சிகளால் அந்த இடத்தை நிரப்ப முடியவிலலை. இந்தச் சூழு;நிலையில் 1991ல் இடஒதுக்கிடு போராட்டத்தில் ஈடுபட்டு வெற்றி பெற்ற வன்னியர் சங்கம் பாட்டாளி மக்கள் கட்சி என்ற பெயரில் தேர்தலுக்குள் நுழைந்தது. வன்னியர்களின் கணிசமான ஆதரவு இந்தக் கட்சிக்கு இருந்தது. தனித்து தேர்தலில் 194 இடங்களில் போட்டியிட்டது, ராஜீவ்காந்தி மரணம் காங்கிரசுக்கு அனுதாப அலையையும் திமுகவிற்கு எதிரான மனோநிலையையும் உருவாக்கியது. காங்கிரசுடன் கூட்டணி வைத்த அதிமுக வெற்றி பெற்றது. 194 இடங்களில் போட்டியிட்ட பாமக ஒரு இடத்தில் மட்டும் வெற்;றி பெற்றது.

1996ல் அடுத்து வந்த தேர்தலின் போது பாமகவில் இருந்து விலகி பண்ருட்டி ராமச்சந்திரன் மக்கள் உரிமைக் கழகம் என்ற பெயரில் தனிக்கட்சி ஆரம்பித்தாலீ. அத்தேர்தலில் திமுகவுக்கும் பாமகவுடன் கூட்டணி பேச்சுவார்தை நடைபெற்றது. பாமக தனித்துப் போட்டியிட்டு 4 இடங்களில் வென்றது.

2001 தேர்தலில் அதிமுக வலுவான கூட்டணி அமைத்திருந்ததால், திமுக, பாமக மற்றும் தலித் மக்களின் பிரி-நிதிகள் பலம் பெற்றிருந்த விடுதலைச்சிறுத்தைகள் கட்சியையும் புதியதமிழகம் கட்சியையும் தன்னுடன் இணைத்துக்கொண்டது. அது மட்டும் அல்லாமல் யாதவர்கள் சமூகக் கட்சியான மக்கள் தமிழ் தேசம், முதலியார்கள் கட்சியான புதியநீதிக்கட்சி , அகமுடையார் சமூகத்தின் கு.ப.கிருணஷ்ணனின் தமிழர் பூமி ஆகியவற்றை இணைத்துக் கொண்டது. ஆனால் திமுகவால் கணிசமான இடங்களைப் பெறமுடியவில்லை. டான்சி வழக்கில் தண்டிக்கப்பட்ட காரணத்திற்காக ஜெயலலிதா தேர்தலில் போட்டி-யிடாத போதும் அதிமுக தேர்தலில் பெருவாரியாக வெற்றி பெற்றது.

கட்சிகளாக உருமாறிய சாதிச்சங்கங்கள் அனைத்தும் பாமக அளவிற்கு செல்வாக்கு பெற்றுவிடவில்லை. எடுத்துக்காட்டாக மூவேந்தர் முன்னேறக்கழகம், தேவர்பேரவை முத்தரையர் சமூகத்தின் சிங்கத்தமிழர் முன்னேற்றக்கழகம், தேசிய ஜனநாயகப் பேரவை, நாடார் வாக்குகளை முன்னிறுத்தி சரத்குமாரால் உருவாக்கப்பட்ட சமத்துவ மக்கள் கட்சி அதிலிருந்து முளைத்த பெருந்தலைவர் மக்கள் கட்சி, உடையார் சாதிக்கட்சியாக இந்திய ஜனநாயகக் கட்சி

நேற்றுப் பெய்த மழையில் முளைத்த காளானாக நடிகர் கருணாசின் முக்குலத்தோர் புலிப்படை போன்றவைகளால் தங்கள் சொந்த சமூக மக்களிடம் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தமுடியவில்லை.

கொங்கு பகுதியில் நிலவுடைமையாளர்களாகவும் வணிகர்களாகவும் தொழிலதிபர்களாகவும் அதிகாரம் மிக்கவர்களாக இருந்து வரும் கவுண்டர்களில் புதுப்பணக்கார அரசியல் பிழைப்புவாதிகள் தங்கள் சாதிச்சங்கங்களை அரசியல் கட்சிகளாக உருமாற்றி தனித்தும் திமுக அதிமுக பிஜேபியுடன் கூட்டணிவைத்தும் தேர்தலில் போட்டியிடுகின்றன. கொங்குமக்கள் பேரவை, கொங்குநாடு மக்கள் கட்சி, கொங்கு இளைஞர் பேரவை என்று பலப்பலக் கும்பல்களாக பிரிந்து வருகின்றன.

சாதியவாதத்தை முன்னிறுத்துகிற கட்சிகள் இந்துத்துவத்தில் சங்கமிக்கின்றன. இவர்கள் பிரதேசம் சார்ந்த கோரிக்கைளை முன்னிறுத்துவது, வளர்ந்துவரும் தலித் மக்களை எதிரிகளாக சித்தரிப்பது, கலாச்சாரக் காவலர் வேடம் போடுவது, பெண்களின் நடமாட்;டங்களைக் கண்காணிப்பது ஒடுக்குவது, வன்கொடுமைத்தடுப்புச்சட்டத்தை நீக்கக் கோருவது, ஆண்டபரம்பரை என்று பேசித்திர்ஜீவது, என்பதையே வேலைத்திட்டமாக முன்வைத்து அணிதிரட்டுகிறார்கள். தங்கள் சொந்த சாதி வாக்குவங்கிகளை நம்பி உருவான இக்கட்சிகளுக்கு தேர்தலை சந்திக்கும் போது தமிழ் அடையாள முகமூடி தேவைப்படுகிறது.

விவசாயத்தின் வீழ்ச்சி, வேலையின்மை, கைத்தொழில் நசிவு ஆகிய காரணங்களால் உழைக்கும் மக்கள் கடைசிப்புகலிடமாக இருக்கும் சாதி அடையாளத்தின் பின் அணிதிரள்வது ஒருபுறம் நடந்தாலும் சொந்த நலன்களை மட்டும் முன்னிறுத்தி நகரும் சாதியத்தலைவர்கள் மேல் நம்பிக்கையிழந்து வருகின்றனர். திமுக ஆதிமுக போன்ற கட்சிகளைப் போலவே சாதிக்கட்சிகளும் சரிவுகளை சந்திப்பதன் விளைவே பல குழுக்களாகப் பிரிந்து போகின்றன. சாதிக்கட்சிகளில் இருப்பதில் பலன் ஏதும் பெறமுடியாத மக்கள் அதனோடு ஐக்கியப்பட முடியாமல் புதிய மாற்று ஒன்றைத் தேடுகின்றனர். தேமுதிக வடமாவட்டங்களில் பாமக விடுதலைச்சிறுத்தைகளைப் பின்தள்ளிப் பெற்ற வாக்குகள் உதாரணம்.

*இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தின் போது தமிழகத்தில் தேசியவிடுதலை அரசியல் செல்வாக்கு செலுத்தியது. மொழியுரிமைப் போராட்டத்திற்குப் பின் எழுந்த மொழியுரிமை அரசியலும் அதனடிப்படையில் எழுந்த தமிழ்தேசிய அரசியல் உணர்வும் தமிழகத்தில் செல்வாக்கு செலுத்தி வந்தது. தற்போது வளர்ச்சி அரசியலின் பேரால் அதேகட்சிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. இந்த அரசியல் போக்கின் தொடர்ச்சியாக சாதிகடந்த அரசியல் மரபே தமிழகத்தில் செல்வாக்கு பெற்ற அரசியல் மரபாக நீடித்துவருகிறது. இது எதிர்காலத்தில் சாதிகடந்து வர்க்கப் போராட்டம், தமிழ்தேசிய உரிமைப் போராட்டம், சூழலியல் பிரச்சனைகள், போன்ற பொது அரசியல் போக்கில் பயணிப்பதற்கான நம்பிக்கைகளை அதிகரிக்கிறது.*

## மாற்று இயக்கங்கள்

**பச்சைத் தமிழகம் கட்சி:**

*பசுமை அரசியலைப் பிரதானமாகக் கொண்டு மேற்குலகில் உருவான பசுமைக் கட்சிகளில் மிகப்பெரிய கட்சி ஜெர்மனியின் பசுமைக் கட்சியாகும்.அணு உலை திட்டங்களை எதிர்ப்பது,சமாதனத்திற்காகப் போராடுவது என்ற முழக்கத்துடன் அரசியல் அரங்கில் நுழைந்த இக்கட்சி,பிரதான சிக்கலாக உருவெடுத்துள்ள சூழலியல் பிரச்சனைகளை முன்னுணர்ந்து சோஷலிசக் கட்சியுடன் கூட்டணியமைத்து 90களின் இறுதியில் ஆட்சியில் பங்கேற்றது.*

*இப்பசுமைக் கட்சியின் அழுத்தங்களின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சில மேம்போக்கான சீர்திருத்தங்கள் பல சூழலியலாளர்களை ஈர்த்தது. அவ்வகையில் இக்கட்சிகளை முன்மாதிரியாகக் கொண்டு தமிழகத்தின் சூழல் பிரச்சனைகளை பிரதான அரசியலாகக் கொண்டு திரு சுப உதயகுமார் தொடங்கிய கட்சிதான் பச்சைத் தமிழகம் கட்சி.*

*சூழலியல் பிரச்சனைகளுக்கு நிலவுகிற அரச அமைபிற்குள்ளான சீர்திருத்தவாதம் பேசியும் நீண்டகால இலக்குகளை கவனத்தில் கொள்ளாமை, திரளான மக்கள் போராட்டத்தை நிராகரிப்பதும் பசுமை கட்சிகளின் போதாமைகள் பச்சைத் தமிழக கட்சியிலும் தொடர்கிறது. எனவே இப்பசுமை இயக்கங்கள் முன்வைக்கிற காந்திய வழியிலான சனாதன,தாராள ஜனநாயகவாத அரசியல்*

தீர்வுகளை முழக்கங்களை விமர்சனப்பூர்வமாக அணுக வேண்டியத் தேவை உள்ளது.

அமைதிப் புரட்சியின் பலவீனமான கோட்பாட்டாளர் என கிராம்சியால் விமர்சிக்கப்பட்ட காந்தியின் அறக் கோட்பாடுகளை நிலவுகிற சூழலியல் சிக்கல்களுக்கு எதிராகக் கோட்பாட்டுத் தளத்திலும் அரசியல் தளத்திலும் நிறுத்துகிற போக்கின் தொடர்ச்சியாகத்தான் பச்சைத் தமிழகத்தை பார்க்கவேண்டியுள்ளது.

அரசியலையும் இறையியல்வாதத்தையும் சிக்கலான வகையில் இணைக்கிற காந்தியக் கோட்பாட்டை,(மேற்குலக பசுமைக் கட்சி மாதிரியை முன்னுதாரனமாகக்கொண்டு) அடித்தளமாகக் கொண்டு இங்கு கட்டப்படுகிற பசுமை அரசியல் இயக்கங்களானது, பொதுவாக இந்தியப் பிரத்யேகங்களையும் இந்திய ஒன்றியத்தின் போலியான ஜனநாயகத்தையும் கவனத்தில் கொள்வதாகத் தெரியவில்லை.அப்படி கண்டுகொண்டாலும் கண்டும் காணாமையாகவோ அல்லது கண்டும் போதாமையாக இருப்பதாகவே தெரிகிறது.இதில் பச்சைத் தமிழகமும் விதி-விலக்கல்ல!

ஆளும் வர்க்கத்தை பொது எதிரியாக அடையாளம் காட்டாமல் மேற்குலக எதிர்ப்பு மற்றும் தொழில்மய எதிர்ப்பில் நிலவுகிற அனைத்து சிக்கல்களையும் சுருக்குகிற காந்தியப் பொருளாதார மாற்றுதான் எவ்வளவு பிற்போக்கானது.

காந்தியப் பொருளாதாரத்தின் அடிப்படையில் பசுமை அரசியல் பேசுகிற பசுமை இயக்கங்களின் போதாமையாக

நிலவுகிற தாராள சனநாயக சீர்திருத்தங்களே சமூக முரண்பாடுகளை கலையவல்ளது என்ற நம்பிக்கைகளை விதைப்பது.

இடதுசாரி தத்துவத்தையும் நடைமுறையையும் வன்முறை வடிவம் என்று இயல்பாக கடந்து போவது.

கிராமத்திற்கு திரும்புதல் என ஒட்டுமொத்த அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிகளை நிராகரிப்பது

தனி நபர் ஒழுக்கநெறி,அமைதி,சமாதானம் என புனித அரசியல் பசுக்களாக தோன்றி ,பிரச்சனையின் வேறாக சுரண்டுகிற முதலாளிய சனநாயக அமைப்பை காத்துப் பேணுவது

சுத்த இனவாதம் பேசியும், மொழித் தூய்மைவாதம் பேசியும் அடையாள அரசியலை முன்னெடுத்தவர்கள் இன்று

*சூழலியல் சிக்கல்களுக்கு இனவாத அரசியல் சாயத்தை பூசிவருகின்றனர்..இந்திய ஒன்றியத்தில், தமிழர்களுக்கு எதிராக மட்டுமே ஆபத்தானத் திட்டங்களை மெனக்கெட்டு இந்திய அரசு கொண்டு வருவதாக கூறுகின்றனர்.*

*இப்படியான பச்சைத் தமிழ்த் தேசிய அணியினரில் பச்சை தமிழகம் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் தோழர் சுப உதயகுமாரும் அக்கம் பக்கமாக இணைந்துவிட்டதாகவேத் தெரிகிறது. வடகிழக்கு மாகாணங்கள்,காஷ்மீர் பள்ளத்தாக்குகள்,தக்கான பீடு பூமி,என அனைத்து பிராந்தியத்தில் வாழ்கின்ற மக்களின் வாழ்நிலைமைகளையும் புறச்சூழலையும் வேகமாக தனது லாப நோக்கத்தின் பொருட்டு இந்திய/பன்னாட்டு முதலாளித்துவ சக்திகள் அழித்தொழிக்கின்றன.அதற்கிசைவான ஜனநாயக அரசியல் கேடயமாக காங்கிரஸ் அரசு பா ஜ க அரசு செயல்படுகிறது. ஆளும் வர்க்கத்திற்கும் அதன் நலன் காக்கிற இவ்வரசுக்கும் தமிழனும் காஷ்மீரியும் மணிப்பூரியனும் ஒன்றுதான்.ஜார்கண்ட்,சத்திஸ்கரில் கனிமவளங்களை சூறையாடுவதும் இவ்வர்க்கம் தான் ,குஜராத் சதுப்பு நிலத்தை அழித்ததும் இம்முதலாளித்துவ வர்க்கம் தான். தமிழகத்தின் கனிம வளங்களையும்,நிலத்தடி நீரையும் சுரண்டுவதும் இவ்வர்க்கம்தான்.*

*ஆளும் வர்க்கத்திற்கு எதிரான சூழலியல் போராட்டமானது அடிப்படையில் ஓர் வர்க்கப் போராட்டமாகும்.நில அபகரிப்பு சட்டத்தால் நிலம் இழந்த உழைக்கும் மக்களுக்கும் ஆளும் வர்க்கத்திற்குமான போராட்டமாகும்.இவ்வர்க்கப்போரட்டத்தில் நாம் ஆளும்வர்க்கத்திற்கு எதிராகத் தான் போராடுகிறோம்,ஏனெனில் நமது நிலைக்கு அதுதான் காரணமாக இருக்கிறது என்கிற தெளிவு அவசியமான முன் நிபந்தனையாகும்.மாறாக நமது போலித் தமிழ் தேசிய குழுவினர் பொது எதிரியை ஆளும்வர்க்கமாக நிறுத்தாமல் ஆளும்வரக்கத்தின் கருவியாக செயல்படுகிற அரசையும் பக்கவாட்டில் அண்டை தேசிய இன மக்களையும் பகையாளியாக முன்னிறுத்துகிறது.இவர்களின் வரையறைப்படி பார்த்தால்,இந்தி பேசுகிற முதலாளிக்கு பதிலியாக தமிழ் தேசிய முதலாளி தமிழகத்தின் இயற்கை வளங்களை சுரண்டினால் நியாயம் என்றல்லவா ஆகிறது.!*

*முன்னதாக,2011 இல்புகுசிமா அணு உலை விபத்துக்கு பிறகு மக்களால் மிக வீரியமாக முன்னெடுக்கப்பட்ட கூடங்குளம்*

அணு உலைக்கு எதிரான மக்கள் போராட்டத்தை மூன்று வருடமாக வழி நடத்திய வகையில் முக்கிய ஜனநாயக ஆற்றலாக அடையாளப்பட்டவர் சுப உதயகுமார். நாடாளுமன்றத் தேர்தலில் ஆம் ஆத்மி வேட்பாளராக கன்னியாகுமாரியில் நின்ற சுப உதயகுமார்,பின்னர் அக்கட்சியுடன் ஏற்பட்ட முரண்பாட்டால் பச்சைத் தமிழகத்தை தொடங்கி தற்போது இராதாபுரம் தொகுதியில் நிற்கிறார்.

**திராவிடர் விடுதலைக்கழகம்:**

திராவிடர் விடுதலைக்கழகம் சாதி ஒழிப்பு உள்ளிட்ட சமூக மாற்றமேமுதன்மை என்ற பெரியாரின் கொள்கை வழி நடக்கும் ஒரு இயக்கம்.தேர்தல் பங்கேற்பு என்பது அவர்கள் கொள்கை அளவில் நிராகரித்த ஒன்று.ஆனால்,சமூக மாற்றங்களுக்கான மக்கள் திரள் போராட்டத்தை கட்டி அமைக்க,சமூக நீதி உரிமைகளை பாதுகாக்க நாடாளுமன்ற,சட்டமன்ற அமைப்புகளில் திராவிட இயக்க சமூக நீதி,சாதி ஒழிப்பு உள்ளிட்ட கொள்கையோடுஉடன்படுகிறநட்பு சக்திகள் செல்வது ஒரு துணை செய்யும் என்ற அளவில் தேர்தல் கட்சிகளுக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. இந்த ஆதரவு இரண்டு நிலைகளில் உள்ளது.

முதலாவதாககொள்கைஅளவில் உடன்பட்ட எந்த கூட்டணியும் இல்லை.எனவே,சாதிய ஒடுக்குமுறைகள்,சாதி ஆணவ படுகொலைகள்,பார்ப்பன மதவாத சக்திகளுக்கு எதிரான இயக்கங்கள் போன்றவற்றில் தங்களோடு இணைந்து போராடிய கட்சிகளின்வேட்பாளர்களை ஆதரிப்பது.அந்த அளவில் சி.பி.ஐ. சி.பி.எம் விடுதலை சிறுத்தைகள் கட்சி,மனிதநேய மக்கள் கட்சி வேட்பாளர்களை ஆதரிப்பது.

இரண்டாவது அ.தி.மு.கவின் ஆட்சி தொடரக்கூடாது. அதற்கு காரணமாக அரசியலை மதத்தோடு இணைத்தது,மதவாத சக்திகளுக்குஆளும் வர்கத்தின் ஆதரவு,திராவிட இயக்கத்தின் போராட்டங்களுக்கு ஆதரவு மறுத்தது,அடக்குமுறை சட்டங்களை ஏவி விட்டு சனநாயக முறைக்குள்ளேயே சர்வாதிகாரத்தை கட்டமைத்தது போன்ற காரணங்களுக்காகஅ.தி.மு.க அரசை வீழ்த்துவது.எனவே அ.தி.மு.க வீழ்த்தக்கூடிய கட்சியாக உள்ள தி.மு.க விற்கு ஆதரவு.

இத்தேர்தலில்கொள்கை அளவில்,மாற்று அரசியல் என்ற அளவில் எந்த அணியும் இல்லைஎன்ற போதும் அ.தி.மு.க,

தி.மு.க வுக்கு மாற்று என்ற அளவில் பல்வேறு கட்சிகள் கூட்டணியாகவோ,தனித்தோ நின்று தமிழகமக்களின் மாற்று அரசியல் என்ற கனவுக்கு ஒரு வடிவத்தை கொடுக்க முயற்சி செய்திருக்கின்றன.

தி.மு.கவோ, அ.தி.மு.கவோ இரண்டும் கட்சிளும் பெருமுதலாளித்துவ நிறுவனங்களாக, பெருமுதலாளிகளாகமாறி, ஊழலை நிறுவனமயப்படுத்தி மாநில மக்களின் நலனை, உரிமைகளை ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் இந்திய அரசிடம் அடகு வைத்தவை.உண்மையில்தொடக்கப்பட்டபோது குறைந்த பட்ச சமூக நீதியின் குரலாக இருந்த தி.மு.க சாதி ஆணவக்கொலைகள் வெளிப்படையாகநடைபெறுகிறஇன்றைய காலகட்டத்தில்தன் சாதிய சமூக அடித்தளத்தை காக்கும்பொருட்டு மௌனமாக இருப்பதன் மூலம் பெண்ணுரிமைக்குஎதிரான சாதிய ஒடுக்குமுறைக்கு ஆதரவான நிலையை எடுத்துள்ளது.

சமூக நீதி கோரிக்கையான இட ஒதுக்கீடு உரிமை என்பதுஇச்சமூகத்தின் ஒடுக்கப்பட்ட மக்களின் கோரிக்கை. அதை மக்கள் போராட்டங்கள் மூலமே பாதுகாக்க முடியும். ஒரு இனப்படுகொலையை கூட கண்டு எந்த சலனமும் அடையாத திராவிட இயக்க அரசியலின் வெறும்“மிச்ச சொச்ச” அடையாளமாக ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ள இந்திய வல்லாதிக்கத்திடம்சரணாகதி அடைந்த தி.மு.க வை தூக்கி சுமப்பதன் மூலம் அல்லபெரியாரின் சமூக விடுதலை அரசியலை முழு வீச்சாக மக்களிடம் கொண்டு சேர்ப்பதன் மூலம் திராவிட இயக்க கருத்தியலுக்கு பார்பனிய சக்திகள் கொடுக்கும் நெருக்கடியை முறியடிக்க முடியும். திராவிடர் விடுதலை கழகம் தி.மு.க ஆதரவு நிலையை மறு பரிசீலனை செய்ய வேண்டுகிறோம்.

தி.மு.க ஆதரவு என்ற நிலையைத்தவிர்த்து திராவிடர் விடுதலை கழகத்தின் தேர்தல் நிலைப்பாடு என்பது இன்றைய காலச்சூழலில் இடது சாரி சனநாயக சக்திகள் போராட்டக் களத்தில் ஒன்றிணைய வேண்டிய தேவை உள்ளது என்ற அடிப்படையில் வரவேற்க தக்க முடிவு ஆகும்.

**தேர்தல் புறக்கணிப்பு**

தமிழ்நாட்டில் தேர்தல் புறக்கணிப்பு என்ற நிலைப்பாட்டை சில இடது சாரி, தமிழ் தேசிய இயக்கங்கள் நீண்ட காலமாக

பல்வேறு கோட்பாட்டு காரணங்களை முன்வைத்து எடுத்து வருகின்றன.

முதலாவதாக தமிழ்நாட்டில் தற்போது தமிழ்த்தேசிய அரசியல் எழுச்சி பெற்று வரும் கால கட்டத்தில் இருக்கிறது. பொதுவாக தேர்தல் பங்கேற்போ அல்லது புறக்கணிப்போ எது தேசிய விடுதலை போராட்டத்திற்கு துணை புரியுமோ அதைப் பின்பற்றுதல் நலம். ஆனால், தேசிய இனங்களின் சமத்துவம் என்பது கோட்பாட்டளவிலேயே ஏற்றுக்கொள்ளப்படாத ஒரு அரசியல் அமைப்பில், நாடாளுமன்றத்தில், சட்டமன்றத்தில் தேர்தல் மூலம் பங்கெடுத்து ஒரு தேசிய இனத்தின் உரிமைகளை நிலை நாட்டுவது எனக் கூறுவது போகாத ஊருக்கு வழி சொல்வது போல் ஆகும். மேலும் இந்த தேர்தல் முறை என்பது சீரழிந்து போன ஒன்று. இத்தேர்தலில் செயல்யுக்தியாக கூட பங்கு கொள்வதால் நம் போராட்டத்திற்கு எந்த பலனும் இல்லை, எனவேஎழுந்துள்ள கோரிக்கைகளுக்காக மக்கள் திரள் போராட்டங்களை கட்டமைப்பதன் மூலம் தமிழ்த் தேசிய இனஉரிமை போராட்டத்தை வலுவாக்குவது நன்று.எனவே அதுவரை தேர்தலை புறக்கணிப்பது.

இரண்டாவதாகமக்களுக்கு இத்தேர்தல் என்பது ஒரு சடங்காகவே மாறி விட்டது.இந்த அரசின் அனைத்து உறுப்புகளும் அதற்குரிய வரையறை செய்யப்பட்ட பணிகளை செய்யாது தோற்றுப் போய்விட்டன.மேலும் இத்தேர்தலில் பங்கெடுப்பது என்பதன் மூலம் இந்த அமைப்பின் மேல் ஏதோ ஒரு நம்பிக்கையை வைக்க மக்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.எனவே மக்களின் கோரிக்கைகள் அடிப்படையில் மக்கள் திரள் போராட்டங்களை கட்டமைத்து இத்தோற்று போன அமைப்பிற்குள் இருந்து அவர்களின் உரிமைகளை வென்று எடுக்க முடியாது என்பதை அம்பலப்படுத்த வேண்டும்.மக்கள் பங்கெடுக்கிறார்கள் என்பதற்காக தேர்தலில் பங்கெடுக்கிறோம் என்பது எது முடியுமோ அதைச் செய் என்ற சந்தர்ப்பவாதம் ஆகும். மாற்றாக தேர்தல் புறக்கணிப்பு, மக்கள் போராட்டம் என்பதன் மூலம் இத்தோற்று போன அமைப்புக்கு மாற்றை வளர்த்தெடுக்கும் மாற்று அரசியலை வளர்தெடுக்க வேண்டும்.

**புறக்கணிப்பு மீதான விமரிசனம்**

50 ஆண்டு காலமாக மாற்று அரசியலை முன்வைக்கக்கூடிய

வேறு எந்த வலுவான கட்சியும் இல்லாத காரணத்தால் மாறி மாறி ஆட்சி அதிகாரத்தில் இருந்த தி.மு.க, அ.தி.மு.க இரண்டும் இன்று வாக்கு வங்கியில் இரண்டாம் நிலையில் உள்ள எந்த பெரிய கட்சிகளோடும் கூட்டணி சேர முடியாமல் தனித்து நிற்கின்றன. தாம்தான்அ.தி.மு.க , தி.மு.க விற்கான மாற்று என்று சத்தமிடுகின்ற பல்வேறு கட்சிகள்,கூட்டணிகள் தமிழகத்தேர்தலில் களம் இறங்குகின்றன.இது தமிழகம் சந்தித்திராத ஒரு அரசியல் நிலைமை.இது கண்டிப்பாக தி.மு.க , அ.தி.மு.க விற்கு எதிரான மக்கள் மன நிலையை பிரதிபலிக்கிற ஒரு தேர்தல் சூழல் தான்.50ஆண்டுகளாக ஆண்ட இரு பெரும் திராவிட கட்சிகளின் ஒரு சரிவின் தொடக்கமே.அந்த வகையில் இது மாற்று அரசியல் களத்திற்கான ஆரம்பமே.

தேர்தல் புறக்கணிப்பு என்பது மக்கள் நடவடிக்கையா? அல்லது விடுதலை இயக்கத்தின் நடவடிக்கையா?புறக்கணிப்புஎப்போது வெற்றி பெறும்?

1987 இந்திய-இலங்கை ஒப்பந்தப்படி நடந்தவடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தலும் மாகாண சபையுமே கேலிக் கூத்தாகிப்போனதுதமிழீழ மக்களின் புறக்கணிப்பினாலா அல்லது விடுதலைப்புகளின் புறக்கணிப்பினால் மட்டுமா?

தென் ஆப்பிரிக்க இனவெறி அரசுக்கு எதிராக அதிகாரமற்ற நாடாளுமன்றகளின் தேர்தல் புறக்கணிப்பு வெற்றி பெற்றது விடுதலை இயக்கங்களாலாஅல்லது பெரும்பான்மையான மக்கள் புறக்கணித்ததாலா?

ஒரு அமைப்பு முறையை முழுதுமாக புறக்கணிப்பது,தூக்கி எறிவது என்பது ஒரு போராட்ட வடிவம். அதற்கு பெரும்திரளான மக்கள் பங்களிப்பு வேண்டும்.அந்த மக்களை வழி நடத்தி நம்பிக்கை அளிக்ககூடிய ஒரு வலிமையான இயக்கம் வேண்டும். போருக்கு பின்னர் ஈழத்து மக்களும், இந்திய ராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள காஷ்மீர் மக்களும் ஏன் தேர்தலில் பங்கெடுக்கின்றனர்?

மாற்று அரசியல் என்பது முன்னெப்போதும் இல்லாத அளவு பேசுபொருளாகி உள்ள அரசியல் சூழல் இது.இந்தசீரழிந்து போன தேர்தல் முறையிலும் மக்கள் பங்கெடுக்கும் நிலையில்,வலிமையானபுரட்சிகர மாற்று அரசியல் இயக்கங்கள்ஏதும்தோன்றாத நிலையில், தேர்தலை புறக்கணிக்க

சொல்லி அறைகூவல் விடுப்பது எந்த வகையில் சரியானது?

தமிழ் நாட்டில் இன்றளவில்எந்த கோரிக்கை பெரும்திரளான மக்கள் போராட்டத்தால் வென்றெடுக்கப்பட்டுள்ளது? குறைந்த பட்சம் எந்த கோரிக்கையாவது தமிழ்த் தேசிய கோரிக்கையாக மாறி அதற்கான போராட்டத்தில் பெரும்திரளான மக்கள் பங்கேற்று இருக்கிறார்களா?பெரும்பாலான உழைக்கும் மக்களின் வாழ்வை சீரழிக்கும் மது ஒழிப்பா? விவசாய தொழில் நசிந்து கொண்டே போகிறதே அதற்கா? கூடங்குளம் போராட்டமா? மீத்தேன் வாயு,கெயில் அல்லது காவேரி முல்லைபெரியாறு உள்ளிட்ட ஆற்று நீர் உரிமை சிக்கலா? கல்வியும்,மருத்துவமும் வணிக மயமாகிப்போனதா? இந்தி திணிப்பா? தாய் மொழிக் கல்வியா? ஆணவக்கொலைக்கு எதிராகவா? பெண்கள் மீதான வன்முறைக்கு? தலித்துகள் மீதான வன்முறைக்கு? மீனவர்கள் மீன் பிடி உரிமைக்காகவா? மாநில உரிமைப்பறிப்புக்கு எதிராகவா?எல்லாமே பகுதி சார்ந்த மக்களின் போராட்டமாகவே இந்திய தமிழக அரசின் கொள்கைக்கு எதிரான போராட்டமாவே இருக்கிறது.ஆனால்,தேசிய இன ஒடுக்குமுறையை உணர்ந்த தமிழ்தேசிய கோரிக்கையாகவோ வளர வில்லை.

இரு பெரும் திராவிடக் கட்சிகளின் அடித்தளம் ஆட்டம் காணும் இந்த சூழலில்,மாற்று அரசியல் பற்றிய சிந்தனை மக்களை பற்றி பிடிக்க ஆரம்பித்துள்ளது.மாநிலப்பட்டியல்,பொதுப்பட்டியல் என்று அரை குறை நிர்வாக அதிகாரத்தை தேசிய இனங்களின் அரசுகளுக்கு வழங்கும்இத்தேர்தல் முறையில் முதலாளித்துவ சனநாயகம் வழங்கும் அனைத்து வாய்ப்புகளையும் ஒரு புரட்சிகர இயக்கம் பயன்படுத்திக்கொள்ளும் என்றால்,நாடாளுமன்ற முதலாளித்துவ சனநாயக முறையை ஒரு போராட்டக் களமாக புரட்சிகர மாற்று அரசியலை வளர்ப்பதற்கான ஒரு செயல் உத்தி வாய்ப்பாக பயன்படுத்துவதில்தவறேதும் இல்லை.

# II மாற்று அரசியல்

### அ) பாப்புலிச அரசியல்(வெகுசன கவர்ச்சிவாத அரசியல்)

*“பாப்புலிச அரசியல்”“பாப்புலிச அரசியல் கட்சி”போன்ற சொல்லாடல்கள்சமீப காலங்களில் பத்திரிக்கைகளில் அடிக்கடி இடம்பிடிப்பதை நாம் கவனித்திருப்போம்.குறிப்பாக ஆம் ஆத்மியின்,டெல்லி சட்டமன்றத் தேர்தல் வெற்றிக்குப் பிந்தை நாட்களில் ஆம் ஆத்மி கட்சியை,பாப்புலிஸ்ட் கட்சி என்றும் பாப்புலிஸ்ட் அரசியல் உத்தியின் காரணத்தால் ஆட்சிக்கு வந்தது என்றும் ஆம் ஆத்மியின் தேர்தல் வெற்றியை மையமாகக் கொண்ட “பாப்புலிச”விவாதங்கள் தேசிய ஊடகங்களின் சூடுபிடித்தன.*

### பாப்புலிச அரசியல் என்றால் என்ன?

*நிலவுகிற அமைப்பின்பால் வெறுப்புற்று/அதிருப்தியுற்றுள்ள மக்கள் திரளின் ஆதரவைப் பெறுவதற்குஅதன் அரசியல்,பொருளாதார,கலாச்சாரத்(முக்கியமாக பொருளாதாரம்)தளங்களில் மக்களை எளிதில் ஈர்க்கிற வகையிலான பிரச்சாரங்களை முன்னெடுப்பது;குறிப்பாக சாமானிய மனிதர்கள்ஜ்மேட்டுக்குடி அரசியல் வகுப்பினர்,மண்ணின் மைந்தர்கள்ஜ்புலம் பெயர் மக்கள் என்கிற எதிர்வுகளை கட்டமைத்து அதன் ஊடாக அரசியல் நலன் பெறுவதை பாப்புலிச அரசியல் என வரையறை செய்யலாம்.*

*“பாப்புலிசம்” என்பது சிந்தாந்தம் அல்ல அது ஒரு அரசியல் பிரச்சாரக் கருவி.நீண்ட கால சமூக வளர்ச்சியை கருத்தில் கொள்ளாமல்,ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான தேர்தல் உத்திகளாக,அல்லது ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்வதற்கான பிரச்சார உத்தி.*

*நிலவுகிற அரசியல் பொருளாதார அமைப்பின் போதாமைகள், சமூகத்தின் பெரும்பான்மையோரிடத்தில் பாதுகாப்பற்ற*

உணர்வை உருவாக்குகிறது.பொருளாதார நெருக்கடி நிலைமைகள் சமூகத்தில்வேலை வாய்ப்பின்மை,வறுமை போன்ற எதிர் விளைவுகளை உண்டாக்குகிறது.இத்தகைய சூழலில்,சமூகம் எதிர்கொள்கிற இந்நெருக்கடிக்கான காரணம் குறித்த பகுப்பாய்விலும் அதற்கான மாற்று செயல்திட்டங்களை முன்னெடுப்பது/சரி செய்வது குறித்து பெரும்பாலான மையநீரோட்ட அரசியல் கட்சிகள் அக்கறை கொள்வதில்லை.அதேநேரத்தில், மக்களின் நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்கிற வகையிலும் அதேநேரத்தில் மக்களிடத்தில் ஏதோவொரு வகையில் இணைகிற வகையிலுமான செயலுக்தியை தேர்ந்துகொண்டால் மட்டுமே அரசியல் களத்தில் வெற்றி பெற இயலும்.எனவேதான் மையநீரோட்ட கட்சிகள் ஆட்சி அதிகாரத்தில் தொடர்வதற்கும்,ஏனைய புதிய அரசியல் இயக்கங்களும் கட்சிகளும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்கும் பாப்புலிச அரசியலின்பால் தன் கவனத்தை திருப்புகிறது.

பாப்புலிச கட்சிகள்,இயக்கங்கள்,சாமானிய மனிதர்களின் ஒட்டுமொத்த பிரதிநிதியாக தன்னை நிறுவிக்கொள்கிறது. சமூகத்தின் நெருக்கடிகளுக்கு உடனடி காரணத்தையும் தீர்வையும் முன்வைப்பதால் அது மக்களிடத்தில் செல்வாக்கு செலுத்துகிற கருத்தியலாக உருப்பெறுகிறது.

மேற்குலகில் புலம் பெயர் அகதிகளுக்கு எதிரான அரசியல்,இந்தியாவில் பாஜகவின் இஸ்லாம் விரோத இந்துதேசிய அரசியல்,காங்கிரசின் மதசார்பற்ற இந்து தேசிய அரசியல்,தமிழகத்தில் தமிழ்தேச இனவாத அரசியல்,இலவச கவர்ச்சித் திட்டங்கள்,சாதிக் கட்சிகளின் வட்டார சாதிய அடையாள அரசியல் போன்ற கருத்தியல்கள் வலது பாப்புலிசத் தன்முடையவைதான்.

சமூகத்தின் குறைந்தபட்ச கோரிக்கைகளை எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யாத அரசியல் கட்சிகள்,மக்கள் பிரதிநிதிகள் மீது வெகுமக்கள கொள்கிற அவ நம்பிக்கைகள் கசப்புகள் பாப்புலிச அரசியல் எழுச்சிக்கான அடித்தளத்தை வழங்குகிறது.குறிப்பாக லத்தீன் அமெரிக்கா மற்றும் ஐராப்பாவில் பாப்புலிச அரசியல் மக்களிடத்தில் செல்வாக்கு செலுத்துவதற்கு இதுவே முக்கியக் காரணியாக உள்ளது.

பல தசாப்தங்களாக மைய நீரோட்ட அரசியல் கட்சிகள் மற்றும் அதன் திட்டங்களால் (பயனேதும் பெறாமல்)

ஏமாற்றமடைந்திருந்த மக்களிடத்தில் பாப்புலிச அரசியல் புயலாக நுழைந்து மையநீரோட்ட கட்சிகளின் மீதான அவநம்பிக்கைகளை தனக்கான சாதக நிலைமையாக்கிக்கொள்கிறது.

**வலது பாப்புலிசம்:**

உள்நாட்டுப் போராலும் வறுமையாலும் சொந்த நாட்டை விட்டு புலம் பெயர்ந்து வருகிற அகதிகளுக்கு எதிரான அரசியலும் இஸ்லாமியர்களுக்கு எதிரான அரசியலுமே ஐரோப்பாவின் வலது பாப்புலிச அரசியலாக வேகமாக எழுச்சி பெற்று வருகிறது.புலம் பெயர் மக்களால் சொந்த நாட்டு மொழியும் கலாச்சாரமும் பொருளாதாரமும் தேசியப் பாதுகாப்பும் பாதிப்பிற்குள்ளாவதாக இப்பாப்புலிசக் கட்சிகள் குற்றம்சாட்டுகிறது.சொல்லப்போனால் இவ்வகையான பாப்புலிச உத்திகள் ஜனநாயகத்தின் அடித்தளத்தையே அசைத்துப் பார்க்கிற வகையில் வேகமாக வளர்ச்சிப் பெற்றுவருகிறது.அதிகரிக்கிற வேலைவாய்ப்பின்மை மற்றும் சுகாதாரப் பிரச்சனைகளுக்கு இவர்களே காரணமாக இருக்கின்றனர் என்கிற இக்கட்சிகளின் வாதம் பிரச்சனையின் அடிப்படைக் காரணம் குறித்த கேள்விகளை மூடி மறைத்துவிடுகிறது. பிரான்சில் தேசிய முன்னணிக் கட்சி,டென்மார்க்கில் டென்மார்க் மக்கள் கட்சி,ஆஸ்த்திரியாவில் சுதந்திரக் கட்சி,இத்தாலியில் போர்சா இத்தாலியக் கட்சி போன்ற கட்சிகள் ஐரோப்பாவில் மக்கள் செல்வாக்கு பெற்ற வலது பாப்புலிச கட்சிகளாக உள்ளது.

வலது பாப்புலிச அரசியலானது,இனவாத அரசியல் கருத்தியலை அடித்தளமாக கொண்ட தேசியவாத முழக்கத்தை முன்னிறுத்துகிற பாசிசமாக இறுதி வடிவம் பெறுகிறது.யூதர்களுக்கு எதிரான ஹிட்லரின் ஜெர்மன் இனவாத அரசியல் எவ்வாறு பாசிசத்திற்கு வித்திட்டது என்ற படிப்பனையை வரலாறு வழங்குகிறது.மண்ணின் மைந்தர்களை இன ரீதியாக உசுப்பிவிடுகிற வகையிலான தேசியவாத பாப்புலிச அரசியல் இன்று நவ பாசிசமாக கருக்கொண்டு வருகிறது.1930 களில் நாசிக்களின் கட்டுப்பாட்டில் ஜெர்மனி சென்றது போல தற்போது பிரான்சு உருவாகக்கூடும் என பிரான்சு நாட்டின் வலது பாப்புலிச கட்சியான தேசிய முன்னணிக் கட்சியின் செயல்பாடுகள் விமர்சிக்கப்பட்டுவருகிறது.

அமெரிக்காவின் அதிபர் தேர்தல் பிரச்சாரங்களில் புலம் பெயர் மெக்சிக்கோ நாட்டு மக்களுக்கு எதிரான இனவாத அரசியலே

அமெரிக்க தேசியவாதமாக அந்நாட்டு வலது பாப்புலிச கட்சிகளால் முன்னெடுக்கப்படுகிறது.

சிரியா போரின்போது அந்நாட்டிலிருந்து வெளியேறிய மக்களுக்கு எதிரான ஐரோப்பாவில் எழுச்சி பெற்ற வலது பாப்புலிசத்தை மற்றுமொரு உதாரணமாகக் கூறலாம்.

**இடது பாப்புலிசம்:**

நவதாராளவாத சந்தைப் பொருளாதாரத்தின் விளைவாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளுக்கு எதிரான போராட்ட அலையானது கடந்த பத்து ஆண்டுகளின் உலகின் பல பகுதிகளில் சிறியதும் பெரியதுமாக சுழன்றடித்துவருகிறது.குறிப்பாக (2008 ஆம் ஆண்டுகளில்)கிரீஸ், ஸ்பெயின் போன்ற ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட பொருளாதர நெருக்கடிகள் வேலைவாய்ப்பின்மை,கல்வி மற்றும் சுகாதார அரங்குகளில் பெரும் நெருக்கடிகளை உருவாக்கியது.பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் மேலும் மேலும் வறியவர்களாகினர்.அதே நேரத்தில் சமூகத்தின் மேல்தட்டு வர்க்கம் மேலும் மேலும் வசதியடைந்தனர்.இந்நெருக்கடி சூழலானது சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகளை மேலதிகமாக கூர்மையாக்கியது.

நவதாராளவாத சந்தைப் பொருளாதார சார்புநிலை அரசியல் கட்சிகள் மற்றும் அமெரிக்க நிறுவனங்களுக்கு எதிரான வெகுமக்கள் எழுச்சியானது வெனிசுலா,பொலீவியா,கிரீஸ்,ஸ்பெயின் போன்ற நாடுகளில் இடது அணியினர் பலம்பெறுவதற்கான சூழலை உருவாக்கியது.

முதலாளிய எதிர்ப்பு,உலகமய எதிர்ப்பு,அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஏகாதிபத்திய எதிர்ப்பரசியல் இடது அணியினரின் பாப்புலிச அரசியலாக அடையாளப்படுத்தப்படுகிறது.குறிப்பாக வெனிசுலாவில் ஹுகோ சாவேஸ்,பொலீவியாவில் எவோ மோர்லஸ்,கிரீசில் சிப்ராஸ் போன்ற தலைவர்கள் இம்முழக்கதை அடியொற்றி தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தவர்களாக அடையாளப்படுத்தப்படுகிறார்கள்.

ஐரோப்பாவை பொறுத்தவரையில் கிரேக்கத்தில் சிரிசா,ஸ்பெ-யினில் பொடாமாஸ் போன்ற கட்சிகள்,2008 ஆம் ஆண்டுகால பொருளாதார நெருக்கடி சூழலில் புதிய இடது அலையாக உருவாகிய கட்சிகளாகும்.புலம் பெயர் அகதிகளுக்கான

ஆதரவு,சமூக நீதி மற்றும் விளிம்புநிலை மக்களுக்கான உரிமைகளை வற்புறுத்துவர்களாக சாமானிய மனிதர்களின் அரசியல் குரலை பிரதிபளிப்பவர்களாக தங்களை நிறுவிக்கொள்கின்றனர்.

அதேநேரத்தில் தேர்தல் வெற்றிக்கு பிந்தைய நாட்களின் நாடாளுமன்ற முட்டுச்சந்துகளிலும் நிலவுகிற அமைப்பின் வரப்பிற்குட்ப்பட்ட சீர்திருத்தவாதத்திற்குள்ளாகவோ இவ்விடது பாப்புலிச கட்சிகள் முட்டி நிற்பதையும் பார்த்து வருகிறோம்.குறிப்பாக,ஐரோப்பிய யூனியனின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க மாட்டோம் என்று கூறி ஜனவரி-2015 தேர்தலில் கிரேக்கத்தில் ஆட்சியைப் பிடித்த சிப்ராஸ் இன்று தன் நாட்டு மக்களுக்கு துரோகம் இழைத்துவிட்டார்,சிக்கனநடவடிக்கைதொடர்பாக ஐரோப்பிய யூனியனின் நிபந்தனையை ஏற்பது குறித்து ஓட்டெடுப்பில் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றபின்னரும் மக்களின் விருப்பத்திற்கு மாறாக ஐரோப்பிய சக்திகளிடம் சிப்ராஸ் மண்டி-யிட்டுவிட்டார் என சில இடது தாராளவாத பத்திரிக்கைகளும் சில தீவிர இடதுசாரிகள் விமர்சிப்பதும் கவனிக்கத்தக்கது.

ஐரோப்பிய பொருளாதார மேலாதிக்க சக்திகளின் நிபந்தனைகளுக்கு கட்டுப்படாமல் ஐரோப்பிய யூனியனை விட்டு கிரேக்கம் வெளியேறுவது என்ற முடிவு புரட்சிகர முடிவாக இருக்க முடியாது என்றும் ஒருவேளை கிரேக்கம் அப்படி செய்திருந்தால் மென் மேலும் இழப்புகளையே எதிர்கொள்ள வேண்டி வரும் என்று சிப்ராஸ்இவ்விமர்சனகளுக்கு விளக்கமளித்தாலும் ஐரோப்பிய ஒன்றிய சிக்கனநடவடிக்கைக்கு எதிரான எதிர்ப்பரசியலானது, பாராளுமன்றவாத வரம்புகளோடு சிரிசாவை முடக்கிவிட்டதுதான் இன்றைய எதார்த்தமாக உள்ளது.

**இந்துத்துவ பாப்புலிசம்:**

இந்தியாவும் இந்துத்துவ பாப்புலிச அரசியலும் பிரிக்க முடியாத வகையில் இன்று இரண்டறக் கலந்துள்ளது.முன்னதாக காங்கிரஸ் ஆட்சியில்,மதசார்பற்ற முகமூடியின் இருந்த இந்துத்துவ பாப்புலிச அரசியல் ஆர் எஸ் எஸ் பாஜக கூட்டணியில் வெளிப்படையாக இந்திய அரசியல் அதிகாரத்தை இயக்குகிற ஆணி வேறாக தொழில்படுகிறது.அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவது(பாபர் மசூதி இடிப்பு),அத்வானியின் ரத யாத்திரை,குஜராத் படுகொலைகள்

என இஸ்லாமியர்களுக்கு எதிரான பாஜகவின் இந்துத்துவ பாப்புலிச அரசியல் இந்துத்துவ பாசிசத்தின் வேராக உள்ளது.

கடந்த கால ஆட்சியின்போது காங்கிரஸ் கட்சி கடைபிடித்த பொருளியில் கொள்கைகள் சமூக ஏற்றத்தாழ்வுகளையும் வேலைவாய்ப்பின்மையும் அதிகளவில் உருவாக்கின.அதே நேரத்தில் ஊழல் குற்றச்சாட்டுகளிலும் ஒன்று மாற்றி ஒன்றில் சிக்கி வந்தன.குறிப்பாக காமன்வெல்த் விளையாட்டு போட்டி ஊழல்,நிலக்கரி ஊழல்,2 ஜி ஊழல் என காங்கிரஸ் ஆட்சி காலத்தில் பல ஊழல்கள் அம்பலத்திற்கு வந்தன.இதை சாதகமாக்கிய பாஜக, பலவீனமான தலைவர்,ஊழல் நிர்வாகம் போன்ற முழக்கங்களை முன்வைத்தே காங்கிரசுக்கு பலமான மாற்றாகவும் நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுசெல்வதாகவும் உறுதியளித்தது.

ஒரே நேரத்தில் வளர்ச்சியின் நாயகராகவும் இந்துத்துவ பாப்புலிச பிம்பமாகவும் நரேந்திர மோடி அடையாளப்படுத்தப்பட்டார். இப்படியாக,மோடியின் வருகையின் பிற்பாடு நவதாராளவாத சந்தைப் பொருளாதார ஊக்குவிப்புடன் இணைக்கப்பெற்ற இந்துத்துவ பாப்புலிச அரசியல் உத்தியானது இதுவரையில் இல்லாத வகையிலான பெரும்பாண்மை பலத்துடன் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான வாய்ப்பை வழங்கியது.இந்துத்துவ பாப்புலிசம்,தேர்தலில் வெற்றி பெற்றது.

கடந்த 30 ஆண்டுகளில் எந்தக் கட்சிக்கும் இல்லாத வகையில் முழு பெரும்பான்மை பலத்துடன் பாஜக ஆட்சி அதிகாரத்தில் உள்ளது.காங்கிரஸ் மற்றும் இடது கட்சிகள் பாராளுமன்றத்தில் குரல் உயர்த்த முடியாத வகையில் பலவீனப் பட்டுள்ளது.ஒட்டுமொத்த அதிகாரமும் இன்று பிரதம மந்திரியின் அலுவலகத்தில் குவிமையப்படுத்துப்பட்டுள்ளது.ஆட்சி மற்றும் நிர்வாகத்தில் மக்கள் கண்காணிப்பு அறவே அகற்றப்பட்டுவிட்டது.

பத்திரிக்கையளர்கள் சந்திப்பு என்பதே இல்லாமல்போய்விட்டது. மோடி ட்விட்டரில் வருகிறார்.கருத்துப் போடுகிறார்.அனைத்தும் ஒரு வழி உரையாடல்தான். இருவழி உரையாடல் என்பதே இல்லாமல் போய்விட்டது.

வளர்ச்சியின் நாயகர் மீதான மோகம் தணிந்து ஏறிட்டுப் பார்கையில் இந்துத்துவ பாப்புலிசம் மீதான வீழ்ச்சிக்காலம் தொடங்கிவிட்டதாகவே தெரிகிறது. அதேநேரத்தில் கல்விக்

கொள்கையில் காவிமயம், சிறுபான்மையினர் மீதான வன்முறை அதிகரிப்பு, மேலதிக தனியார்மய ஊக்குவுப்புகள், நிலம் கையகப்படுத்துகிற மசோதா என இந்துத்துவ பாப்புலிசம் தனது வகுப்புவாத கொள்கையூடாக நவதாராளவாத சார்புநிலை கொள்கைகளை ஏகபோகமாக அமலாக்கிவருகிறது.அதேநேரத்தில் இந்துத்துவ பாப்புலிச கருத்தியலே இந்து தேசியக் கருத்தியலாகவும் இந்திய தேசியமாகவும் உருவகப்படுத்தப்பட்டு இந்துத்துவ பாசிசத்திற்கு பாதை சமைத்து தருகிறது.

**ஆம் ஆத்மி மாற்று பாப்புலிசம்:**

இந்தியாவின் தலைநகரான புதுதில்லியில் காங்கிரஸ் மற்றும் பாஜக என இரு மையநீரோட்ட தேசியக் கட்சிகளை வீழ்த்தி ஆட்சி அதிகாரத்திற்கு வந்த ஆம் ஆத்மியின் அரசியல் எழுச்சி இந்தியாவின் பல அரசியல் கட்சிகளை திரும்பிப்பார்க்க வைத்தது. மாற்று அரசியல் முயற்சிக்கான பாதையாகவும் “ஆம் ஆத்மி மாதிரி” என்றும் இவ்வெற்றி அடையாளப்படுத்தப்பட்டது.

அறுபதாண்டு கால மையநீரோட்ட அரசியலிலும் ஊழல் அரசியல்வாதிகளிடமும் அவநம்பிக்கை கொண்டிருந்த மக்கள் மனநிலையில்,குறுக்குசால் ஒட்டி ஆதாயம்பெற்ற கட்சிகளில் ஒன்றுதான் ஆம் ஆத்மி கட்சி.எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் வறுமையான வாழ்நிலையில் எந்த வகையிலும் மாற்றமும் நிகழ்வதில்லை என்பதை உணர்ந்த மக்கள் விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்டதாக உணர்கின்றனர்.உலக நாடுகளில் பல்வேறு பகுதிகளில் நிகழ்ந்துவருகிற மக்கள் எழுச்சி உணர்த்துவதும் இதைத்தான்.

பெரும்பாலான மக்கள் அரசியல் கட்சிகளின் பொய் வாக்குறுதிகளை பார்த்து வெறுப்படைந்துள்ளனர்.அவர்களுக்கான ஆசுவாச நேரத்தையும் வழங்கி பார்த்துவிட்டனர்.ஆனாலும் கட்சிகள் மாறினாலும் காட்சிகள் எதுவும் மாறவில்லை.

இத்தகைய பின்புலத்தில்வைத்துப் பார்க்கும்போது, அன்னா ஹசாரவின் ஊழல் எதிர்ப்புப் போரட்டத்தின் அரசியல் தொடர்ச்சியாக ஆம் ஆத்மி நிறுவப்பட்டு மக்களின் அவநம்பிக்கையை குவிமையப்படுத்தியதில் வெற்றிகண்டது. கூடவே ஊழல் எதிர்ப்பு லோகாயத் சட்ட அமல், தண்ணீர் மற்றும் மின்சாரக் கட்டணம் குறைப்பு போன்ற பாப்புலிச அரசியல் உத்தியை இணைத்த

*அரவிந்த் கேஜ்ரிவால் நகர்புற விளிம்புநிலை,நடுத்தர வர்க்கத்தின் ஏகபோகமாக ஆதரவை பெற்று தேர்தல் அரசியலில் வெற்றி பெற்றார்.*

*பாப்புலிச அரசியல் பின்புலத்தில் ஆட்சியைப் பிடித்த ஆம் ஆத்மி,சித்தாந்த அரசியல் அடித்தளம் இல்லாமலும் உட்கட்சி ஜனநாயக மத்தியத்துவம் இல்லாத கட்சியாக உருப்பெற்று தற்போது நிலவுகிற அமைப்பினில் மெல்லக் கரைந்து வருவதை கண்கூடாகக் கண்டுவருகிறோம்.*

**திராவிடக் கட்சிகளின் பாப்புலிச அரசியல் :**

*அறுபதாண்டுகால திராவிடக் கட்சிகளின் தேர்தல் வெற்றிக்கு, அதன் பாப்புலிச அரசியல் உத்தியும் தனிநபர் பிம்ப அரசியல் உத்தியும் முதன்மைக் காரணியாக குறிப்பிடலாம்.தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்க வழி வந்த சமூக நீதிக் கோட்பாடுகளை தேர்தல் பாதைக்கேற்ற பாப்புலிச கருத்தியலோடு இணைவாக்கம் செய்தும் திராவிடக் கருத்தியலேயே பாப்புலிச கருத்தியலாக வளர்த்தெடுத்தும் மிகப்பெரும் பிராந்திய அரசியல் சக்தியாக ஆட்சி அதிகாரத்திற்கு வந்தது திராவிட முன்னேற்றக் கழகம்.*

*சமூக நீதி அரசியலோடு மொழி(இந்தி எதிர்ப்பு போராட்டம்),இன அடையாள முன்வைப்புகளுடன் கூடிய ரூபாய்க்கு மூன்று படி அரிசி என்ற பாப்புலிச முழக்கமும் தி மு கவின் தேர்தல் வெற்றிக்கு அடிகோலியது எனலாம்.பின்னால் வந்த கலைஞர் கருணாநிதி சூழலுக்கு ஏற்ற வகையில் இவ்வுக்தியை முன்பும் பின்புமாக இணைத்தும் வளர்த்தும்(மாநில சுயாட்சி போன்ற முழக்கம்)இன்றுவரையிலும் வெற்றிகரமாக கைக்கொண்டு வருகிறார்.இலவச டிவி தொடங்கி இலவச கைப்பேசி வரை திமுகவின் பாப்புலிச தேர்தல் அரசியல் உத்திக்கு உதாரணங்களை அடுக்கலாம்.*

*இதற்கு எதிர் முகாமில் உருவான எம் ஜி ஆர் என்கிற தனிநபர் பிம்பமே பாப்புலிச அடையாளமாக உருப்பெற்று தி மு கவின் சரிவிற்கும் அதிமுக வின் உருவாக்கத்திற்கும் வித்திட்டது.எந்த கொள்கையோ கோட்பாடோ இல்லாத எம் ஜி ஆர் என்ற திரைப்பிம்பமே அதிமுகவின் பாப்புலிச அரசியலாக இன்று வரை அடையாளப்படுத்தப்பட்டுவருகிறது.பின்னர் வந்த ஜெயலலிதா இதுநாள் வரையிலும் அவ்வுக்தியை திமுகவிற்கு*

எதிரான வோட்டு வங்கியாக பயன்படுத்திக் கொண்டதோடு தன்னையே அம்மா என்ற பிம்பமாக கட்டமைத்துள்ளார்.இவை நீங்கலாக அம்மா உணவகம்,இலவச மிக்சி,இலவச மின்விசிறி போன்ற பாப்புலிச தேர்தல் அரசியலையும் அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்வதற்கான கருவியாக கைக்கொண்டுள்ளார்.

**பாப்புலிச அரசியலின் போதாமைகள்:**

நிலவுகிற நவதாராளவாத சந்தைப் பொருளாதார கட்டமைப்பானது,மிகப்பெரிய அளவில் சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கியுள்ளது.எங்கும் வேலைவாய்ப்பின்மை,கடன் சுமைகள்.பொது சுகாதாரம்,பொதுக் கல்வி போன்ற மக்கள் நலத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு வெட்டப்படுகின்றன.

உலகமயமாக்கலின் கோர விளைவுகளால் மோசமான பாதிப்பை எதிர்கொண்டுவருகிற மக்களிடத்தில் பாப்புலிச அரசியலானது எளிமையான தீர்வுகளை முன்வைகிறது.சிக்கலான இப்பிரச்சனைக்கு புலம் பெயர் அதிகளும் இஸ்லாம் தீவிரவாதமுமே காரணமென வலது பாப்புலிச கட்சிகளும் உயர் வர்க்கத்தினரே காரணம் என இடது பாப்புலிச(வஷீ நீணீ£ீ£ீமீபீ ரீமீயீமீ) கட்சிகளும் குறிப்பான காலகட்டத்தைய குறிப்பான சமூக நெருக்கடிகளுக்கு கருப்பு வெள்ளையாக உடனடி தீர்வை முன்வைகிறது.மக்களின் அதிருப்திகளை வெற்றிகரமாக திசை திருப்பிவிடுகிறது.

அவ்வகையில்,நவதாராளவாத பொருளியில் கட்டமைப்பிற்கு எதிரான ஜனநாயக போராட்டத்தை பாப்புலிச அரசியல் கட்சிகள் குறிப்பான அரசியல் உரிமைக்கான,சமூக உரிமைக்கான கோரிக்கையாக சுருக்கிவிடுகிறது.ஒட்டுமொத்த மக்கள் திரளின் ஜனநாயக உரிமையானது குறிப்பான அரசியல் வர்க்கத்திற்கு எதிரான குறிப்பான வர்க்க உரிமையாக சுருக்கப்படுகிறது. ஜனநாயகம் என்பது ஒட்டுமொத்த சமூக நலனை அதன் அரசியல் பண்பாட்டு தளத்தில் உறுதிப்படுத்துவதாக இருக்கவேண்டும். மாறாக பாப்புலிசம் என்பது மேட்டுக்குடி வகுப்பிற்கும் சாமானிய மக்களுக்குமான மோதல் என்றளவிற்கு உட்பட்ட (சமூக)உரிமை குறித்து மட்டுமே பேசுவதாக உள்ளது.அதாவது மக்களின் நம்பிக்கையை பெறுவதற்காகவும்,அரசியல் நலனை அடைவதற்கான பிரச்சாரக் கருத்தியில்.பாப்புலிசம் மக்கள் ஜனநாயகத்திற்கு நேர் எதிர்முனை!ஜனநாயகத்தின் அச்சுறுத்தல்!

*நிலவுகிற ஒற்றைத் துருவ உலக ஒழுங்கிற்கு எதிரான போராட்ட நிகழ்வுப் போக்கில்,சமூக ரீதியலும் அரசியல் ரீதியிலும் ஜனநாயகப்படுத்தல்,அமைப்பாக்கல் மற்றும் சமூகத்தின் அனைத்துநிலை மக்களையும் அணிதிரட்டுதல் போன்ற செயல்பாடுகள் பாப்புலிச எழுச்சியால் மட்டுப்படுத்தப்படுகிறது. அரசின் குறிப்பான கொள்கையை நிலவுகிற அம்மைப்பிற்குள்ளாகவே சீர்திருத்துவது என்பதே நவ தாராளவாதத்திற்கு எதிரான பாப்புலிச அரசியல் கட்சிகளின் அறைகூவலாக உள்ளது.*

*பாப்புலிச அரசியலை தேர்ந்துகொண்ட பாப்புலிச கட்சிகள் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தாலும் ஒட்டுமொத்த சமூகத்தின் நலனை பிரதிபலிப்பதாக செயல்பட இயலவில்லை.அதேநேரத்தில் பாப்புலிச கட்சிகளின் பாப்புலிச ஜனநாயகமும் செயல்பாடும் உழைக்கும் வர்க்கத்தினரை உள்ளடக்கியவையாக இல்லை.பாப்புலிச அரசியலானது மக்களின் ஜனநாயக பங்கேற்பை முற்றாக புறக்கணிகின்றது.ஒட்டுமொத்த அதிகாரத்தையும் குவிமையப்படுத்துகிற இக்கட்சிகள் சர்வாதிகாரத்தை நோக்கி வேகமாக நகர்ந்து விடுகிறது.அதாவது அதிகளவிலான அதிகாரக் குவிப்பையும் குறைவான மக்கள் பங்கேற்பையும் கோருகிற கட்சியாக உருப்பெறுகிறது.*

**மநகூ-தேமுதிக-தமாக “மாற்று” பாப்புலிசம்**

*இன்றைய அரசியல் அரங்கில் இரு திராவிடக் கட்சிகளுக்கு மாற்றாக அதே நேரத்தில் திராவிடக் கட்சிகளை வீழ்த்தக்கூடிய பாப்புலிச மாற்று அரசியல் கட்சிகள் இல்லை.அதேநேரத்தில் மதிமுக,விடுதலை சிறுத்தைகள் மற்றும் இரு இடதுசாரிக் கட்சிகள் எந்த கொள்கையும் அரசியல் போராட்ட மரபு இல்லாத விஜயகாந்த் எனும் பாப்புலிச பிம்பத்தின் துணைக்கொண்டு அரசியல் அதிகாரத்தை கைப்பற்றலாம் என்ற நோக்கில் பாப்புலிச மாற்றை கட்டமுனைந்து தேர்தலை எதிர்கொள்கிறார்கள்.இதனால் மட்டுமே இரு பெரும் திராவிட கட்சிகளின் சுரண்டல் ஆட்சி அதிகாரத்தை வீழ்த்த முடியம் என நம்புகிறார்கள்.கழக ஆட்சிக்கு எதிரான மாற்று அரசியல் என்கிறார்கள்.*

*விஜயகாந்தை பாப்புலிச குதிரையாக பாவித்து அதன் துணைக்கொண்டு கழகக் கட்சிகளின்பாப்புலிச அரசியலை வீழ்த்துவதை நாம் அரசியல் மாற்று எனக் குறிப்பிட முடியுமா?*

இக்கூட்டணியின் அல்லது கூட்டணியில் அங்கம் வகித்துள்ள கட்சிகள் அரை நூற்றாண்டு கால பாப்புலிச அரசியலுக்கு மாற்றாக என்ன முழக்கத்தை முன்வைக்கிறார்கள்?திமுக அதிமுக பாப்புலிசத்திற்கு மாற்றாக மதிமுக,தேமுதிக பாப்புலிச அரசியல்தான் மாற்று அரசியலா?கழக ஆட்சியின் ஊழலையும் டாஸ்மாக் கேடுகளுக்கு எதிரான முழக்கம் மட்டுமே மாற்ற அரசியலுக்கான அடிப்படை அலகுகளாக இருக்கு முடியுமா?

**எது மாற்று அரசியல்?**

நிலவுகிற ஜனநாயக அமைப்பின் போதாமைகளை தன்வயப்படுத்துகிற முறையிலும் மக்களின் உடனடி எதிர்பார்ப்புகளை வெற்றிகரமாக பிரதிபலிக்கிற தன்மையிலும் பாப்புலிச அரசியலின் வெற்றி சாத்தியப்பட்டுவருகிறது.ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட வர்க்க எதிரிக்கு எதிரான ஒழுங்கமைக்கப்பட்ட வர்க்கப் போரட்டத்தை பாப்புலிச அரசியல் நிராகரிக்கிறது. நிலவுகிற பிற்போக்கு அல்லது போலி ஜனநாயகத்திற்கு மாற்றான புதிய ஜனநாயகத்தை மக்கள் பங்கேற்பு ஜனநாயகத்தை "பாப்புலிச அரசியல் மாற்று" புறந்தள்ளுகிறது.

2016-தமிழ்நாட்டின் சட்டமன்றத் தேர்தலில்முன்வைக்கப்படுகிற மாற்றும் ஒருவகையான பாப்புலிச மாற்றே அன்றி அரசியல் பொருளாதார மாற்றல்ல என்பதை ஒவ்வோரு படித்திலும் நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

திமுக விற்கு மாற்று அதிமுக.அதிமுக விற்கு மாற்று திமுக என்றபாப்புலிச மாற்று கட்சிகளுக்கு மாற்றாக,மநகூ ஒரு மாற்று,பாமக ஒரு மாற்று,பாஜக ஒரு மாற்று, நாம் தமிழர் ஒரு மாற்று என மாற்று அரசியலை முன்வைக்கிற அனைத்துக் கட்சிகளும் பாப்புலிச மாற்றையே பல்வேறு வடிவங்களின் முன்வைப்பதை பார்க்கலாம்.(அரை நூற்றாண்டு கால கழக ஆட்சியின் சுரண்டலுக்கு அரசியல் கட்சி மாற்றாக, ஒப்பீட்டு அளவில் கழகஆட்சியாளர்களைவிட ஒரு படி நல்லவர்கள்,சாதிய வகுப்புவாத இனவாதஎதிர்ப்பரசியலை தேர்ந்துகொண்டவர்கள்,ஊழல் கரைபடியாதவர்கள்(சில விதி-விலக்குகள் உண்டு !)போன்றநல்லெண்ண அடிப்படையிலும்,வேறு வாய்ப்புகள் இல்லைஎன்ற அளவிலும் மநகூஇம்மாற்று பந்தையத்தில் முன்னிலை வகிப்பாகத்தெரிகிறது)

இத்தகைய சூழலில்,தேர்தல்நேர இம்மாற்று அரசியலுக்கும்வெகுமக்கள் இயக்கங்களின் துணையுடன் கட்டப்பட வேண்டிய மக்கள் ஜனநாயகமாற்றுக்குமான வித்தியாசம் பாராதூரமாக உள்ளது.அப்படியென்றால் எதுதான் மாற்று அரசியலாக இருக்க முடியும்?

தமிழகத்தில்நிலவுகிற சமூகப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை களைந்து முன்னேறுகிற வகையிலானசிந்தாந்த நடைமுறை அரசியலைமாற்று அரசியல் பாதையாக முன்மொழியலாம்.நிலவுகிற சாதிய மதவாத பாசிச சக்திகள் மற்றும்அதிகாரிகள்,அரசியல்வாதிகளுக்கும்முதலாளிகளுக்கும ான எடுபிடி உறவுகளின்பிடியில் இறுக்கமாக கட்டப்பட்டுள்ள தமிழகத்தை மீட்க்கிறஅரசியலை;சாதிய,இந்துத்துவ பாசிச,எடுபிடி முதலாளியத்தின் மூர்க்கத்தைவேரருக்கின்ற அரசியல் சக்தியை மாற்று அரசியல் சக்தியென்று கூறலாம்.

**தமிழகத்தில்நிலவுகிற பிரச்சனைகளை குறிப்பானவையாக**

- நெருக்கடி நிலையில் இருக்கிற தமிழக விவசாயப் பொருளாதாரம்,தொடர்கிற விவசாயத் தற்கொலைகள்
- கைத்தறிவிசை போன்ற சிறு தொழில்களின் நலிவு
- சிதறடிக்கப்படுகிற தொழிலார் உழைப்பு,குறைவான கூலி,வேலை வாய்ப்பின்மை
- ஆரம்பக் கல்வி முதல் கல்லூரிகள் வரை தொடர்கிற கல்விக் கொள்ளை
- சுகாதாரப் பிரச்சனை மற்றும் மருத்துவக் கொள்ளை
- சாதிய மதவாத சக்திகளின் அமைப்பாக்கம்,தொடர்கிற அதன் வன்முறைகள்
- பெண்கள்,குழந்தைத் தொழிலாளர்கள் மற்றும் சிறுபான்மை மக்கள் எதிர்கொள்கிற ஒடுக்குமுறைகள்
- தாது மணல்,ஆற்று மணல்,சுண்ணாம்புக்கல் போன்ற இயற்கை வளக் கொள்ளை
- மீத்தேன்,அணுவுலை,கெயில் போன்ற பேரழிவுத் திட்டடங்கள்
- சிறப்பு பொருளாதார மண்டலங்களால் சுரண்டப்படுகிற தொழிலாளர் உழைப்பு மற்றும் இயற்கை வளம்

- டாஸ்மாக் எனும் பூதம்
- தேசிய இன ஒடுக்குமுறை
- விலைவாசி உயர்வு

என பல சமூகப் பொருளாதார நெருக்கடி நிலையில் தமிழகம் சிக்கித் தவிக்கின்றன.இதற்கான அடிப்படைக் காரணங்களாக

- புது - காலனிய பொருளாதாரக் கொள்கை அல்லது ஏகாதிபத்திய சார்புநிலை பொருளாதாரக் கொள்கை
- ஆளும் அரசிற்கும் தேசிய,பிராந்திய முதலாளிகளுக்குமான எடுபிடி உறவு;சுருக்கமாக எடுபிடி முதலாளியம்
- அரசும் அதிகார பலத்தோடு இணைவாக்கம் பெற்ற இந்துத்துவ பாசிசம் உள்ளன.

ஆக நிலவுகிற சாதிய ஆதிக்கத்திற்கும் மத அடிப்படைவாதத்திற்கும் அடித்தளமாகஇருக்கிற இந்துத்துவ பாசிசம்,எடுபிடி முதலாளியம் மற்றும் ஏகாதிபத்திய சார்புநிலை கொள்கைகளுக்குஎதிரான போராட்டமே மாற்று அரசியல் என்றமுழக்கதிற்கான மெய்யான விளக்கமாக இருக்கமுடியும்.

நிலவுகிறநாடாளுமன்ற,சட்டமன்ற வடிவங்களை, தேர்தல்களை இம்மாற்று முழக்கத்தின் பேரிலேயே பயன்படுத்திகொள்வேண்டும். ஆளும்வர்க்கதின் சனநாயகமும் அதன்சட்டமன்ற நாடாளுமன்ற முறைகளில் இம்மாற்றங்களை ஏற்படுத்த இயலாத வகையிலான பிற்போக்கு வடிவங்களாக இருந்தாலும் அதன் சாதக அம்சங்களை தேர்தல்பங்கேற்புகளின் வாயிலாகவே பயன்படுத்திகொள்ளமுடியும்.

மேலும்,மாற்றுஅரசியல் கட்டமைப்பு முயற்சியில் இது ஒரு தற்காலிக அரசியல் தந்திரமே அன்றிநிரந்தரத் தீர்வல்ல என்ற புரிதலும் ஒவ்வொரு படித்திலும் நினைவில்இருக்கவேண்டும்!

அறுபதாண்டுகால நாடாளுமன்ற முறையானது சில சமூக அரசியல் மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கு காரணமாக இருக்கிற அதே சூழலில் வர்க்கப் போராட்ட அரசியலை தேர்தல் சந்தர்ப்பவாதத்தில் கரைத்துக்கொள்ளமால்இருப்பதும் அவசியமானதாகும்.

மாற்று அரசியலை,மாற்று அரசியல் பண்பாட்டை,பாசிசத்திற்கு எதிரான மாற்று ஜனநாயக அரசை,மாற்று அரசியல் பொருளாதாரத்தை கட்டமைக்கிற வரலாற்று கடமையும் வாய்ப்பும் கிளிர்ந்தெழுகிற மக்கள் போராட்டத்தின் ஒவ்வொரு

*அசைவிலும் கரு நிலையில் உள்ளது. தேவை திட்டமிடலும் முன்முயற்சியும்தான்.*

## ஆ) இடதுசாரி ஜனநாயக மாற்று

**மாற்று என்றால் என்ன?**

*திராவிடக் கட்சிகளின் ஐம்பது ஆண்டு கால ஆட்சியின் பின்னணியில் மக்களிடையே ஒரு சலிப்பும் அவநம்பிக்கையும் தோன்றியுள்ளது. இரு கட்சிகளின் வெகுசன செல்வாக்கும் சமூக அடித்தளமும் சரியத் தொடங்கியிருக்கின்றன. மூன்றாவது அணி அல்லது மாற்று அணி அல்லது மாற்று சக்தி என்பதற்கான முன்முயற்சிகள் முன்னெப்போதையும்விட கூடுதலாக இப்போது செயல்வடிவம் பெற்றுள்ளன. நாளுக்குநாள் வளர்ந்துவரும் சமூகப் பொருளாதார நெருக்கடிகள்தான் கூட்டணி பேரம் படியாமை, சீட் தகராறு, பலமுனைப் போட்டி என்பதாக அரசியல் களத்தில் வெளிப்படுகிறது.*

*இன்றைய அரசியல் பொருளாதார நிலை என்ன என்ற அடிப்படையில் மாற்று என்றால் என்ன? என்ற கேள்வியைப் பரிசீலிக்க வேண்டும். மாற்று என்பது பெயரளவிலான மாற்று, வேட்டி கட்டிய முதல்வருக்கு மாற்றாக பேண்ட் அணிந்த முதல்வர், ஊழலற்ற நிர்வாகம் என்றளவிலான முன்வைப்பாகவே இருந்துவருகின்றது.*

**தமிழகத்தின் அரசியல் பொருளாதார நிலை:**

*1967 இல் காங்கிரசை வீழ்த்தி தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி, சமூக நீதி, சிறுபான்மயினர் நலன், பெண்ணுரிமை என்ற கனமான அரசியல் முழக்கங்களை எழுப்பி பேரிரைச்சல்களோடு தனது ஆட்சியைத் தொடங்கியது. 1967 இல் இருந்து 1990 வரையிலானக் காலத்தை ஒரு கட்டமாகவும் 1990 இல் இருந்து இன்றுவரையிலான காலத்தை இன்னொரு கட்டமாகவும் வைத்துப் பார்த்தோமானால் இவ்விரண்டிலும் மத்திய அரசின் அரசியல் பொருளாதாரக் கொள்கையோடு ஓர் நேர்கோட்டில் பயணிப்பையாகவே கழகங்களின் ஆட்சிகள் அமைந்துள்ளன. இரண்டு திராவிடக் கட்சிகளும் காங்கிரசோடு கூட்டணி வைத்தன.*

1967 இல் இருந்து 1990 வரையிலான காலத்தை முதல்கட்டம் எனலாம். பெருநிலவுடையாளர்களுடன் காங்கிரசு கொண்டிருந்த கூட்டணியைத் திராவிடக் கட்சிகளும் தொடர்ந்தன. எனவே, தமிழகத்தில் நில உச்சவரம்பு சட்டம் இன்று அமல்படுத்தப்படவே இல்லை. நிலச் சீர்த்திருத்தமும் பெயரளவிலானதாகவே இருந்தது. 2010-11 இல் தமிழகத்தின் மொத்த கிராம குடும்பங்களில் 70% மேல் நிலமற்றவை. நிலம் சாகுபடி செய்வோரை எடுத்துக் கொண்டால், இவர்களில் 78% ஒரு ஹெக்டேர் மற்றும் அதற்கும் குறைவாக சாகுபடி செய்வோர். இவர்களிடம் மொத்த சாகுபடி நிலங்களில் 35% உள்ளது. மறுமுனையில், பத்து ஏக்கருக்கு மேல் சாகுபடி செய்வோர்களில் 23%தான். ஆனால், இவர்களிடம்தான் மொத்த சாகுபடி நிலப்பரப்பில் 18.5% உள்ளது. இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் கோயில் மடங்களிடமும் பெருநிலவுடமையாளர்களுக்கு சொந்தமான அறக்கட்டளைகளிடமும் உள்ளன. சாதிக்கட்டமைப்பிற்கு இருக்கும் பொருளாதாரப் பின்புலத்தைப் புரிந்துகொள்ளாத திராவிட அரசியலின் தத்துவார்த்த இடைவெளியும் திராவிடக் கட்சிகளின் நிலவுடைமையாளர்கள், பெரு முதலாளிகளுக்கு ஆதரவான வர்க்க சார்ப்பும் இதற்கு காரணங்களாக அமைந்துள்ளன.

வேளாண்மையில் இந்திய அளவில் அமல்படுத்தப்பட்ட பசுமைப் புரட்சி தமிழகத்திலும் முழுமையாக அமல்படுத்தப்பட்டது. இதன்மூலம் உயர் விளைச்சல் ரக பயிர்கள் அறிமுகம் செய்யப்பட்டன. உரம், பூச்சி மருந்துகள் ஆகியவற்றின் பயன்பாடு ஊக்குவிக்கப்பட்டது. அதைத் தயாரிக்கும் வெளிநாட்டு நிறுவனங்கள் இலாபத்தில் கொழித்தன. பசுமைப் புரட்சியோடு வந்த 'வெண்மை புரட்சி', 'நீலப்புரட்சி' ஆகிய அனைத்தும் நமது உள்நாட்டுப் பயிர்களையும் கால்நடைகளையும் கோழியினங்களையும் அழித்துவிட்டு வெளிநாட்டுப் பயிர்கள், கால்நடைகள் மற்றும் பறவையினங்களை அதிகரிக்கச் செய்தன.

மேலும் தொழில் வளர்ச்சி என்று பார்த்தால்கூட 1991 வரை இந்திய அளவிலான வளர்ச்சி விகிதத்தைவிட தமிழகத்தின் வளர்ச்சி விகிதம் குறைவாகவே இருந்தது. 1981 - 1991 காலத்தில் இந்திய வளர்ச்சி விகிதத்தைவிட தமிழக 5.47% தமிழகத்தின் வளர்ச்சி விகிதமாக அதைவிட சற்று குறைவாக 5.38% இருந்தது.

1991க்கு பின்னான காலகட்டத்தை கழக ஆட்சிகளின்

இரண்டாவது கட்டம் என்று சொல்லலாம். இதில் உலகமய, தாராளமய, தனியார்மய கொள்கைகள் தடையேதுமின்றி காட்டாற்றின் வெள்ளப்பெருக்குப் போல் அமல்படுத்தப்பட்டது.

மத்திய மாநில அரசுகளின் பொதுத்துறை நிறுவனத் திட்டங்கள், நெய்வேலி நிலக்கரி, காவிரிப் படுகையில் நடக்கும் எண்ணெய் - எரிவாயு மற்றும் மீத்தேன் எடுப்புத் திட்டங்கள், கடற்கரையோரப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் உப்பளங்கள், இறால் பண்ணைகள் ஆகியவற்றினால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் விவசாயிகளிடம் இருந்து பிடுங்கப்பட்டதால் நிலமற்றவர்களாக ஒருபகுதியினர் மாற்றப்பட்டனர். தொழில்துறை வளர்ச்சியின் தேவைக்காக சுண்ணாம்புக் கல், சிலிகா, மெக்னீசியம், தாது மணல் உள்ளிட்ட கனிமங்கள் எடுப்பதற்காக பெருமளவிலான விளைநிலங்கள் கையகப்படுத்தப்பட்டன. நகரமயமாக்கல், ரியல் எஸ்டேட், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், தொழிற்பேட்டைகள், இவற்றுக்காக உருவாக்கப்பட நில வங்கிகள் என விவசாய நிலங்கள் மக்களிடம் இருந்து இன்றளவும் எடுக்கப்பட்டு வருகிறது. இதனால், விவசாயத்தை நம்பியிருந்த மிகப் பெருமளவிலான உழைக்கும் மக்கள் வேலையற்றவர்களாகவும் நிலமற்றவர்களாகவும் மாற்றப்பட்டனர். சிறுகுறு விவசாயிகள் கடும்நெருக்கடிக்கு உள்ளா-யினர். இந்த நெருக்கடியானது கிராமப்புற மக்களைப் பிழைப்புத் தேடுவதற்காக நகரத்தை நோக்கித் தள்ளியது.

பசுமைப் புரட்சியின் தாக்கத்தினால் வேளாண்மை சிதைவடைந்த மாநிலங்களில் தமிழகம் முதன்மையானப் பகுதியாகும். வேளாண் இடுபொருட்கள், வேதியியல் உரங்களின் விலையேற்றம் வேளாண்மை வருமானம் உற்பத்தி செலவுக்குக்கூட ஈடுகட்ட முடியாத அளவுக்கு குறைவாக இருப்பது, நவீன வேளாண் கருவிகளின் மூலமான உற்பத்தியின் எதிர்விளைவாக கிராமப்புறப் பாட்டாளிகள் பெருமளவில் வேலையிழந்தமை போன்ற காரணங்களால் தமிழகத்தின் கிராமப்புற மக்களின் வாழ்க்கைப் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது.

உள்நாட்டு உற்பத்தி சராசரியாக ஆண்டுக்கு இரண்டு சதவிகிதம் என்ற அளவில் வளர்ந்து வருகிறது. இந்தியாவிலேயே அதிகமாக நகரமயமாக்கலில் 50% த்தை தாண்டிவிட்டது தமிழகத்தில். தொழில் வளர்ச்சி தமிழகம் முழுமைக்கும் அல்லாமல் வடக்கு மற்றும் மேற்கின் சில பகுதிகளில் மட்டுமே நடந்துள்ளது. தமிழகத்

தொழிற்சாலைகளில் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர் ஆகிய மாவட்டங்களில்தான் அதிகளவிலான தொழிற்சாலைகள் உள்ளன. தமிழக சிறு தொழில்களில் கோவை, திருப்பூர், ஈரோடு ஆகிய மாவட்டங்களில்தான் பெரும்பகுதி தொழிலகங்கள் உள்ளன.

கடந்த 2015 ஆம் ஆண்டு முதலீட்டாளர்கள் மாநாட்டில் 2,42,000 கோடி ரூபாய்க்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டதாக சொல்லப்பட்டது. 2016 ஆம் ஆண்டின் தமிழக பட்ஜெட் உரையில் இம்முதலீடுகள் மூலம் இரண்டு இலட்சத்து எண்பதாயிரம் பணி-யிடங்கள் உருவாகும் என்று கூறப்படுள்ளது. அப்படியெனில் ஒரு கோடி ரூபாய் முதலீட்டிற்கு ஒரு வேலை இடம் என்றாகிறது. மிக குறைந்த குத்தகைக்கு நிலம், மானிய விலையில் மின்சாரம், மின்சாரம் தயாரிக்க பல அனல் மற்றும் அணுமின் நிலையங்கள், இதற்கென வளர்த்தெடுக்கப்பட்ட சாலை, மேம்பாலங்கள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள், 500 க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகளில் உற்பத்தியாகும் மனித வளம் என்று இதை மையமிட்டு பல்லாயிரம் கோடி பணம் செலவழிக்கப்படுகிறது. உள்நாட்டு சிறகுறு தொழில்களும் பன்னாட்டு நிறுவனங்களுக்காகப் பலி-யிடப்படுகின்றது. ஆனால், மிகமிக சொற்பமான வேலைகளையே அன்னிய முதலீடு உருவாக்குகிறது. அதுவும்கூட நிரந்தரமற்ற வேலை. ஆலை மூடல், ஆட்குறைப்பு, சம்பள வெட்டு என்று ஒருபக்கம் தொழிலாளர்களுக்கு எதிரானவை அன்றாடம் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

நோக்கியா நிறுவனம் பல்லாயிரம் கோடி வரி ஏய்ப்பு செய்துவிட்டு கோடிக்கணக்கான ரூபாய் இலாபங்களைச் சுருட்டிக் கொண்டு ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை வேலையற்றவர்களாக ஆக்கியது. உலகமயக் கொள்கையை அம்பலப்படுத்தும் அண்மைய எடுத்துக்காட்டு இது.

1990 க்குப் பிறகு உலகயமாக்கல், தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் என்ற வடிவங்களில் சுரண்டல் நாளுக்குநாள் அதிகரித்து இருக்கிறதே ஒழிய சமூகத்தின் எந்த சிக்கலையும் இது தீர்க்கவில்லை. மொத்தத்தில் தமிழகம் ஏகாதிபத்திய நிறுவனங்களின் வேட்டைக் காடாய் மாற்றப்பட்டுள்ளது.

படித்த வேலையற்ற இளைஞர்கள் 95 இலட்சம் பேர் என்று அரசின் புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. வேலையிலிருப்போரும்

வேலை உத்தரவாதம் இல்லாமல் வெளியேற்றப்பட்டு வருகின்றனர். இந்நெருக்கடியின் ஊடே வடமாநிலத் தொழிலாளர்களைக் குறைந்த கூலிக்கு அமர்த்தி இரக்கமற்ற முறையில் சுரண்டல் அரங்கேற்றப்படுகிறது.

உலகமயக் கொள்கை விவசாயத்தைச் சீரழித்தது. புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவில்லை. சூறையாடும் முதலாளித்துவம் வளர்ச்சியடைந்துள்ளது. சூறையாடும் முதலாளித்துவம் என்பது பன்னாட்டு முதலீடுகளுக்கான சேவை மற்றும் கூட்டு என்ற உறவை அனுசரித்துக் கொண்டே அதிகாரவர்க்கத்தின் கூட்டோடு நாட்டின் பொது சொத்துகளையும் இயற்கை வளங்களையும் கொள்ளையிட்டு ஏகபோக மூலதன சக்திகளாக வளர்வதுதான். முதலாளிகளுக்கும் தரகர்களுக்கும் அரசியல் பிரதிநிதியாக இருப்பதெல்லாம் வழக்கொழிந்துபோய் இவர்களே சூறையாடும் முதலாளிகளாக மாறியிருப்பதுதான் புதியவகை பண்பாகும்.

விவசாயத்தின் வீழ்ச்சியால் உருவாகியுள்ள கிராமப்புற நெருக்கடி அரசின் கொள்கைகளுக்கு எதிராகத் திருப்பப்படாத காரணத்தால் மக்களுக்குப் பழகிப்போன சாதி, மதப் பிரச்சனைகளாக வெளிப்படுகின்றன. இந்திய அளவில் அதிகாரத்திற்கு வந்திருக்கும் இந்துத்துவப் பாசிசம் ஒருபுறம் என்றால் தமிழக அளவில் செல்வாக்குப் பெற்றுவரும் தலித் எதிர்ப்பு சாதி வெறி அரசியல் மறுபுறம் என சாதி, மதவெறி இந்துவப் பாசிசம் மக்களின் வாழ்க்கையை மென்மேலும் துன்பத்திற்குள்ளாக்குகிறது.

“அடைந்தால் திராவிட நாடு இல்லாவிட்டால் சுடுகாடு” என்பதில் தொடங்கி ’இன்றைய இலக்கு ஒன்றுதான் இனத்தில் விடுதலை’ வரையிலான காலம்வரை தமிழகத்தின் தேசிய முதலாளிவர்க்கம் ஆரவாரமிடுவதும் இந்திய ஆளும்வர்க்கத்தோடு சமரசம் செய்வதும் தொடர் கதையாகி வருகிறது. மைய அரசு நாளுக்குநாள் அதிகாரக் குவிப்பைச் செய்து கொண்டிருக்கிறது. உலகமய, தாராளமயக் கொள்கையை அமல்படுத்துவதற்கு மைய அரசு, மாநில அரசு, பொதுப் பட்டியல், தனிப் பட்டியல் எல்லாம் தடையாக இருப்பதால் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள், கூட்டணிக் கட்சிகள், நேரடியாகப் பல மாநிலங்களில் பா.ச.க. ஆட்சி ஆகியவற்றின் மூலம் இக்கொள்கைகளை அமலாக்குவது வேகப்படுத்தப்படுகிறது.

இந்தப் பின்னணியில்தான், தமிழகத்தில் ஊழல் என்பது சமூகத்தின் அடியாழம்வரை பாய்ந்திருக்கும் நச்சு மரமாக வளர்ந்து நிற்கிறது. 1962 இல் காஞ்சிபுரம் தொகுதியில் தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிட்ட அண்ணாத்துரையைத் தோற்கடிப்பதற்காக காங்கிரசு கட்சி வாக்களர்களுக்கு பணம் கொடுத்ததை விமர்சித்து, "இதன் மூலம் சனநாயகத்தைப் பாழ்செய்கிறீர்கள்" என்று அண்ணா பேசினார். இன்றோ இந்தியத் துணைக்கண்டமே கைகொட்டி சிரிக்கும் வகையில் ஊழலை நிறுவனமயபடுத்தி மக்களையே ஊழலின் பங்குதாரர்களாக்கியப் பெருமை கழகங்களையே சாரும்.

முதலாளித்துவ வளர்ச்சியின் இன்னொரு பிரதிபலிப்பாய் மது உற்பத்தியாளர்களின் இலாபத்திற்காக நாடெங்கும் வீதிக்கு வீதி நடத்தப்படும் டாஸ்மாக் என்னும் அரசு மதுபானக் கடைகளால் மக்களின் வாழ்க்கை சூறையாடப்படுகிறது. 10 - 49 வயதுக்குள் உள்ள ஆண்களில் சரி பாதி பேர் (சுமார் 1.10 கோடி) குடிப்பழக்கத்திற்கு ஆளாகியுள்ளனர் என தேசிய குடும்ப நல வாழ்வின் கணக்கெடுப்புச் கூறுகிறது. குடிப்பழக்கத்தால் பலரும் வேலை செய்யாததால் 20% அளவுக்கு உற்பத்தியிழப்பு ஏற்படுகிறது.

மொத்தத்தில், உலகமய - இயற்கை வளக் கொள்ளை, சாதி - மதவெறி இந்துத்துவப் பாசிசம், மைய அதிகாரக் குவிப்பு, ஊழல், டாஸ்மாக் என இந்த ஐந்து தீமைகளின் பிடியில் சிக்குண்டு கிடக்கிறது தமிழகம். நம் தேசத்தின் எதிர்காலத்தையே இருட்டாக்கக் கூடிய கொடுந்தீமைகளாக இவை இருந்துவருகின்றன. இவை ஏற்படுத்தும் விளைவுகள் எளிதில் மீட்டெடுக்க முடியாததாகவும் பாதிப்புகள் பல தலைமுறைகளுக்கு தொடரக் கூடியதாகவும் பல தலைமுறைகள் கழித்தும் வெளிப்படக் கூடியதாகவும் இருக்கின்றன.

சூறையாடும் முதலாளித்துவத்தின் கார்ப்பரேட் சர்வாதிகாரம், இடையே வட்டார சாதிய அரசியல் சக்திகளோடு கூட்டு, கீழே மக்களுக்கு, வெகுசனவாத இலவசத் திட்டங்கள் - இதனூடாகத்தான் தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய இரண்டு கார்ப்பரேட் கழகங்களும் ஆட்சியை நடத்த முயற்சிக்கின்றன. இவர்களுக்கு தாங்கள்தான் மாற்று என்று வருபவர்கள் சாதியவாத, மதவாத, இனவாத அடிப்படையிலான வெகுசனவாதக் கவர்ச்சி அரசியலை முன்வைக்கிறார்கள். நாலாப்புறமும் மூலதனத்தின் தாக்குதலுக்கு

ஆளாகிக் கொண்டிருக்கும்போது முகிழ்த்துவரும் பல்வேறு போராட்டங்களில் ஆளும்வர்க்க நிலைப்பாட்டை எடுப்பதன்மூலம் புதிய அரசியல் சக்திகள் கட்சிக்குள்ளே வரமுடியாதபடி சி.பி.ஐ., சி.பி.ஐ.(எம்) கட்சிகள் கதவுகளை அடைத்துவைத்திருக்கின்றன. எனவே, பரிதாபகரமாக இக்கட்சிகளின் சராசரி கொள்கை மட்டம் என்பது ஊழல், டாஸ்மாக் எதிர்ப்பு என்ற இடத்திற்கு வந்துவிட்டது. தி.மு.க., அ.தி.மு.க. வைக் கட்டுப்படுத்தக் கூடிய வலுவான மூன்றாவது சக்தி உருவாகாத நிலையில் பலவீனமான மூன்றாம்நிலை ஆளும்வர்க்கக் கட்சிக்கு பல்லக்கு தூக்கி நடக்கும் தனது வழக்கமான பணியைத் இவர்கள் தொடங்கிவிட்டனர். அமைக்கப்பட்டிருக்கும் கேட்பன் விஜயகாந்த தலைமையிலான அணி மாற்று ஆணி இல்லை. ஆளும்வர்க்கத்தின் மூன்றாவது அணியாகும்.

எனவே, இன்றைய அரசியல் பொருளாதார நெருக்கடி சமூக நெருக்கடியை உருவாக்கி இருந்தாலும் பிறப்பு முதல் இறப்பு வரை அரசு கொடுக்கும் நலத் திட்டங்கள், 20 கிலோ இலவச அரிசி, சிறப்பாகச் செயல்படும் பொது விநியோகப் பொறியமைவு மக்களின் போராட்ட உணர்வை மட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறது.. வாய்க்கும் வயிற்றுக்கும் என மக்களின் அன்றாட வாழ்க்கை பல மணி நேர உழைப்பு, வேலைப் பாதுகாப்பின்மை, மூச்சுக்கூட விடமுடியாதப் படியான பேயோட்டம், கல்வி, மருத்துவ உரிமை மறுப்பு, பெருகிவரும் நோய்கள், மிகச் சிறிய அளவிலான தீப்பெட்டி போன்ற வீடுகள், குடும்ப உறவுகளில் சிக்கல்கள், மன உளைச்சல் என்று பல்வேறு வகையான சிக்கல்களுக்கு ஆளாகியுள்ளது. ''பட்டினிச் சாவு இல்லை'' என்பதையே தமது ஆட்சிகளின் சாதனைகளாக சொல்லி ‘‘எல்லாம் நன்றாகத்தான் போகின்றது'' என்றத் தோற்றத்தை பிரச்சாரம் செய்கின்றனர். இலவசங்கள், சலுகைகள் என்று கொடுக்கப்படுவதெல்லாம் ஆட்சியாளர்களின் கருணைக் கொடையாக வழங்கப்படுகிறது என்று பிரச்சாரம் செய்கிறார்கள். இவையனைத்தும் அரசின் செலவுக் கணக்காகப் பார்க்கப்படுகிறது. ஆனால், இவையெல்லாம் மக்களுக்கு மறுக்கப்பட்டு சொற்பமான அளவில் கொடுக்கப்படும் உரிமைகளாகும். எப்படியாவது இதையெல்லாம் குறைக்க வேண்டும், மெல்ல மெல்ல நிறுத்த வேண்டும், வர்த்தக சந்தையின் நலனுக்கு இது உகந்ததல்ல என்று உலக வங்கி

நிர்பந்திக்கிறது. தமிழக அரசின் கடன் தொகை 4 லட்சம் கோடியைத் தொட்டுவிட்டது. தமிழக மக்கள் ஒவ்வொருவர் தலையிலும் 62,132 ரூ கடன் ஏற்றப்பட்டுள்ளது. இன்றைய நிலையின் தர்க்கப் பூர்வ வளர்ச்சி ஐரோப்பிய யூனியனில் உள்ள கிரீஸ், ஸ்பெயின் போன்ற நாடுகளில் அமல்படுத்தப்பட்டுவரும் 'மானிய வெட்டை நோக்கிச் செல்வதாக அமையவிருக்கிறது.

இந்தப் பின்னணியில்தான் தமிழகத்திற்கு அரசியல், பொருளாதார, பண்பாட்டு மாற்றென்றால் என்ன என்பதைப் புரிந்துகொண்டு அதை முன்வைத்து மக்களை அணிதிரட்டுவதும் நமது உடனடி கடமையாக இருக்கிறது.

**மாற்றுக்கான அடிப்படை:**

நம்முடைய மாற்று என்பது புதிய சனநாயக மாற்றாகும். அரசியல், பொருளியல், பண்பாட்டுத் தளங்களில் சனநாயகத்தைக் கொண்டுவர வேண்டும். அதே நேரத்தில், மாற்றத்தின் உள்ளடக்கத்தில் பெருமளவில் சோசலிசக் கூறுகள் இருக்கும். துறைகளுக்கு ஏற்ப அரசுடைமை, அரசு-தனியார் கூட்டுடைமை, தனியுடைமை ஆகிய மூன்றும் அனுமதிக்கப்படும். அதே நேரத்தில், பழைய நிலவுடைமை அம்சங்கள், மன்னராட்சிக் கலாச்சாரங்கள் ஒழிக்கப்பட்டு சாதிய நிலவுடைமை உறவுகளால் அழுத்தப்பட்டுக் கிடக்கும் பரந்துபட்ட மக்களின் ஜனநாயக விருப்பங்கள் நிறைவு செய்யப்பட வேண்டும் .

உலக வர்த்தக் மையம், உலக வங்கி மற்றும் ஏகாதிபத்திய நாடுகளுடன் போடப்பட்டுள்ள உலகமய, தாராளமய, தனியார்மய உடன்படிக்கைகள் யாவும் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும்.

**சனநாயக அரசியல்:**

ஒட்டுமொத்த அதிகாரமும் இந்திய அரசிடம் குவிக்கப்பட்டிருப்பதால் ஒரு தேசிய சமூகம் என்ற வகையில் நமது மக்கள் கூட்டுரிமை மறுக்கப்பட்டு இறையாண்மை மீறப்படுகிறது. இன்னொருபுறம் பழைய சாதிய நிலவுடைமை உறவுகள் காரணமாக சாதி ரீதியாகப் பின் தங்கிய மக்கள் பிரிவினர், பெண்கள், மதச் சிறுபான்மையினர் அரசியல் முடிவுகளில் பங்குபெற முடியாத நிலை இருக்கின்றது. இவ்விரண்டு மாற்றியமைக்கப்பட்டு இறையாண்மையுள்ள சுயநிர்ணய உரிமை கொண்ட மக்கள் ஜனநாயக குடியரசு படைக்கப்படும். அதற்கான கோரிக்கைகள் பின்வருமாறு.

1. இன்று மத்திய அரசிடம் அதிகாரம் குவிக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தின் சுயநிர்ணய உரிமை மறுக்கப்படுகிறது. 'சுயாட்சி, அதிகாரப் பகிர்வு, ஓரளவுக்கு அதிகாரம்' என்றெல்லாம் பசப்புவதற்கு மாறாக சுயநிர்ணய உரிமை அடிப்படையில் நாணயம், வெளியுறவு, நதி நீர் பங்கீடு ஆகியவைத் தவிர அனைத்து உரிமைகளும் தமிழக அரசுக்கே உரியதாக இருக்க வேண்டும்.
2. வெளியுறவுக் கொள்கையைப் பொறுத்தவரை குறிப்பிட்ட அண்டை நாட்டுக்கு அருகில் இருக்கும் தேசிய இனத்தின் கலந்தாலோசனையோடு எடுக்கப்படும் வெளியுறவுக் கொள்கைதான் இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கையாக இருக்க வேண்டும்.
3. நாடாளுமன்றத்தில் நிலவிவரும் மக்கள் தொகை அடிப்படையிலான பிரதிநித்துவ முறைக்கு மாறாக எல்லா மாநிலங்களுக்கும் ஒரே எண்ணிக்கையிலான பிரதிநித்துவ முறை ஏற்படுத்த வேண்டும்.
4. தேர்தலில் போட்டியிடுவதில் கூடுதலான வாக்குகளைப் பெற்றவர் வெற்றியடைவார் என்பதே இன்றைய தேர்தல் முறையாகும். இதற்கு மாறாக, கலப்புமுறை விகிதாச்சார பிரதிநிதித்துவ முறை' ஏற்படுத்தப்பட வேண்டும். இதன்மூலம், ஒரு கட்சி தமிழக அளவில் கணிசமான வாக்குகளைப் பெற்றிருந்தாலும் அதற்குரிய இடங்களைச் சட்டமன்றத்தில் பெற முடியாத நிலைமை மாற்றப்பட வேண்டும்.
5. தலித் மக்கள், சிறுபான்மையினர், பழங்குடி மக்கள், மீனவர்கள், பெண்கள் மற்றும் அனைத்துவகை விளிம்புநிலை மக்கள் ஆகியோரின் அரசியல் பிரதி-நிதித்துவம் சட்டமன்றம், மேலவை, உள்ளாட்சி அமைப்புகளில் உறுதி செய்யப்படும் வகையில் சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
6. தமிழகத்தின் அரசு மற்றும் அலுவல் மொழியாக தமிழே இருக்க வேண்டும்.
7. அரசு துறைகளின் வெவ்வேறு மட்டங்களிலும் நடக்கும் வேலைகளைக் கண்காணிப்பதற்கு மக்கள் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்.

**சனநாயகப் பொருளியல்:**

*உலகமய, தாராளமயக் கொள்கையை மட்டுப்படுத்தி வீழ்ந்து கிடக்கும் விவசாயத்தை மீட்பதுவும் சிறு குறு தொழில்களைப் பாதுகாப்பதும் தேசிய சந்தையை ஏகாதிபத்தியத்திடமிருந்து பாதுகாப்பதும் மக்களின் வாழ்க்கையைப் பாதிக்காத வகையிலான கட்டுப்படுத்த முதலாளித்துவ வளர்ச்சியை அனுமதிக்கும் சனநாயகப் பொருளியல் கொள்கை கடைப்பிடிக்க வேண்டும். கனரக தொழில்நிறுவனங்கள், நிதித்துறை அரசுடைமையாகவும் சில பெருந்தொழில்கள் அரசும் தனியாரும் இணைந்த கூட்டுடைமையாகவும் விவசாயத்திலும் சிறுகுறு தொழில்களிலும் தனியுடைமையாகவும் பேணப்படும். இவற்றிற்கிடையே சமனிலைப் பேணப்பட வேண்டும்.*

**வேளாண்மை**

1. *கோயில்கள், மடங்கள், அறக்கட்டளைகள், பெரு முதலாளிகளிடம் இருக்கும் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டு தேசவுடைமையாக்கப்பட வேண்டும்.*
2. *நில உச்சவரம்பு சட்டம் உறுதியாக அமல்படுத்தப்பட்டு நிலமற்ற ஏழை எளிய மக்களுக்கு தலா இரண்டு ஏக்கர் நிலம் வழங்கப்பட வேண்டும்.*
3. *விவசாயிகள் வாங்கியுள்ள வங்கிக் கடன் முழுவதும் ரத்து செய்யப்பட வேண்டும்.*
4. *காவிரிப் படுகை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட்டு. விவசாயத்தை அழிக்கக் கூடிய மீத்தேன் எடுப்புத் திட்டம், ஷேல் கேஸ் திட்டம், கெயில் குழாய்ப் பதிப்புத் திட்டம் ஆகியவை தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.*
5. *சிறு, நடுத்தர விவசாயிகளுக்கு கூட்டுறவு சங்கங்களை உருவாக்கி, அவர்களுக்கு விவசாயம் தொடர்பான அனைத்து உள்கட்டுமான வசதிகளையும் இடுபொருள் உதவிகளையும் அரசே செய்துகொடுக்க வேண்டும்.*
6. *இயற்கை விவசாயம் மற்றும் நவீனத் தொழில்நுட்பம் ஆகியவற்றிலுள்ள நல்ல அம்சங்கள் அனைத்தையும் உள்ளடக்கியதோர் ஒன்றிணைந்த விவசாய உற்பத்திக் கொள்கையை* (Comprehensive Agrarian Production Policy) *கடைபிடிக்க வேண்டும்.*

7. வணிக நோக்கில் ஒரே பயிரை(விஷீஸீஷீரீகூஷீணீஜீ) வளர்ப்பதைத் தடைசெய்து மக்களின் தேவைக்கேற்ப பல்லுயிர் விரிவாக்கத்தைக் கணக்கில்கொண்டு பல்லுயிர் உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும்.

8. தொழிலாளர்களைக் குறைப்பது என்றில்லாமல் மனித உழைப்புச் சுமையைக் குறைப்பதற்கும் ஆபத்தான பணிகளைச் செய்வதற்கும் ஏற்றவகையில் நவீன எந்திரங்களை அறிமுகப்படுத்த வேண்டும்.

9. தேசவுடைமையாக்கப்பட்ட நிலங்களிலும் நடுத்தர விவசா-யிகளின் கூட்டுறவு பண்ணைகளிலும் கால்நடைகள், பறவை-யினங்கள் மற்றும் தேனீ, பட்டுப்பூச்சி போன்ற விவசாயம் சார்ந்த தொழில்களையும் கூட்டுறவுமுறையில் அதிகப்படுத்த வேண்டும்.

10. உணவுப் பொருட்களின் சேகரிப்பு, உலர்த்துதல், சேமித்தல் போன்ற வசதிகளைக் கிராமப்புறங்களில் ஏற்படுத்தித் தர வேண்டும்.

11. விவசாயத்திற்கு தேவையான இடுபொருட்களுக்கு 100% மானியம் வழங்கப்பட வேண்டும்.

12. அதேபோன்று தாங்கள் உற்பத்திசெய்த பொருட்களுக்குத் தாங்களே நியாயமான விலையை நிர்ணயம் செய்வதற்கும் தங்களது உணவுப் பொருட்களைத் தாங்களே விற்பனை செய்வதற்கும் ஏற்ற விற்பனை நிலையங்களையும், வணிக விற்பனைத் தகவல் மையங்களையும் பரவலாக அமைத்துக் கொடுக்க வேண்டும்.

13. நெல் போன்ற உணவுப் பொருட்கள் மட்டுமின்றி அனைத்து அத்தியாவசிய உணவு பொருட்களையும் அரசாங்கமே நியாயமான விலைக்கு கொள்முதல் செய்து மக்களுக்கு மானிய விலையில் வழங்க வேண்டும்.

14. காடுகளின் பரப்பளவை அதிகப்படுத்த வேண்டும். இருக்கின்ற வளங்களை அழிக்கும் முயற்சிகள் முளை-யிலேயே முறியடிக்கப்பட்டு புதியப் பகுதிகளுக்கு வனவளம் அதிகரிக்கப்பட வேண்டும்.

15. அத்தியாவசிய உணவுப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விநியோகத்தில் பன்னாட்டு முதலாளிகளும்

*பெருமுதலாளிகளும் ஈடுபட முடியாதபடி தடை செய்யப்பட வேண்டும்*

16. *மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி மற்றும் பெருமுதலாளிகளின் இலாபம் என்ற நோக்கில் விவசாயம் நடைபெறுவதை ஒழித்துக்கட்டி மக்களின் தேவையை நிறைவு செய்வதை நோக்கமாகக் கொண்ட சுயசார்பு விவசாயத்தை உருவாக்க வேண்டும்.*

17. *சுற்றுச்சூழலில் ஏற்பட்டுவரும் பாரதூரமான தட்பவெட்ப மாற்றங்களுக்கேற்ப நீடித்த விவசாயத்தில் மேற்கொள்ளும் அறிவியல்ரீதியான புதிய முறைகள் உருவாக்கப்பட வேண்டும்.*

18. *மரபணு மாற்றுப் பயிர்களுக்கு தடைவிதிக்க வேண்டும்.*

19. *விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்சக் கூலி நடைமுறைப்படுத்த வேண்டும். ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமான கூலி உறுதி செய்யப்பட வேண்டும்.*

20. *விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும்.*

**தொழில்துறை, வணிகம், நிதி:**

1. *பன்னாட்டு நிதி மூலதனத்தின் ஆதிக்கமும் உழைப்புச் சுரண்டலும் முடிவுக்கு கொண்டுவரப்படும். வெளிநாட்டுக் கடன்களில் இருந்து அரசு விடுவிக்கப்படும். முக்கிய நிதி நிறுவனங்கள் அனைத்தும் அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டும்.*

2. *பன்னாட்டு நிறுவனங்களின் பிடியிலுள்ள தேசிய தொழிலகங்கள் விடுவிக்கப்பட்டு அரசுடைமையாக்கப்பட வேண்டும்.*

3. *வாரத்திற்கு 35 மணி நேர வேலையும் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலியும் உறுதி செய்யப்பட வேண்டும்.*

4. *சிறுகுறு தொழில்களுக்கு முன்னுரிமை, அத்தொழில் புரிவோருக்கான வங்கிக் கடன், தடையற்ற மின்சாரம், உற்பத்தியாகும் பொருட்களுக்கான உள்நாட்டு, வெளிநாட்டு சந்தையைப் பெற்றுத் தருதல் வேண்டும்.*

5. *பெருந் தொழில் புரிவோரிடம் ஒப்பந்தம் போடும்போது*

அதற்கு தேவையான உதிரிப் பொருட்களை உள்ளூர் சிறுகுறு தொழில் நிறுவனங்களிடம் உற்பத்திச் செய்வதற்கான திட்டத்தை உறுதிசெய்தல் வேண்டும்.

6. நெசவுத்தொழில், ஜவுளித் தொழில், பட்டாசு தயாரிப்புத் தொழில் ஆகிய தொழில்களுக்கு மானியத்தை உயர்த்துவது, சந்தையைப் பாதுகாப்பது முதலியவற்றை உறுதி செய்ய வேண்டும்.
7. ஒப்பந்தத் தொழிலாளர் முறையை முற்றாக ஒழித்தல் வேண்டும்.
8. தென்மாவட்டங்களில் தொழில் தொடங்க தொழில்முனைவோர் ஊக்குவிக்கப்பட வேண்டும்.
9. தனியார் துறையில் இட ஒதுக்கீடு வழங்க சட்டமியற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.
10. "தொழிற்சாலைகளுக்காக நிலம் வாங்கும் சட்டம் - 1997" ரத்து செய்யப்படும். நில வங்கியில் இருக்கும் பயன்படுத்தப்படாத நிலங்கள் அனைத்தும் நிலச் சீர்த்திருத்தத்தின் பகுதியாகப் பகிர்ந்தளிப்பட வேண்டும்.
11. அத்தியாவசியப் பொருட்களின் வணிக உரிமை அரசிடம் இருக்க வேண்டும். விலைவாசி உயர்வு, பண வீக்கம் ஆகியவற்றை அரசு கட்டுபடுத்த வேண்டும்.
12. பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாருக்கு தாரைவார்க்கும் தனியார்மயப் போக்கு நிறுத்தப்பட வேண்டும்.

**சனநாயகப் பண்பாடு:**

ஒவ்வொரு மனிதரையும் அரசியல் பண்பாட்டுத் தளத்தில் சமதையானவராக ஆக்குவதுதான் சனநாயகத்தின் முதல்படியாகும். சாதி, மதச் சிறைக்குள் சிக்குண்டிருக்கும் நமது சமூகத்தில் ஒரு தனிமனிதனின் உணவு, உடை, திருமணத்தேர்வு,வழிபாட்டுரிமை என்று வாழ்வின் அத்தனை விவகாரங்களிலும் சாதி,மதப் பண்பாடு தடையாய் நிற்கின்றது. எனவே, மனிதனை மனிதன் சமமாய் மதிக்காத சாதியப் பண்பாட்டிக்கு மாற்றாக சனநாயகப் பண்பாடு போற்றப்படும். இன்னொருபுறம் புதிய தாராளவாதப் பொருளாதாரக் கொள்கை நுகர்விய, தனிநபரியப் பண்பாட்டைத் திணிக்கிறது. ஏழை எளிய மக்கள் முதலாளித்துவ உற்பத்தி உறவுக்குள் அடியெடுத்து வைத்தாலும் தனிநபரியப் பண்பாட்டுக்கு உட்பட

இயலாததால் பாதுகாப்பு வேண்டி சாதிக் குழு பண்பாட்டிற்குள் தஞ்சம் புகுகிறார்கள். சாதிக் குழு பண்பாட்டிற்கு மாறாக மாணவர், இளைஞர், தொழிலாளர் மன்றங்கள் வழியாக கூட்டு வாழ்க்கைக்கான பரிசோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1. தமிழ்ப் பண்பாட்டில் இருக்கும் முற்போக்கான காலப் பொருத்தமுள்ள கூறுகள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்.
2. நிலவுடைமைப் பண்பாட்டிற்கும் ஏகாதிபத்தியப் பண்பாட்டிற்கும் எதிராக மக்கள் பண்பாடு உயிர்த்து இருப்பதற்கு மக்கள் நடத்தும் போராட்டத்திற்கு அரசு துணை நிற்க வேண்டும்.
3. கலை, இலக்கியம், சினிமா, ஊடகம் போன்றவற்றின் மூலம் மனிதநேயம், மனித உரிமை, சாதிமறுப்பு, மத நல்லிணக்கம், தேசப் பற்று, சர்வதேசியம் தொடர்பான விழுமியங்கள் மக்களிடம் பரப்பப்பட வேண்டும்.
4. இன்றிருப்பதற்கு மாறாக படைப்புத்துறையில் இருக்கும் அரசு தலையீடு நிறுத்தப்படும். மிக வெளிப்படையான சாதி, மத, இன மோதல்கள் மற்றும் பாலின சமத்துவ மறுப்பு, சமத்துவ விரோதக் கருத்துகளுக்கு இடமளிப்பது மட்டும் கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டும்.
5. மக்கள் மனதின் அடி ஆழம் வரை ஊடுருவிச் செல்கின்ற தமிழ் சினிமா உலகம் மேலும் மேலும் யதார்த்தப்படுவதற்கு முயற்சிகளும் கல்வியும் கொடுக்கப்பட வேண்டும்.
6. நாட்டுப்புறக் கலைகள் ஊக்குவிக்கப்படுவதோடு அவை பாதுகாக்கப்படுவதற்கு சந்தை வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்பட வேண்டும்.
7. பரப்புரைகளை அனைத்துவகை ஊடகங்கள், அரசு இயந்திரம், கல்வித்துறை வழியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.
8. பெண்களைப் பண்டப் பொருளாக மாற்றிவிட்ட ஏகாதிபத்திய நுகர்வு கலாச்சாரத்திற்கு எதிரானப் போரில் அரசு மக்களுக்கு துணை நிற்க வேண்டும்
9. திருநங்கைகள், மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட அனைத்துவகைப்பட்ட விளிம்புநிலை மக்களையும் சமத்துவத்துடன் நடத்தும் சமூக விழுமியங்கள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

**மக்கள் நல அரசு:**

*1911 இல் சீன தேசத்தைக் கட்டியமைக்கும் போராட்டத்திற்கு தலைமை தாங்கிய சீனாவின் தந்தை சன் யாட் சென், "சுதந்திரம், சனநாயகம் மற்றும் வாழ்வாதாரம்" ஆகிய மூன்று கோரிக்கைகளை முன்வைத்தார். இன்றைக்கு நூறாண்டுகள் கடந்த நிலையில், குறைந்தபட்சம் வாழ்வாதாரத்தோடு, கல்வி, மருத்துவம் ஆகிய மூன்றையும் அடிப்படை உரிமையென நடைமுறைப்படுத்த வேண்டும். கல்வியிலும் மருத்துவத்திலும் அரசின் சேவை உயர்தரமானதாக இருப்பது உறுதிசெய்யப்படும். படிப்படியாய் இத்துறைகளில் தனியார்மயம் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும்.*

**கல்வி, மருத்துவம், வாழ்வாதாரம்:**

1. *எல்லோருக்கும் தரமான, கட்டாய, சமச்சீர், அருகமைக் கல்வி வழங்குவது உறுதி செய்யப்பட வேண்டும்.*
2. *ஆரம்பக் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி வரை தாய்மொழி வழியில் கற்பதற்கு வழிவகை செய்யப்பட வேண்டும்.*
3. *படிப்படியாகப் பள்ளிக் கல்வியில் தனியார்மயத்திற்கு முடிவு கட்டும் வகையில் அரசு பள்ளிகளின் உள்கட்டமைப்பு, ஆசிரியர் எண்ணிக்கை ஆகியவை சரி செய்யப்பட்டு மக்களே விரும்பி அரசுப் பள்ளிகளுக்கு வருவது உறுதி செய்யப்பட வேண்டும்.*
4. *சமூக நீதி, சாதி மறுப்பு, மத நல்லிணக்கம், பொது நலன், மனித நேயம், சுரண்டல் எதிர்ப்பு, பாலின சமத்துவம், மானுட சமத்துவம் ஆகிய விழுமியங்கள் பள்ளிக் கல்வியின் பகுதியாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.*
5. *அரசுப் பள்ளிகளின் தரத்தை உறுதி செய்வதற்கும் கண்காணிப்பதற்கும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், முன்னாள் மாணவர்கள், கல்வியாளர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், மருத்துவர்கள், சமூக ஆர்வலர்கள் அடங்கியக் மக்கள் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்.*
6. *அரசு பள்ளி ஆசிரியர்கள், மாவட்ட நிர்வாகம், உள்ளாட்சி துறை, மக்கள் கண்காணிப்புக் குழுக்கள் ஆகிய நான்கு தரப்பும் இணைந்து அரசுப் பள்ளிகளின் தரம் பற்றி மக்களுக்கு இருக்கும் தப்பெண்ணத்தைப் போக்கி மாணவர்களை அரசுப் பள்ளியை நோக்கி கொண்டுவர வேண்டும்.*

7. பாடத்திட்டங்கள் அறிவியல் தன்மை, சனநாயகத் தன்மை, தேசியத் தன்மை கொண்டதாக வகுக்கப்படும். காலப் பொருத்தமுடைய பண்பாட்டு விழுமியங்கள் பள்ளிக்கல்வி வாயிலாகவும் கற்பிக்கப்பட வேண்டும்.

8. தொழிற்கல்வியைப் பொருத்தவரை சந்தையின் தேவை பற்றிய துல்லியமான மதிப்பீடு செய்யப்பட்டு தேவை-வழங்கல் விகிதத்தை முறைசெய்து படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பதும் படித்தப் படிப்புக்கு வேலை கிடைக்காமல் இருப்பதுமான நிலைமைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

9. மருத்துவம், பொறியியல், ஆராய்ச்சிக் கல்வி தொடங்கி அனைத்துவகையான நவீனக் கல்விவரை தாய்மொழியில் கற்கும் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டு தாய்மொழியில் பயில்வதன் அறிவியல்தன்மை அனைத்துவகையிலான ஊடகங்கள் மற்றும் ஆசிரியர்கள் வாயிலாக மக்களுக்கு எடுத்துச் செல்லப்படும். ஆங்கில மொழி திணிப்புக்கு எதிரான பரப்புரையை அரசே இறங்கி மேற்கொள்ள வேண்டும்.

10. மாவட்டந் தோறும் அரசுப் பல்கலைக் கழகங்கள் உருவாக்கப்படும். அரசு மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை உயர்த்தப்பட வேண்டும்.

11. தொடக்கக் கல்வி, உயர் கல்வி தொடங்கி அனைத்து மட்டங்களிலும் அரசு நிறுவனங்களில் உள்ள ஆசிரியர், விரிவுரையாளர், பேராசிரியர் உள்ளிட்ட பல்வேறு பணிகளின் காலியிடங்கள் நிரப்பப் படும். ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரம் பேணப்பட வேண்டும்.

12. தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் அரசு அரசு நிர்ண-யித்த ஊதியம் தரப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும். பட்டப் படிப்பு சான்றிதழ் மற்றும் மதிப்பெண் சான்றிதழைப் பெற்றுக் கொண்டு வேலைக்கு அமர்த்தும் 'கொத்தடிமை முறை' முற்றாக ஒழித்துக் கட்டப்பட வேண்டும். தனியார் நிறுவனங்களில் கணக்கு வழக்கின்றி பல மணி நேர, சனி ஞாயிறுகளில் வேலை செய்தல் போன்ற வேலை நேர உரிமையை அத்துமீறும் நிர்பந்தங்கள் கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும்.

13. தலித் மக்கள், பழங்குடி மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்

மற்றும் சிறுகுறு பின் தங்கிய இடைநிலை சாதிகள், இஸ்லாமியர்கள் உள்ளிட்ட மதச் சிறுபான்மையினர், மீனவர்கள், பெண்கள் ஆகியோர் படிப்பைப் பாதியில் நிறுத்துவது, பன்னிரண்டாம் வகுப்போடு படிப்பை நிறுத்தி கொள்ளுவது போன்றவைக் கண்காணிக்கப்பட்டு தடுத்து நிறுத்தப்பட வேண்டும். உயர் கல்வி, இளங்கலை மற்றும் முதுகலை பட்டப் படிப்பு, சட்டம், பொறியியல், மருத்துவம் போன்ற தொழிற் படிப்புகள், ஆராய்ச்சிக் கல்வி போன்ற அதியுயர் படிப்புகள் படிக்க வேண்டும் என்று மேலே உள்ள பிரிவினரிடம் உள்ள வேட்கைகளை நிறைவேற்ற அரசு உணர்வுபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

14. பல்கலைக்கழக துணை வேந்தர், பேராசிரியர் பணியிடங்களை நிரப்புவது ஊழலுக்கு வழியின்றி நடைபெறுவதற்கு சட்டமியற்றப்பட வேண்டும்.

15. நகர்ப்புற மாணவர்களுக்கு கிடைக்கக் கூடிய அனைத்து வகையான வாய்ப்புகளும் கிராமப்புற மாணவர்களுக்கு ஏற்படுத்தித் தருவதுடன் கிராமப்புறங்களில் இருந்து வரும் மாணவர்களுக்கு 25% இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும்.

16. விளையாட்டுத் துறையில் கிரிக்கெட் மட்டுமின்றி கபடி, கால் பந்து, பூப் பந்து, கூடைப் பந்து, நீளம் தாண்டுதல், ஓட்டப் பந்தயம், அகலம் தாண்டுதல், ஈட்டி எரிதல், குண்டு எரிதல், நீச்சல், மல்யுத்தம் போன்ற விளையாட்டுகளில் பயிற்சி ஏற்படுத்துவதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுத்து சர்வதேச தரத்திலான விளையாட்டு வீரர்கள் உருவாக்கப்பட வேண்டும். அனைத்து சமுதாயப் பிரிவினருக்கும் ஊக்கமளித்து இன்று விளையாட்டு துறையில் நிலவும் சாதியடிப்படையிலான ஏற்றத் தாழ்வுகள் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்.

17. ஒரு குழந்தை பிறந்து, வளர்ந்து முழு வாழ்வை வாழ்ந்து முதுமையடைந்து அது இறக்கும் வரையிலான உடல் ஆரோக்கியத்திற்கும் நோயற்ற வாழ்வுக்கும் நோய் வந்தால் குணப்படுத்துவதற்கும் அரசுப் பொறுப்பேற்க வேண்டும்.

18. மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட வேண்டும். மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்த மருத்துவமனைகள் பன்னோக்கு தரத்திற்கு உயர்த்தப்பட

வேண்டும். இப்போது மருத்துவக் கல்லூரியுடன் இணைந்து தொடங்கப்படும் மருத்துவமனை முழுச் செயல்பாட்டுக்கு சுமார் 20 ஆண்டுகள் ஆகின்றன. இந்த கால அளவைக் குறைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

19. இதற்கேற்ப அரசு மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட வேண்டும்.

20. குழந்தைகள் மற்றும் 60 வயதைக் கடந்த முதியவர்களுக்காக மருத்துவ உதவிகள் வேண்டுகோள் விடுக்கப்பட்டால் வீட்டுக்கே சென்று வழங்கப்பட வேண்டும்.

21. ஒருபுறம் ஆங்கில மருத்துவமும் மறுபுறம் சித்தா, ஆயுர்வேதா, அக்குபஞ்சர், ஹோமியாபதி, யுனானி, மூலிகை மருத்துவம் என பல மருத்துவ முறைகள் பயன்பாட்டில் உள்ளன. ஒருபுறம் மருத்துவ உலகமே பன்னாட்டு மருத்துவ கம்பெனிகளின் கையில் இருக்கிறது. இன்னொருபுறம் மாற்று மருத்துவ முறைகளின் அறிவியில்பூர்வ தன்மைப் பற்றியும் எதுவும் உறுதி செய்யப்படாமல் இருக்கிறது. அனைத்து மருத்துவ முறைகளிலும் இருக்கும் சிறப்பு அம்சங்களை எடுத்துக் கொண்டு ஒரு கலப்பு மருத்துவ முறையை உருவாக்க வேண்டும். எனவே, 10 ஆண்டுகள் கால அவகாசத்தில் கலப்பு மருத்துவ முறை உருவாக்கப்படும். அடுத்த 3 ஆண்டுகளில் அதற்கான பாடத் திட்டம் உருவாக்கப்பட்டு அது கற்பிக்கப்பட வேண்டும்.

22. அரசு மருத்துவமனைகளின் தரத்தை உயர்த்துவதன் தனியார் மருத்துவமனைகள் படிப்படியாக மூடும் நிலைக்கு கொண்டு செல்லப்படும்.

**சமூக பிரிவினருக்கான சனநாயக கோரிக்கைகள்:**

சனநாயகம் என்பது வெறும் தலையெண்ணும் புள்ளி விவரம் அல்ல. ஒரு மனிதருக்கு ஒரு வாக்கு என்பது அரசியல் ஜனநாயகமே அன்றி அது சமூக ஜனநாயகம் அல்ல. தெற்காசிய மக்களிடையே சாதி, மதம், பாலினம், சமவெளிக்கு வெளியே கடலோரங்கள் மற்றும் மலைகளில் வாழ்வோர், தெற்கு வடக்கு பிரதேசங்கள், பல்வேறு விளிம்பு நிலை மக்கள் என நிலவும் பல்வேறு முரண்பாடுகள் ஏற்றத் தாழ்வுக்கு அடிப்படையாக அமைந்துள்ளன. எனவே, இவை ஒவ்வொன்றையும் கணக்கில் எடுத்து அச்சமூகப்

*பிரிவினரது அரசியல், பொருளாதார, பண்பாட்டு உரிமைகள் உறுதி செய்யப்படுவதோடு பேணிப் பாதுகாக்கப்படும். ஒரு சில சமூகக் குழுக்கள் தொடர்பான கோரிக்கைகள் பின்வருமாறு.*

**தலித் மக்கள் மற்றும் பழங்குடிகள்:**

1. *பஞ்சமி நிலங்கள் மீட்கப்பட்டு தலித் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.*
2. *கிராமப்புறங்களில் வாழும் நிலமற்ற தலித் மக்களுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்கப்பட வேண்டும்.*
3. *தலித் மக்களுக்கு மறுக்கப்பட்டு வரும் பொது சுடுகாடு, பொது கிணறு, கோயில் நுழைவு, தேர் இழுத்தல், ஊர்த் திருவிழா பங்கேற்பு உள்ளிட்ட அனைத்துவகையான தீண்டாமை கொடுமைகள் யாவும் ஒழிக்கப்பட்டு தலித் மக்களின் சனநாயக மற்றும் பண்பாட்டு உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும்.*
4. *வன்கொடுமை தடுப்புச் சட்டம் வலுப்படுத்தப்பட்டு கறாராக அமல்படுத்தப்பட வேண்டும்.*
5. *சாதி ஆணவக் கொலைகள் தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டு அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.*
6. *பள்ளிக் கல்வி, உயர் கல்வி, வேலை வாய்ப்பு, தொழில் தொடங்குதல் தொடர்பாக தலித் மக்களுக்கு இருக்கும் வரலாற்று விருப்பங்கள் யாவும் நிறைவு செய்யப்பட வேண்டும்.*
7. *தலித் மக்களுக்கு என்று ஒதுக்கப்படும் சிறப்பு உட்கூறு நிதி வேறு திட்டங்களுக்கு மாற்றப்படாமல் தடுப்பதற்கு உரிய பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட வேண்டும்.*
8. *தலித் மற்றும் பழங்குடி இன மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை குறித்த அரசாணை எண்: 92 முறையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.*
9. *ரங்கராஜன் கமிசனின் பரிந்துரைப்படி பழங்குடி மக்களுக்கு தலா 5 ஏக்கர் நிலம் வழங்கப்பட வேண்டும்.*
10. *தங்கராஜ் அறிக்கை(1990) பரிந்துரைபடி சிதறி வாழும் இருளர் பழங்குடி மக்களுக்கு 5 ஏக்கர் நிலம் வழங்கப்பட வேண்டும்.*
11. *பழங்குடிகள் ஒழுங்குமுறைச் சட்டம் வனப்பாதுகாப்பு*

சட்டம் போன்ற சட்டங்களின் மூலம் பழங்குடிகள் தங்கள் வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

**மீனவர்கள்:**

1. ஆழ் கடல் மீன்பிடிப்புக்கு தேவையான தொழில்நுட்பக் கருவிகள் வழங்கப்பட்டு அது ஊக்குவிக்கப்பட வேண்டும்.
2. மீனவர்கள் கடல்சார் பழங்குடிகளாக அறிவிக்கப்பட்டு அவர்களுக்கு உரிய இட ஒதுக்கீடு உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.
3. நமது கடல் வளத்தையும் வாழ்வாதாரத்தையும் பாதிக்கக் கூடிய பன்னாட்டு முதலாளிகளுக்கான திட்டங்கள் தடுக்கப்பட வேண்டும்.
4. இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்ட கச்ச தீவு மீட்கப்பட வேண்டும்.
5. இலங்கை கடற்படையின் அச்சுறுத்தலில் இருந்து தற்காத்துக் கொள்ள மீனவரகளுக்கு ஆயுதப் பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கப்பட வேண்டும்.
6. மீனவர்களுக்கான ஒய்வூதியம் வழங்கப்பட வேண்டும்

**பெண்கள்:**

1. அரசு துறைகள், ஆட்சிமன்றங்கள் மற்றும் நிர்வாகம் அனைத்திலும் பெண்களுக்கு 50% இட ஒதுக்கீடு வழங்கப்படும். அமைச்சரவையிலும் சரி பாதி பெண்கள் அங்கம் வகிப்பது உறுதி செய்யப்பட வேண்டும்.
2. பெண்கள் மீதான வன்கொடுமைகளை விசாரித்து தீர்ப்பு வழங்குவதற்கு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டும்.
3. வன்கொடுமைகள் தடுப்பு, பெண்ணுரிமை, பாதுகாப்பு தொடர்பாக நீதித் துறை, காவல் துறை உள்ளிட்ட அனைத்து அரசு துறைகளுக்கும் விழிப்புணர்வு வகுப்புகள் எடுக்கப்பட வேண்டும்.
4. தனியார் துறைகளிலும் ஆண்டுக்கு ஒருமுறை இவ்வகுப்புகள் எடுக்கப்படுவது கட்டாயமாக்கப்பட வேண்டும்.
5. பெண்கள் மீதான வன்முறைகளைத் தூண்டும் திரைப்படங்கள்,

*ஊடக விளம்பரங்கள் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.*

6. *அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் உயர் பொறுப்புகளுக்கு பெண்கள் வருவதை உறுதி செய்யக் கூடிய சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.*
7. *உயர் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, ஆராய்ச்சிக் கல்வி அனைத்துவகையான கல்வி விருப்பங்களையும் நிறைவு செய்ய அரசு முழு முயற்சி மேற்கொள்ளும்*
8. *பெண்களுக்கு மகப்பேறு விடுப்பு ஓராண்டு வழங்கப்பட்ட வேண்டும். மேலும் அடுத்த ஓராண்டிற்கு போதிய விடுமுறைகள், குறைந்த வேலை நேரம் ஆகியவற்றிற்கு சட்டமியற்றப்பட வேண்டும்.*
9. *பெண்கள் படிப்பிலிருந்தும் வேலையிலிருந்தும் பாதியில் நிறுத்தப்படும் சமூக நிலைகளையும் கருத்துகளையும் மாற்றுவதற்கு தீவிரமானப் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.*

**மதச் சிறுபான்மையினர்:**

1. *சிறுபான்மையினர் கல்வி, வேலைவாய்ப்புத் தொடர்பான சச்சார் மற்றும் ரங்கநாத் மிஸ்ரா குழு அளித்த பரிந்துரைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.*
2. *மதம் மாறிய தலித் மக்களுக்கும் இட ஒதுக்கீடு உரிமைகள் வழங்க வழி வகுக்கும் சட்டத்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.*
3. *இஸ்லாமிய மக்கள் தொடர்பாக சர்வதேச அளவில் உருவாக்கப்பட்டிருக்கும் தவறான கருத்துகளைக் களைவதற்கு அரசு பரப்புரை மேற்கொள்ள வேண்டும்.*
4. *நீண்ட காலமாக சிறையில் வாடும் இஸ்லாமிய சிறைவாசிகள் விடுதலை செய்யப்பட வேண்டும். மேலும் கடந்த காலங்களில் பொய்யானக் குற்றச்சாட்டுகளில் சிறை சென்றவர்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பான ஓர் ஆணையம் அமைத்து அதன் பரிந்துரைகள் அமல்படுத்தப்பட வேண்டும்.*

**வெளியுறவுக் கொள்கை**

*தேசிய யுகத்திற்குள் மனிதன் காலடி எடுத்து வைத்த கடந்த 500 ஆண்டுகளாக ஓர் அரசுக்கு தன் வெளியுறவுக் கொள்கையை*

*வகுப்பது இன்றியமையாதது ஆகிவிட்டது. அது அந்நாட்டின் வாழ்வையும் வரலாறையும் தீர்மானிப்பதில் முக்கியப் பங்காற்றி வருகின்றது. அவ்வகையில் வெளியுறவுக் கொள்கை தொடர்பான நமது கண்ணோட்டம் இது.*

1. *சர்வதேச அளவிலான இடதுசாரி நாடுகள், இடதுசாரி இயக்கங்களுடன் நட்புறவு பேணப்பட வேண்டும்.*
2. *ஏகாதிபத்தியத்தால் வெகுவாக பாதிக்கப்பட்ட மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் உள்ள ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசுகள் மற்றும் மக்கள் இயக்கங்களுடன் நல்லுறவைப் பேண முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.*
3. *உலகெங்கும் உள்ள தமிழர்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய தமிழர் வலைப்பின்னல் ஒன்று உருவாக்கப்பட்டு அவ்வமைப்பு தமிழர்களின் உரிமைக்காகவும் பாதுகாப்புக்காகவும் சர்வதேச அரங்கில் குரல் எழுப்ப வேண்டும்.*